காலநிலை
மேகமூட்டம்/ மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

32

யாழ். - 20/=
வன்னி - 20/=


# உதயன்

சுடர்: 29 கதிர்: 344 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 19, புதன் 05.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

மரம் நடுவோம்

# சாட்சிகளைத் தடுப்பது அடிப்படை உரிமை மீறல்



## நிலையான தீர்வொன்றைச் சிந்திக்குமாறு அரசுக்குச் சம்பந்தன் அறிவுரை

கொழும்பு, நவம்பர் 5
பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நீண்டகால – நிலையான தீர்வொன்று தொடர்பில் அரசு மீளச் சிந்திக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்தினார். அத்துடன், ஐ.நா. விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்க விரும்புவோரைத் தடுப்பது என்பது அடிப்படை உரிமை மீறலாகும் என்றும், நீதிக்கான உரிமையையும் அப்பட்டமாக மீறும் செயலாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மீதான வரவு – செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தமிழ் மக்களுக்கு கௌரவமானதொரு அரசியல் தீர்வு அவசியம் என்றும் – கோரிக்கை விடுத்தார்.
"ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் மூன்று தீர்மானங்கள்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## ஒய்வெடுத்த மூதாட்டி மயங்கி வீழ்ந்து சாவு



யாழ்ப்பாணம், நவ.5
யாழ். பஸ் நிலையத்திலுள்ள சிற்றுண்டிச் சாலையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மூதாட்டி திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார். இளவாலை பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த அருளப்பு செபரட்ணம் (வயது-65) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
நேற்றுப் பிற்பகல் பஸ் நிலையத்துக்கு அருகாக உள்ள சிற்றுண்டிச் சாலை ஒன்றுக்குச் சென்ற அவர் அங்கிருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்திருந்தார். பின்னர் திடீரென மயங்கி விழுந்துவிட்டார். அவரருகே சென்று பார்த்தபோது மூச்சு, துடிப்பு

❖22 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசருடைய வருகை திட்டமிட்டவாறு நடக்கும்

### திருமலை ஆயர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.05
பாப்பரசரின் இலங்கைப் பயணம் திட்டமிட்டபடி ஜனவரி மாதம் 13ஆம் திகதி நடைபெறும். ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு அதற்கு ஒரு தடையாக அமையாது –இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் திருகோணமலை ஆயர் வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை.
வத்திக்கானில் இருந்து பாப்பரசரின் பயணம் தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை வந்துள்ள குழுவினருக்கும், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான அரச குழுவினருக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றிருந்தது. அது குறித்தும், பாப்பரசரின் பயணம் குறித்தும் வினாவியபோதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"எதிர்வரும் ஜனவரி மாதத்

❖22 ஆம் பக்கம் பார்க்க

## சொந்தக் காணி, வீடு கிடைக்க அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் மலையக மக்கள் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், நவ.5
எமக்குச் சொந்தமான காணிகளைப் பெற்றுத் தருவதற்கும், வீடுகளைக் கட்டித் தருவதற்கும் அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் மலையக

❖22 ஆம் பக்கம் பார்க்க



சீக்கியப் படுகொலைகளின் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று சீக்கியர்கள், காஷ்மீரியர்கள், நாகர்கள், தமிழர்கள் இணைந்து பேரணி ஒன்றை நடத்தினர். அதில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் இறுதிப்போரில் இடம்பெற்ற காட்சிகள் கொண்ட பதாகைகளும் ஏந்தப்பட்டிருந்தன. (ற)

## அமைச்சர் சந்தித்த என் கணவரை இப்போது இல்லை என்கின்றனர்

### அவர் எங்கே உள்ளார் என்று ஆணைக்குழுவிடம் மனைவி கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 5
"மனித உரிமைகள் அமைச்சராக இருந்த மகிந்த சமரசிங்க, வவுனியா தடுப்பு முகாமில் சென்று பார்க்கும் போது இருந்த எனது கணவரை இப்போது இல்லை என்று சொல்கின்றனர். எனது கணவர் எங்கே?"– இவ்வாறு ஆணைக்குழு முன்பாக இளம் தாயொருவர் நேற்றுக் கேள்வியெழுப்பினார்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவில் இடம்பெற்ற காணாமற்போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## கொத்துக் குண்டாலேயே மகன் காயங்களுற்றான்

### அவை இன்னமும் மாறவில்லை என்று தாய் சாட்சியத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5
"விமானத்திலிருந்து போட்ட கொத்துக் குண்டால்தான் எனது மகன் காயங்களுக்குள்ளானான். இன்று வரையில் அந்தக் காயம் மாறாமலேயே இருக்கின்றது. அது கொத்துக் குண்டுதான் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்"– இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழுவிடம் நேற்று 61 பேர் சாட்சியமளித்தனர்

யாழ்ப்பாணம், நவ. 5
வட்டுவாகல் மற்றும் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடிகளில் நேரடியாக எமது பிள்ளைகளைக் கையளித்தோம். இன்று வரையில் அவர்கள் வீடு திரும்பவில்லை என்று 6 பேர் நேற்றுச் சாட்சியமளித்தனர். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டாய ஆள்சேர்ப்பில் கொண்டு செல்லப்பட்டே தமது பிள்ளைகள் காணாமற் போயினர் என்று அதிகமானோர் நேற்றுத் தெரிவித்தனர்.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு முல்லைத்தீவில் நேற்று மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது.

❖22 ஆம் பக்கம் பார்க்க

"குடி மக்கள் செய்யக் கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக் கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்" - வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# அரசின் ஆலோசனைப்படியே புலிகளின் தடை நீக்கப்பட்டது

## ஐ.தே.க. உறுப்பினர் சுஜீவ சேனசிங்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.5

அரசின் ஆலோசனைக்கு அமையவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குமாறு ஐரோப்பிய நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் ஆலோசனைக்கு அமைய அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இத்தாலியில் உள்ள சிரேஷ்ட விடுதலைப் புலி உறுப்பினரும், குமரன் பத்மநாதனின் நண்பருமான ஒருவரிடம் வழக்குத் தாக்கல் செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நாட்டின் முக்கியமான அமைச்சர் ஒருவரே, இத்தாலியிலிருந்து இலங்கை வந்த புலி உறுப்பினருக்கு இந்தத் தகவலை பரிமாறி யுள்ளார்.

ஐரோப்பிய நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து தடையை எப்படியாவது நீக்கினால் அந்த சொத்துக்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே அரசின் திட்டமாகும். அரசின் தேவைக்காகவே- இவ்வாறு புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட்டது. இப்போது மக்கள் தீர்மானிக்க வேண்டும் யார் தேசத்துரோகிகள் யார்? தேசப்பற்றார்கள் என்பதை.

இதன் காரணமாகவே அரசு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றில் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவது குறித்த வழக்கு விசாரணைகளின் போது இலங்கைப் பிரதிநிதிகள் எவரையும் அனுப்பி வைக்கவில்லை. "- என்று அவர் தெரிவித் துள்ளார். (ற)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த கொரிய நாட்டுத் தூதுவர் சாங்வோன்சாம், சுன்னாகம் மருதனார்மடத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டார். ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நிகழ்சி நிரலுக்கு அமைவாக சபாபதிப்பிள்ளை முகாம் மற்றும் கண்ணகி முகாம்கள் அமைந்துள்ள பாதையால் உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் கிராம அலுவலர் அழைத்து செல்ல, அந்தப் பாதையில் உள்ள வீடுகளையே தூதுவர் பார்வையிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-86,101)

**விபத்து**

### குறுக்கே வந்த சைக்கிளால் கணவன், மனைவி காயம்

வீதியின் குறுக்கே சென்ற சைக்கிளுடன் மோதாமல் இருக்க சடுதியாக மோட்டார் சைக்கிளை நிறுத்தியதால், அதில் பயணித்த கணவனும் மனைவியும் தூக்கி வீசப்பட்டு காயம டைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் ஏ-9 வீதியில் நடந்துள்ளது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பெண் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கொடி காமம் பெரிய நாவலடியைச் சேர்ந்த நடராசா செல்வரத்தினம்(வயது-45) அவரது மனை வியான செல்வரத்தினம் வசந்தாதேவி (வயது-44)ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (ற-9)

### எமது தனித்துவங்களை இழக்க மாட்டோம்

#### பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவிப்பு

யாழ்பாணம், நவ.5

இலங்கையில் ஐந்நூறு ஆண்டுகளாக அந்நியர் ஆட்சிக் காலத்தில் நாம் வாழ்ந்த போதிலும் எமது மதம், மொழி, இனம் ஆகிய தனித்துவங்கள் அழிந்து விடவில்லை. அவற்றை நாம் இழந்துவிடவில்லை. இனியும் எமதுதனித்துவங்கள்அழியவோ அல்லது அவற்றை நாம் இழக்கவோபோவதில்லை-இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன்.

நேற்று யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் கொழும்பு சிவத்திருமன்றத்தின் செயலாளர் செ.சொர்ணலிங்கத்தால் இந்து மதத்தையும் இசையையும் பிரதானமாக வைத்து ஏழிசையாய் இசைப் பயனாய் எனும் கருப்பொருளில் நூல் வெளியீடும், சிவத்திரு மன்ற இசைக்குழுவால் அதே கருப்பொருளில் இறுவட்டு வெளியீடும் நடைபெற்றது.

அதில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்த அவசர உலகில் எமது மதத்தைப்பற்றி சிந்திக்கவே நாம் மறந்து விடுகிறோம். ஆனால் எமது பாரம்பரிய இசைபற்றியும் அந்த இசையின் அடித்தளமான மதம் பற்றியும் ஆய்வு செய்த கொழும்பு சிவத் திரு மன்றத்தின் செயலாளர் செ.சொர்ணலிங்கம் அவர் களின் முயற்சி பாராட்டப்பட வேண்டியது-என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற-ரி)

### கொஸ்லந்த மக்களுக்கு பாக். உதவிப் பொருள்கள்

கொழும்பு, நவ.5

கொஸ்லாந்த மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் பாகிஸ்தானின் முதல் கொள் கலவிமானம்நேற்றுகட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

பாகிஸ்தானில் இருந்து 100 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின் றது. (ற)

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது இராணுவமே தாக்குதலை நடத்தியது

## ஆணைக்குழுவினர் துருவித் துருவிக் கேட்டபோதும் அழுத்தம் திருத்தமாக பதிலளித்தார் தாய் ஒருவர்

யாழ்ப்பாணம், நவ. 5

இராணுவத்தினரே புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது ஷெல் தாக்குதல் நடத்தினர். அதன் போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பொது மக்கள் பலர் உயிரிழந்தனர் என்று தாயார் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்தார்.

ஆணைக்குழுவினர் பல்வேறு விதமான குறுக்கு கேள்விகளைத் தொடுத்த போதும் அவர் தெளிவாக சாட்சியமளித்தார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

கற்சிலைமடுவைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை இராசமணி என்பவர் தனது மகன் மற்றும் மகள் ஆகியோரைக் காணவில்லை என்று ஆணைக்குழு முன்பாகத் தெரிவித்திருந்தார். அவரிடம் ஆணைக்குழுவினர் மேலதிக விசாரணை மேற்கொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாங்கள் இடம்பெயர்ந்து புதுக் குடியிருப்பில் இருந்தோம். அதன் போது ஷெல் தாக்குதலில் எனது மகன் காயமடைந்தார். அவனை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்பித்தோம். 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அந்த வைத்தியாசாலை மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் எனது மகன் உயிர் தப்பியிருந்தார். ஆனால் வைத்தியசாலையில் இருந்த நோயாளிகள் பலர் கொல்லப்பட்டனர்.

தப்பியஎனது மகனை வைத்தியசாலையின் அம்புலன்ஸில் மாத்தளனுக்கு ஏற்றிச் சென்றனர். அங்கிருந்து கப்பலில் ஏற்றி அனுப்பினர். அதன் பின்னர் எனதுமகனைக்காணவில்லை. இன்று வரையில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது" என்று குறிப்பிட்டார்.

அப்போது ஆணைக்குழுவினர், "புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை யார் நடத்தினார்கள்?" என்று கேள்வியெழுப்பினர். அதற்கு அவர், "அரசு நடத்தியது" என்று குறிப்பிட்டார்.

"அது யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது?" என்று ஆணைக் குழுவினர் மீளவும் கேட்டனர்.

"அது அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது" என்று மீளவும் தெரிவித்தார்.

"அந்த வைத்தியசாலை இருந்த பகுதி யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது?" என்று ஆணைக் குழுவினர் திரும்பவும் கேட்டனர். அதற்கு "அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம். ஆனால் வைத்தியசாலை அரசினுடையது"-என்று அவர் பதிலளித்தார்.

"வைத்தியசாலையில் வைத்தியம் செய்தது யார்?" என்று கேட்கப்பட்டபோது, "அங்கு வைத்தியர்கள் இருந்து சிகிச்சை செய்தனர்."- என்றார் அவர்.

அப்போது ஆணைக்குழுவினர், "காயப்பட்ட புலி உறுப்பினர்களும், பொதுமக்களும் தானே வைத்தியசாலையில் இருந்தனர்?" என்று கேட்டனர்.



அதற்கு சாட்சியமளித்த அவர், "காயப்பட்டபுலிகளைபொன்னம்பலம் வைத்தியசாலையில் வைத்திருந்தனர். பொதுமக்கள் மட்டும்தான் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இருந்தனர். புலிகள் வேறாகவே இருந்தனர்"- என்று தெரிவித்தார்.

இதன் பின்னர், "காயமடைந்த பிள்ளையை மாத்தளனுக்கு யார் கொண்டு சென்றனர்?"- என்று கேட்கப்பட்டது. "புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் வாகனத்தில் கொண்டு சென்றனர்" பதில் கூறப்பட்டது.

"அந்த வாகனம் யாருடையது?" - என்று என்று மீளவும் கேட்டனர். அதற்கு "புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ். அது அரசினுடையது"- என்று அவர் தெரிவித்தார்.

"யாருடைய ஷெல் தாக்குதலில்வைத்தியசாலைசேதமடைந்தது?"- என்று கேட்கப்பட்டது. அதற்கு "இராணுவத்தினர் நடத்தியஷெல்தாக்குதலிலேயே வைத்தியசாலை சேதமடைந்தது. நோயாளிகளாக இருந்த பலர் கொல்லப்பட்டனர்" என்று அவர் தெளிவாக சாட்சியமளித்தார். (ற-5)

# உடலைக் காண்பிக்காமல் இறப்புச் சான்றிதழ் தந்தனர்

## கணவரின் நிலை தெரியவில்லை என மனைவி கண்ணீருடன் சாட்சியம்



யாழ்ப்பாணம், நவ. 5

எனது கணவர் உயிரிழந்து விட்டார்என்று தெரிவித்து ஹெப்பட்டிக்கொலாவ நீதிமன்றம் இறப்புச் சான்றிதழ் வழங்கியுள்ளது. ஆனால் எனது கணவரின் உடலைக் காண்பிக்கவில்லை. அவர்உயிருடன்இருக்கின்றாரா? அல்லது இல்லையா? என்பதுஎனக்குத்தெரியவில்லை - இவ்வாறு ஜெயராகுலன் ஜெயமலர்என்பவர் சாட்சியமளித்தார்.

"போரின் போது இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் சென்றோம். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து கொண்டிருந்தோம். அதன் போது எனது கணவர் ஷெல் தாக்குதலில் காயமடைந்தார். அவரது கையிலும், காலிலும் சிறிது காயம் ஏற்பட்டது. ஆனால் அது பாரதூரமானது இல்லை. இந்த நிலையில் அவரை இராணுவத்தினர் பொறுப்பேற்றனர். என்னை முகாமுக்கு அனுப்பினர். அவரை பதவியா வைத்தியசாலைக்கு அனுப்பியதாகத் தெரிவித்தனர். இது தொடர்பில் நான் பதவியா வைத்தியசாலைப் பதிவுகளையும் பார்வையிட்டேன். அதில் எனது கணவர் பெயர் இருந்தது.

எனதுகணவர்தொடர்பில்ஹெப்பட்டிக்கொலாவபொலிஸ்நிலையத்தில் வழக்கு நடந்தது. நீண்ட விசாரணைகள் இடம்பெற்று வந்தது. பதவியா பொலிஸார் இறுதியில் நீதிமன்றுக்கு கொடுத்த அறிக்கை பிரகாரம், ஹெப்பட்டிக்கொலாவ நீதிமன்றம்எனக்கு கணவரதுஇறப்புச் சான்றிதழ் வழங்கியது.

ஆனால் அவரது உடலை எனக்கு காண்பிக்கவில்லை. நான் இராணுவத்தினரிடம் எனது கணவரைக் கையளிக்கும் போது அவர் உயிரிழக்கக் கூடிய அளவு காயங்களுடன் இல்லை. ஆனால் அவர் இறந்ததாகக் கூறி இறப்புச் சான்றிதழ் தந்துள்ளனர். எனது கணவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதுஎனக்குத்தெரியவில்லை."- என்று கூறினார்.

இதன்போது ஆணைக்குழுவினர், "நீதிமன்றமா இறப்புச் சான்றிதழ் தந்தது?" என்று வினாவினர். அதற்குஅவர், 'ஆம்! என்று பதிலளித்தார். இறப்புச் சான்றிதழில், "உயிரிழப்புக்கான காரணம் என்ன என்று குறிப்பிட்டிருக்கின்றது?" என ஆணைக்குழுவினர் கேள்வியெழுப்பினர். "போரின் போது ஷெல் வீச்சில் இறந்தார் என்று குறிப்பிடப்பட் டிருந்தது"- என்று சாட்சியமளித்தார். (ற-5)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 19 புதன் (05.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 344

# 18 ஆவது திருத்தத்தை செல்லுபடியற்றதாக்குக

## இலங்கையிடம் மனித உரிமைகள் சபை கோரிக்கை

ஜெனிவா, நவம்பர் 5

**மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு நடவடிக்கைகளை வரவேற்றுள்ள அதேவேளை, கடந்த 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தைச் செல்லுபடியற்றதாக்க வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை அரசைக் கோரியுள்ளது.**

இலங்கை தொடர்பான அவதானங்களை உள்ளடக்கிய ஐந்தாவது தொடர் அறிக்கையைச் சமர்ப்பித்த ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உடன்படிக்கைகளுக்குப் பொறுப்பான குழு இலங்கை தொடர்பாக ஒக்ரோபர் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் மறு ஆய்வொன்றையும் மேற்கொண்டது.

அந்தக் குழு இலங்கையில் அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட குறித்த திருத்தம் தொடர்பாகத் தனது கவலையையும் வெளியிட்டுள்ளது. இந்தத் திருத்தத்தின் மூலமாக நீதிச் சேவை உட்பட ஏனைய சுதந்திரமான அமைப்புக்களையும் பதவி நீக்கம் செய்யவோ? அல்லது புதிய அங்கத்தவர்களை நியமனம் செய்யவோ? ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நீதித்துறைக்கும் ஏனைய சுதந்திரமான அமைப்புக்களுக்கும் நியமனங்களை வழங்கும்போது வெளிப்படைத் தன்மையையும், பாரபட்சமின்மையையும் காண்பிக்க வேண்டுமென அது அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இதனைவிட ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் பயமுறுத்தல் சம்பவங்கள், அழுத்தம் வழங்குதல், செல்வாக்கைப் பயன்படுத்தல், இடையூறு விளை

(22ஆம் பக்கம் பார்க்க)

## சூரன் போர் பார்க்கச் சென்ற மாணவனை காணவில்லை

வவுனியா, நவ. 5

வவுனியா நகரில் உள்ள கோயில் ஒன்றில் இடம்பெற்ற சூரன் போர் பார்க்கச் சென்ற மாணவனைக் காணவில்லை என்று வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புளியங்குளம் பனிக்கநீராவி பகுதியில் வசிக்கும் சந்திரகுமார் சுகிர்தன் (வயது -16) என்ற சிறுவனே கடந்த புதன்கிழமை தொடக்கம் காணாமற்போயுள்ளார்.

ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் அரசினர் தமிழ் கல

(22ஆம் பக்கம் பார்க்க)

## மு.கா. எடுக்கும் முடிவு மூலம் முஸ்லிம்களுக்கு விமோசனம்

### அதுவே இன்றைய தேவை என்கிறார் ஹக்கீம்

அட்டாளைச்சேனை, நவ.5

நாங்கள் எடுக்கப்போகும் முடிவு ஈற்றில் இந்த நாட்டு முஸ்லிம்களின் விமோசனத்துக்கு வழிவகுக்கின்ற முடிவாக இருக்கவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



அட்டாளைச்சேனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்று அரசியலைப் பொறுத்தவரை எல்லாத் தரப்புக்களிலும் ஒருவிதமான தடுமாற்றம் காணப்படுகின்றது. எல்லாக் கட்சிகளும் உடைந்து சிதறுண்டு போகின்ற நிலைமை உருவாகிக் கொண்டு வருகின்றது. எல்லாக் கட்சியினரும் மாறி மாறி ஜனாதிபதியோடு உறவாடி உடைந்துதான் போயிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலும் அரசு கை வைக்கப் போய் அதிலுள்ள கஷ்டமும், பாரதூரமும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்போது தான் அவர்களுக்குப் புலப்படுகின்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு விபத்து குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 5

பொன்னாலைப் பாலத்தில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காது, மூக்கு வழியாக ரத்தம் வெளியேறிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். எதிரே வந்த வாகனம் டிம் லைட் போடாததனால் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

காரைநகர் இலகடியைச் சேர்ந்த கனகரத்தினம் கிருஸ்ணபாலன் (வயது - 31) என்பவரே உயிரிழந்தார். மேலும் இரண்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்துள்ளார். எதிரே கூலர் வகை வாகனம் டிம் லைட் போடாது சென்றுள்ளது. அதிகரித்த அந்த ஒளி காரணமாக முன்னே சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்கள் கண்ணுக்குத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் பதுளைப் பயணம் அரசியல் நோக்கம் கொண்டதல்ல

### செந்தில் தொண்டமானுக்கு சுரேஷ் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதுளை கொஸ்லந்தைக்குப் போனமை, இயற்கை இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அனுதாபங்களையும், அவர்களது துன்பங்களில் நாங்களும் பங்கெடுக்கின்றோம் என்பதையும் தெரிவிப்பதற்கே, மலையகத்துக்கான எங்களுடைய பயணம் என்பது எந்த வித அரசியல் நோக்கம் கொண்டதுமல்ல. இதனைச் செந்தில் தொண்டமான் புரிந்துகொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்வேறுபட்ட கால கட்டங்களில் ஏற்பட்ட கலவரங்களின் காரணமாக இடம்பெயர்ந்து வந்து வடக்கு - கிழக்கில் குடியேறிய பல்லாயிரக்கணக்கான மலையக மக்கள் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகாணமென வசிக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களில் அவர்களுடைய உறவுகளும் இருப்பார்கள் என்பதும், அவர்கள் தொடர்பாக அக்கறைப்பட வேண்டிய கடமைப்பாடு அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமக்கு இருக்கின்றது என்பதையும் செந்தில் தொண்டமான் புரிந்து கொள்ள வேண்டும்.

2005 ஆம் ஆண்டிலும், 2011 ஆம் ஆண்டிலும் மண்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மீரியபெத்தயில் இதுவரை 10 சடலங்கள் கண்டெடுப்பு

கொழும்பு, நவ. 5

பதுளை, கொஸ்லந்தை - மீரிய பெத்த மண்சரிவில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணி நேற்று ஏழாவது நாளாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை ஒரு சடலம் மீட்கப்பட்டது என்று - இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி இதுவரை 10 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

32 பேர் இந்த சரிவுக்குள் புதையுண்டு சாவடைந்து இருக்கலாம் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மீனவருக்காக மண்ணெண்ணெய் விலை 35 ரூபாவினால் குறைக்கப்பட வேண்டும்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

வவுனியா, நவ. 5

மீனவர் நலன்கருதி மண்ணெண்ணெய் விலையை 35 ரூபாவால் குறைக்க அரசு முன்வரவேண்டும் எனத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கோரிக்கை விடுத்தனர். மண்ணெண்ணெய் விலை குறைக்கப்படும்போது மீனவர்களும் விவசாயிகளும் பயன் பெறுவர் என்றும் அவர்கள் கூறினர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:



இந்திய மீனவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் எமது நாட்டு எல்லைக்குள் வருவதை நிறுத்த அரசு நிரந்தரமான உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தெந்த வெளிநாட்டு படகுகள் இங்கு வருகின்றனவோ அவற்றை ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரியப்படுத்தவேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு மற்றும் காணிகளை வழங்க வேண்டும்.

வடக்கு - கிழக்கில் போரினால் இடம்பெயர்ந்த சகல மக்களின் நிலங்களும் வீடுகளும் கையளிக்கவேண்டும். அவர்களின் காணிகளை அபகரிப்பதை இராணுவம் நிறுத்த வேண்டும்.

ஜனநாயக நடவடிக்கையில் ஈடுபடும் மக்களை இராணுவம் கைது செய்வதை நிறுத்த வேண்டும். இவற்றுக்கு அரசு முன்வராவிட்டால் எமது போராட்டங்கள் தொடரும் - என்றனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிக்குக

### சபையில் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, நவ. 5

நாட்டில் சமாதானம் மலர்ந்துவிட்டதாக மார்தட்டும் அரசு, பயங்கர வாதத் தடைச்சட்டத்தை உடன் நீக்கி விட்டு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று சபையில் வலியுறுத்தினார்.


அத்துடன், வடக்கு, கிழக்கில் நிலவும் சட்டம், ஒழுங்கு என்பது மாறுபட்ட மனோநிலையைக் கொண்டிருக்கின்றன என்றும், உண்ணும் போதும், உறங்கும்போதும்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஓராண்டு நினைவஞ்சலி

## கெஸ்ரன் ஜெய்சி



ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
இன்றும் எம் நினைவலைகளில்
நிழலாடுகின்றது உன் பூ முகம் ஜெய்சி!

கணவனுக்கு கன்னியாகவும்
பிள்ளைகளுக்கு தியாகியாகவும்
தேவ ஊழியத்தில் மூச்சாக செயற்பட்ட
உன் மூச்சை காலம் நிறுத்தியதேனோ?

உன்னைத் தேடி வரும் உறவுகளை
முகம் கோணா உபசரிக்கும் கருணை
உள்ளம் கொண்ட உனை தீ
தீண்டியது ஏனம்மா?

துடித்து ஏங்கித் தவிக்கும் எம் இதயக்குமுறலை
ஆற்றுவதற்கு ஒருமுறை உன்
உருவிலே எம் உறவுகளில்
ஒருத்தியாக மீண்டும் பிறந்து வாராயோ.....



மலர்வு 21.12.1975 உதிர்வு 05.11.2013

உன் பிரிவால் துயருறும்:

**கணவர், பிள்ளைகள், உறவுகள்.**

C - 82, 300 வீட்டுத்திட்டம், நாவற்குழி.

---

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் ஸ்ரீதரன் (செல்வா)



கரம்பன் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் 15A.பூநாறிமரத்தடி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் ஸ்ரீதரன் நேற்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கேதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீனிவாசன் , ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தலட்சுமி, குணமாளினி, வசந்தி, சுகிர்தரஞ்சினி அகிலேஸ்வரி, கல்யாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காயத்திரி, தர்ஷிகா, சார்ஜகா, சிந்துஜா, விதுசன், டினோஜன், தாட்சாயினி, தாரணி, திலக்ஷன், தமிழினி, தேனுகா, தேனுயன் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், பிறின்ஸ், ரஜீவன், கிருத்திகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மனல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15A, பூநாறிமரத்தடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
V. ஸ்ரீனிவாசன் (சகோதரன்)
(077 506 7159)

(53785) (45.6.3)

---

# வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி
# 2015ஆம் ஆண்டுக்கான கேள்விஅறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச்சந்தைகள், மீன்சந்தை, கோழிக் கடைகள், கருவாட்டுக்கடை என்பவற்றை 01.01.2015-31.12.2015ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | தொ. இல | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக் கப்படும் கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| கனகராயன்குளம், நெடுங்கேணி | 01 | நெடுங்கேணி மீன் சந்தை | 2000.00 | 5000.00 | 88,000.00 |
| | 02 | நெடுங்கேணி மரக்கறிச் சந்தை | 2000.00 | 5000.00 | 100,000.00 |
| | 03 | நெடுங்கேணி கோழிக் கடை | 2000.00 | 5000.00 | 55,000.00 |
| | 04 | கனகராயன்குளம் கோழிக்கடை | 2000.00 | 5000.00 | 30,000.00 |
| | 05 | கனகராயன்குளம் கருவாட்டுக்கடை | 2000.00 | 5000.00 | 15,000.00 |
| | 06 | கனகராயன்குளம் மரக்கறிச் சந்தை | 2000.00 | 5000.00 | 30,000.00 |
| | 07 | கனகராயன்குளம்மீன் கடை | 2000.00 | 5000.00 | 20,000.00 |
| | 08 | கனகராயன்குளம் மாட்டிறைச்சிகடை | 2000.00 | 5000.00 | 300,000.00 |
| | 09 | நெடுங்கேணி மாட்டிறைச்சிக்கடை | 2000.00 | 5000.00 | 350,000.00 |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 05.11.2014 - 17.11.2014
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 18.11.2014 பி.ப 12.30மணி வரை
   கேள்விப் பத்திரம் திறக்கப்படும் 18.11.2014 - பி.ப 02.15மணிக்கு
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர்,வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற் படப் பிரதியையும் கொண்டுவருவதுடன்,தாம் வதியும் இடத்தின் கிராமஅலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. உள்ளூராட்சிமன்றங்களினால் "தவறுநராகக்"கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
6. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 2/3 பங்குத்தொகையை 19.11.2014 ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையை 30.08.2015 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கும், எந்தவொரு கேள்வியும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. மரக்கறி சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர் கொண்டுவரும் பொருள்களின் விற்பனைவிலையில் 4% இற்குமேல் வரி அறவிடக்கூடாது
11. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்
12. கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
13. மரக்கறிச் சந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் உற்பத்திபொருள்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.

மு.பாலசுப்பிரமணியம்
தவிசாளர்,
வவுனியாவடக்குபிரதேசசபை
நெடுங்கேணி.

(அ/17852)(10.3)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## செல்வன் அருளீஸ்வரன் நர்சுதன்



(ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக முகாமைத்துவ பீட 3 ஆம் வருட மாணவன்)

அன்னை மடியில் 14.10.1988 — ஆண்டவன் பிடியில் 05.11.2010

மகனே! அன்புச் செல்வமே! எத்தனை
ஆண்டுகள் போனாலும்
எங்கள் உயிர் உள்ளவரை உன் நினைவாகவே
இருப்போம்
எங்கள் கண்ணீர்க் காணிக்கையை
உன் பாதத்தில் வைத்து ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகிறோம்.

கோப்பாய் வீதி
சந்திக்கு அருகில் உரும்பிராய்.

எப்போதும் உன் பிரிவை நினைத்து வருந்தும்
அப்பா, அம்மா, தங்கை,
மச்சான், மருமக்கள்.

(53723)(4.3.6)

---

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா செல்லையா



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு, கிருஷ்ணன் கோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உலகநாதன், காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் தேவசேனா (இந்தியா), ஜெகநாதன் (ஜெயம் - சுவிஸ்) மோகனதாஸ் (சுவிஸ்), ஜெக சோதிநாதன் (ராசன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கிருஷ்ணன் கோயிலடி.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். 021 790 0288

---

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1924



மறைவு 25 . 10 . 2007

## அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் J.P)

திதி: 05.11.2014

ஆண்டுகள் ஏழு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ எங்கள் துயர் தினம் தினம் ஏங்குகின்றோம்
அன்புத் தெய்வமே!விண்ணுலகம் சென்று விட வில்லை - நீங்கள்
எம் மனங்களில் மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்.

மேதர் ஒழுங்கை,
மாவிட்டபுரம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

05 NOV 2014

## பௌர்ணமி அரங்கம்

தென்மராட்சி, நவ.5

கோவிலாக்கண்டி மேற்கு கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தினரால் நடத்தப்படும் பௌர்ணமி அரங்கம் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மு.ப. 8 மணிக்கு பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக வளாகத்தில் உள்ள நினைவாலய மண்டபத்தில் இடம்பெறும்.

நினைவு நிதியக் காப்பாளர் க.மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திருமதி து.அருளானந்தம் கலந்து கொள்வார்.

பௌர்ணமி அரங்கத்தில் 2014 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கணித பாட வழிகாட்டல் கருத்தரங்கும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர் கௌரவிப்பும் இடம்பெறும். (வ-9)

# திருநெல்வேலி ஆடியபாதம் வீதி வெள்ளக்காடாகக் காட்சி

யாழ்ப்பாணம், நவ.5

திருநெல்வேலி சந்தைக்கு முன்பாகவுள்ள ஆடியபாதம் வீதியில் மழை காலத்தில் வெள்ளம் தேங்குவதால் சந்தைக்கு வருகை தரும் நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.




ஹற்றன் நஷனல் வங்கி, மற்றும் சந்தைக்கு முன்பாகவும் மழை காலத்தில் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கிக் காணப்படுகின்றது. இவ்வாறு வெள்ளம் தேங்குவதால் வீதியால் பயணிப்போர் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் மரக்கறிச் சந்தை, வங்கி மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு அன்றாட தேவையைப் பூர்த்தி செய்யச் செல்லும் மக்கள் வீதியில் தேங்கும் வெள்ளத்தினால் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர்.

பலாலி வீதி மற்றும் ஆடியபாதம் வீதியில் உள்ள வடிகால் வாய்கள் சீரான முறையில் புனர்நிர்மாணம் செய்யப்படாததாலேயே வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் வடிகால் வாய்களில் குப்பை மற்றும் கழிவுகளும் அதிகமாகத் தேங்கியும் காணப்படுகின்றன.

நேற்றுக் காலை பெய்த கனத்த மழையால் அந்தப் பகுதியில் அதிகளவில் வெள்ளம் தேங்கியது. இது இவ்வாறிருக்க திருநெல்வேலிக்கு உட்செல்லும் நடைபாதைப் பகுதி தற்போதைய மழையால் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

குறித்த நடைபாதைப் பகுதியின் இரு பக்கமும் இருந்து பனம் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் இதனால் சிரமப்பட்டு வருகின்றனர்.

அதனைவிட சந்தைக்குச் செல்லும் நுகர்வோரும் இந்தச் சேறு, சகதியால் பாதிக்கப்படுகின்றனர்.

சந்தையின் உட்பகுதிக்குச் செல்லும் நடைபாதையை சிமெந்தால் நிர்மாணம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சந்தை வியாபாரிகள் கேட்டுள்ளனர். (வ-17)

## சமிக்ஞையை மீறியவரை விரட்டிச் சென்று பிடித்த பொலிஸார்

தென்மராட்சி, நவ.5

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட பொலிஸார் அவர்களது மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டிய போதும் நிறுத்தாமல் சென்றதால் 10 கிலோ மீற்றர் தூரம் வரை அவர்களைத் துரத்திச் சென்று பிடித்தனர். இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

அவ்விதம் தாம் துரத்திப் பிடித்த இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கூட்டம்

நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் தி.இரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறும். (வ-ரி)

## திருவிழா

புத்தூர் கிழக்கு தல்லுடை ஸ்ரீகன்னியர் வைரவர் ஆலயத்தில் ஐப்பசிப் பரணியை முன்னிட்டு விசேட உற்சவம் நாளை மாலை 5 மணிக்கு இடம்பெறும். சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப் புலவர் ச.நவநீதனும் தெல்லிப்பழை துர்க்காதேவி பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாசாரியாரும் நிகழ்த்துவர். (வ-ரி)




பாராட்டி வாழ்த்துகின்றேன்

மு/குரவில் தமிழ் வித்தியாலயத்தில்
2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
தோற்றி 171 புள்ளிகளைப்பெற்ற
செல்வன் சுரேஸ்குமார் நிலவன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு,
100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற
சு.ரம்ஷா - 140, கோ.நிதர்ஷனா - 118,
ந.தமிழினி -110, சி.சாருமதி - 102
ஆகிய மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.
இம்மாணவச் செல்வங்களின்
வெற்றிக்கு அயராது உழைத்த
அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும்
பாராட்டி வாழ்த்துகின்றேன்.
வாழ்த்துபவர்: சி.யோகராஜ் - பழையமாணவன்.
(53748) (45.6.3)

### வீடு வாடகைக்குத் தேவை

கச்சேரி நல்லூர் வீதியில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
(53744) (12.3.6) தொ.பே: 077 289 7869

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, டச்சுவீதி, மண்டுவில் காளிகோயிலுக்கு முன்னாலுள்ள 5 பரப்பு பயன்தரு மரங்களுடன் உள்ள காணி விற்பனைக்குண்டு.
(47326) (12.3.6) தொ.பே: 077 940 1614

### இடமாற்றம்

டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி
(இலுப்பையடிச் சந்தி)
உடைந்த பிளாஸ்ரிக் ஒட்டுதல் பழைய பிளாஸ்ரிக் வாங்குதல். (வி.17512)
தொடர்பு : 077 592 5088/021 222 8680

### டீசல் கார் விற்பனை

நல்ல நிலைமையில் உள்ள 31SRI 3006 Morris Ford கார் விற்பனைக்கு உள்ளது.
விபரங்களுக்கு:
12/1, இரயதுறை ரோட், வைரவப்புளியங்குளம், வவுனியா.
024 222 0118
(53724) (7.6.3)

## யா/ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு 2014

Congratulations Congratulations

### வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்


செ.டிலோஜன் (180)


வி.கௌரிதாசன் (178)


சு.லக்ஷியா (177)


யோ.விதுஷனா (176)


ச.தனுஸ் (172)


உ.அர்ச்சனா (170)



ஆ.பிரியங்கா (170)


சு.சிவானுஜா (167)


பா.சாலினி (166)


ச.டிலங்காதெவ்மினி (161)


ஜெ.அபிரா (160)


கு.தனுசன் (160)


இ.தனுஸ்ராஜ் (159)

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. வெ.சரண் | - 153 | 07.கா.கணாதீபன் | - 135 | 13.ர.சயானா | - 121 | 19.சி.நிதர்சன் | - 106 |
| 02. பு.சஞ்யை | - 151 | 08.சு.அபிலாஷ் | - 133 | 14.சு.பானுப்பிரியா | - 120 | 20.த.பரணி | - 104 |
| 03.தி.தனுசியன் | - 145 | 09.லீ.சர்மிலி | - 129 | 15.பா.சப்தவி | - 116 | 21.சி.கஸ்தூரி | - 104 |
| 04.ந.டினேஸ்காந் | - 144 | 10.ர.ரஜிந்தா | - 128 | 16.இ.டிலக்சன் | - 114 | 22.வி.டனுஜன் | - 101 |
| 05.பா.மேரி அன்பிறிற்றிக்கா | - 135 | 11.பி.டிலக்ஷனா | - 128 | 17.து.கஜவிக்னதீபன் | - 114 | | |
| 06.யோ.நிலக்ஷன் | - 135 | 12.ஜெ.தனுசியா | - 127 | 18.அ.வினிதா | - 111 | | |

75 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம் ரா.சிவனுஷன் – 97, சி.துர்க்கா – 93, தெ.சாணுஜா – 79

தோற்றிய மாணவர்கள் (37) அனைவரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்கள்.

எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து எமது பாடசாலையின் உயர்வுக்குப் பெருமை சேர்த்துத்தந்த அதிபர் யோ.ஜெகஆனந்தம் அவர்களுக்கும் எமது ஆசிரியர்களான திருமதி தி.கண்ணதாஸ், செல்வி க.பிரியதர்சினி மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் உளப்பூரிப்போடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes வாழ்த்துவோர் : பாடசாலைச்சமூகம்

(51665)(7.6.3)

## பரிசளிப்பு விழா

நீர்வேலி அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண் டபத்தில் முதல்வர் சு.மோகனராஜ் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.மெற்றோ கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ச.வேலழகனும் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் அ.பத்மநாதனும் கலந்து கொள்வர். (வ-ரி)

## தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் குறித்த நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் நவ. 5

சமகாலத்தில் முதன்மை பெற்றுவரும் கலாசாரச் சுற்றுலாவில் வட இலங் கையில் சுற்றுலா வளர்ச்சி பெறுவதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ள தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களை அடையாளப்படுத்தி அவற்றின் வரலாறுகளையும் பின்னணிகளையும் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டு பேராசிரியர் ப.புஸ்பரட்ணத்தால் எழுதப்பட்ட 'வட இலங்கையில் சுற்றுலாவும் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும்' என்ற நூல் வெளியீடு இன்று இடம்பெற வுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பேராசிரியர் செ.கிருஷ்ணராசா தலைமையில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வுக்கு பிரத்ம விருந்தி னராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினராக முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் மற்றும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனும் கலந்து கொள்வர். (வ-ரி)

## முதியோர் தினவிழா

முதியோர் தின விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் இடம் பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் சிறப்புவிருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவும், தேசியசேமிப்பு வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் சி.கருணாகரனும், விசேட விருந்தினர்களாக வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத் தர் ஸ்ரீநிவாசன், வவுனியா நகரசபைச் செயலாளர் சத்தியசீலன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (வ-421-402)


## எமது நிறுவனத்தில் (English Academy - Vavuniya) கல்வி பயின்று 2014ம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனைபுரிந்த மாணவர்களைபாராட்டுகின்றோம்


01 த.அபினேஷ் புள்ளி - 195 நிலை மாகாணம் - 01 மாவட்டம் - 01


02 மு.சாகித்தியன் புள்ளி - 193 நிலை - 02


03 த.அக்ஷிகா புள்ளி - 191 நிலை - 03


04 அ.பிரவீன் புள்ளி - 190 நிலை - 04


05 கி.கிருஷயனன் புள்ளி - 189 நிலை - 05


06 ச.பிரியங்கா புள்ளி - 189 நிலை - 05


07 சு.அபிஷேக் புள்ளி - 186 நிலை - 11


08 மோ.கிருஷிகா புள்ளி - 189 நிலை - 11


09 வி.கீதவர்சன் புள்ளி - 185 நிலை - 12


10 ஜெ.டிக்ஷிகா புள்ளி - 185 நிலை - 12


ஆசிரியர்
திரு. ஞா.ஐங்கரன்
B.A,Dip in teach (merit), Dip in psy

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | க.தனாஞ்ஜனி | - 184 | 27 | ஜெ.அனோஜன் | - 175 | 43 | ஞா.திசோபிதா | - 170 | 59 | க.தருஷியான் | - 166 | 75 | மோ.நிருத்திகா | - 163 |
| 12 | மோ.நிதுஷா | - 183 | 28 | ஜெ.டனிஷியன் | - 175 | 44 | க.கிரிபந்தனா | - 170 | 60 | பா.அபிநயா | - 165 | 76 | ஞா.திஷோபிதன் | - 163 |
| 13 | இ.தர்சன் | - 183 | 29 | ஸ்ரீ.வேணுஜன் | - 174 | 45 | வி.விதுர்ஷனா | - 169 | 61 | சி.கீர்த்திகா | - 165 | 77 | சு.சஞ்சுதன் | - 162 |
| 14 | சி.சங்கீத் | - 182 | 30 | ஜெ.ஆஷிகா | - 174 | 46 | சி.துவாரகன் | - 169 | 62 | பா.வித்தகன் | - 165 | 78 | கு.சனுஜா | - 162 |
| 15 | சு.ஆரணன் | - 180 | 31 | பா.லசான் | - 173 | 47 | சி.துளசிகன் | - 169 | 63 | சி.அக்ஷிகா | - 165 | 79 | க.சங்கீத் | - 162 |
| 16 | மோ.வர்ஷன் | - 180 | 32 | ச.சாய்சரண்யா | - 173 | 48 | சு.துவாரகா | - 169 | 64 | சி.மெதுஷா | - 165 | 80 | அ.அனுஷாந் | - 162 |
| 17 | ம.திசாரா | - 180 | 33 | ஆ.சகாணன் | - 173 | 49 | க.றெனாட் | - 169 | 65 | தி.கஜானி | - 165 | 81 | செ.ஹபிஷன் | - 161 |
| 18 | ப.லிர்ஷா | - 180 | 34 | பா.யுவேதா | - 173 | 50 | கு.விதுஷிகா | - 168 | 66 | ரா.டினார்த்தன் | - 164 | 82 | தே.கிருஷாங்கன் | - 161 |
| 19 | த.டினுஷா | - 180 | 35 | செ.ஓவியா | - 173 | 51 | வ.துசிந்தன் | - 168 | 67 | சி.பிரியங்கன் | - 164 | 83 | ம.கஜானி | - 161 |
| 20 | க.ஹர்மேஷா | - 178 | 36 | வ.ஹரிஷான் | - 173 | 52 | ஸ்ரீ.கர்ஷியா | - 167 | 68 | நி.ஹரிஷான் | - 164 | 84 | கா.ஷயனிகா | - 161 |
| 21 | நா.அபிநயா | - 177 | 37 | ச.சத்ஜெயன் | - 172 | 53 | சி.சங்கவி | - 167 | 69 | இ.தரணிகா | - 164 | 85 | த.தக்ஷனா | - 160 |
| 22 | சி.சசிவர்ணன் | - 177 | 38 | வி.திவியுகன் | - 172 | 54 | ஞா.பிர்த்திகா | - 167 | 70 | ஜோ.ஜெயரோசி | - 163 | 86 | வ.யதுசன் | - 160 |
| 23 | பி.உதேசாணி | - 177 | 39 | யோ.கோபிஷாந் | - 171 | 55 | ச.தர்சிகன் | - 167 | 71 | ய.யசிந்தன் | - 163 | 87 | அ.சபீனா | - 159 |
| 24 | அ.அகமட் | - 176 | 40 | கி.சிரஸ்திதா | - 171 | 56 | ஞா.கிருஷாயினி | - 167 | 72 | வி.பவிதா | - 163 | 88 | க.பிரித்தா | - 159 |
| 25 | ச.அபிஷனா | - 176 | 41 | த.கிந்துஜா | - 171 | 57 | இ.பத்மிகா | - 167 | 73 | வ.பதுமன் | - 163 | 89 | தி.ஜெயசாளினி | - 159 |
| 26 | கி.ராகரா | - 176 | 42 | ஜெ.கஜாணன் | - 170 | 58 | ரா.அஸ்மிதா | - 166 | 74 | ச.முஹமட்சாதீர் | - 163 | 90 | ர.துஷிகரன் | - 158 |

இல.05, புகையிரத நிலைய வீதி, கரப்பன்காடு, வவுனியா.



## யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி

## புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2014




எமது பாடசாலை மாணவச் செல்வங்களை தமது அயராத உழைப்பாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் வெற்றி பெறச்செய்து எமது கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களையும், ஆசிரியர்களான திருமதி கௌரி சுபீஸ்கரன், திருமதி.ற.ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வி சந்திரா சுப்ரமணியம் ஆகியோரையும் மாணவச் செல்வங்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் :**

இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில்
தேவநாயகம் அனோல்ட்ரெறோனி 163, யோகானந்தேஸ்வரசர்மா சஞ்சுதன் 184, நக்கீரன் ஆதித்தியன் 175 ,ராஜேந்திரகுமார் ராருகஜனி 182, ஸ்ரீதரன் ஆதித்தியன் 177, தயானந்தன் கவிஷனி 159,

இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசையில்
கணேஸ்வரன் ஜனகனி 164,, கபிஷனா தில்லைநாதன் 158 , திதுஷா அருட்செல்வம் 160, ஷெரின் துஷிக்கா பங்கயன் 157 ,அபிலாசினி செல்வக்குமரன் 161 , அர்ச்சிகா தவராஜசிங்கம 158 , தீபிகா சுபீஸ்கரன் 161

**100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் :**

ஸ்ரீதரன் கவிப்பிரியன் - 155, ஜொசானுகா புலேந்திரன் - 154, சிவரமணன் வசீகரன் - 153, நிவர்த்திகா ஜெகன் - 152, விஜயரஞ்சன் சாருயன் - 152, தவராசா ஆகாஷ் - 150, அபிநயா ஜீவதீபன் - 150, ரதீஸ்பாலன் பதுசன் - 148
சந்திரசேகரம் கஜன்ராஜ் - 148, கேசரிவர்மன் கௌதமன் - 142, கயலக்ஷி பிரபாகரன் - 137, பர்மிலா சிவசோதி - 136, ஷிரோமி மகேந்திரராசா - 136, தக்ஷனா ஜெகதீஸ்லிங்கம் - 136 ராஜசேகர் ஷியாந் - 136 , கோகிலன் அபிஷன் - 135
பாமிதா விக்னேஸ்வரன - 135, சாம்பவி சேனாதிராஜா - 130, ஐக்ஷிகா கனகராசா - 130, தாட்சாயினி பாஸ்கரன் - 129, லோகேஸ்வரன் தனுஸ் - 129, தயாபரன் யெருஷன் - 122, விக்கினேஸ்வரன் ஆதித்தியன் - 119,
வசிகா நடராஜா - 118, கஜநிலா கலியுகவரதலிங்கம் - 115, சதீஸ்குமார் தக்ஷிகன் - 115, சங்கீர்த்தனா சுதாகரன் - 113, ஆனந்தகோபால் ஆர்த்திகன் - 112, முரளிதரன் சஜித் - 111, காவியா செல்வராசா - 110,
துஸ்யந்தி ஸ்ரீசுரேந்திரன் - 109, கம்சனா சிவகுமார் - 106, கோபினா பவானந்தகுமார் - 102, விமலசூரியன் விஸ்னுசாந் - 101, மக்ஷனா மைக்கல்அஞ்சலோ - 100 , நர்த்தகி ரஜீவன் - 100

வாழ்த்துவோர்,
பாடசாலைச் சமூகம்

## கைதடி முதியோர்களுடன் மாணவர் கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், நவ.5

பெற்றோர்களைப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வுடன் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் கைதடி அரச முதியோர் இல்லத்துக்குச் சென்று அங்கு முதியோர்களுடன் கருத்துப் பகிர்வு ஒன்றை மேற்கொண் டனர்.

'முதியவர்களை நாம் கைவிடக்கூடாது. அவர்கள் எமது பெற்றோர்கள். அவர்கள் இல்லாவிட்டால் நாம் இந்த உலகில் வாழ முடியாது. இதற்காக எதிர்காலத்தில் எமது தாய் தந்தையர்களை வயது முதிர்ந்ததைக் காரணம் காட்டி கைவிடக்கூடாது. அவர்களை நாமே பராமரிக்க வேண்டும். இது குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் முதியோர் இல்லத்துக்கு வந்தோம்' என மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களும், ஆசிரியர்களும் முதியோர்களுடன் கலந்துரையாடி அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தனர். அத்துடன் முதியோர்களுக்கு மதிய உணவையும் வழங்கிக் கௌரவித்ததுடன் கலை, நடன நிகழ்வுகளையும் நடத்தி முதியோர்களை மகிழ்வித்தனர்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இரண்டாம் வருட மாணவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று இல்லத்துக்குச் சென்றிருந்தனர். அவர்கள் முதியோர்களை சந்தித்து கலந்துரையாடி மகிழ்ந்தனர்.

(த-17)

## பாடசாலைச் சேவை பஸ்களை சீரமைப்பதற்கு கால அவகாசம்

யாழ்ப்பாணம், நவ 5

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பெரும்பாலானவை சேதமடைந்து இருப்பதனால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அவ்வாறு சேதமடைந்திருக்கும் பஸ்களை மீண்டும் புனரமைக்குமாறு தெரிவித்தார் மோட்டார் வாகனப் பரிசோதகர் சாகர திஸ்ஸ நாயக்க.

சில தினங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போக்குவரத்துப் பொலிஸாருக்கும் அரச மற்றும் தனியார் திணைக்களங்களுக்கும் இடையிலான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அவ்வாறாக பழுதடைந்து இருக்கும் பஸ்களை எதிர்வரும் டிசெம்பர் விடுமுறையைப் பயன்படுத்திச் சீரமைக்கவேண்டும். ஜனவரி பாடசாலைகள் ஆரம்பித்ததும் பாடசாலைச் சேவை பஸ்கள் அனைத்தும் பார்வையிடப்படும். சீரமைக்கப்படாத பஸ்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (த-ரி)

## பாஷையூர், மகேந்திரபுரம் பகுதி மக்கள் வெள்ளத்தினால் பாதிப்பு



யாழ்ப்பாணம், நவ.5

தற்போது பெய்து வரும் மழையால் பாஷையூர், மகேந்திரபுரம் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதி மக்களின் குடியிருப்புக்களைச் சுற்றி வெள்ளம் தேங்கியுள்ளதால் அவற்றுக்குள் இருக்க முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த குடிமனைகளின் நிலப்பகுதி வெள்ளத்தால் ஊறிய நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் சிலரது குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் மழை ஒழுக்குகளும் ஏற்பட்டுச் சகதியாகக் காணப்படுகின்றது.

அதேவேளை, வெள்ளத்தால் நுளம்புகளின் பெருக் கமும் அதிகரித்துக் காணப் படுகின்றது.

மழை பெய்தால் எமது குடியிருப்புக்களை வெள்ளம் சூழ்ந்து நிற்பது வழமை. இந்தத் தாழ்ந்த இடங்களை மண்ணால் நிரப்பிச் சீர் செய்து தருமாறு நாம் பல தடவைகள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தோம். எமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக அவர்கள் உறுதியளித்திருந்தனர். ஆயினும் இதுவரை எமது பகுதியை அவர்கள் சீர் செய்து தரவில்லை. தற்போது மாரி காலம் ஆரம்பித்த நிலையில் பலத்த மழை பெய்யும் பட்சத்தில் எமது குடிமனைகளை விட்டு வேறு இடத்துக்கே இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று அந்த மக்கள் கூறினர். (த-17)

# எம்.ஆர்.ஐ.ஸ்கான் இதுவரை இல்லை

### மாதாந்தம் 100 நோயாளர்கள் கொழும்புக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த நிலை

யாழ்ப்பாணம், நவ 5


யாழ். போதனா வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை வைத்தியசாலைக்கென எம்.ஆர்.ஐ ஸ்கான் இயந்திரம் எதுவும் வழங்கப்படவில்லை. அதனால் மாதாந்தம் சுமார் 100 இற்கும் மேற்பட்டோர் கொழும்புக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர் என்று வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு பல தசாப்தங்களாகி விட்டன. ஆனால் இன்றுவரை இந்த இயந்திரம் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை. அதனால் வடக்கிலுள்ள நோயாளர்கள், விபத்துக்குள்ளானவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குஎம்.ஆர்.ஐஸ்கான் பரிசோதனையை இங்கு செய்யமுடியாது. கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்டவற்றுக்கே நோயாளர்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

நோயாளர்கள் பெரும்பாலும் அம்புலன்ஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டாலும் தாமாகவும் பணம் செலவழித்துச் செல்கின்றனர். அதனால் அலைந்து திரிதல் மற்றும் செலவுகள் அதிகமாகியுள்ளன. அந்த இயந்திரத்தின் பெறுமதி சுமார் 50 மில்லியன் ரூபா. அதனைப் பெற்றுத் தருமாறு பல தடவைகள் கோரியுள்ளோம். ஆனால் இன்னமும் அது கிடைக்கவில்லை. பலருக்கு அது தொடர்பில் அறிவித்துள்ள தோடு பெற்றுத் தருமாறும் கோரியுள்ளோம். இதனால் பல வருடங்களாக நோயாளர்கள் கொழும்புக்கே அனுப்பப்பட்டு வருகின்றனர்-என்றார்.

ஆனால் அவ்வாறு நோயாளர்களை அழைத்துச் செல்ல ஏற்படும் செலவுகளை நோக்கும்போது, அவற்றுக்குச் செலவாகும் பணத்தைக் கொண்டும் வேறு உதவியுடனும் அந்த இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

(த-4)



வடக்குக்கு அதிக நிதி உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் வடக்கு மிக விரைவாக அபிவிருத்தி அடைந்து வருவ்தாகவும் அரசு தொடர்ந்து கூறிவருகின்றது. எனினும் சாதாரண மக்களின் வாழ்க்கையில் இந்த அபிவிருத்திகள் எந்தவிதமான பாதிப்பையும் இதுவரையில் ஏற்படுத்தவில்லை. மூன்று சிறுவர்கள், ஒரு குழந்தை, தாய், தந்தை என்று மொத்தம் ஆறு உறுப்பினர்கள் வாழும் சிறிய குடிசைதான் இது. தெல்லிப்பழையில் பிரதான வீதிக்கு மிக அருகில் இந்தக் குடும்பம் வாழ்கிறது. வாழும் தரமற்ற இந்தக் குடிசை தற்போதைய மழைக்கு ஒதுங்குவதற்கும் தரமற்றதாகிப் போயிருக்கிறது. அருகிலுள்ள வீதியை காப்பெற்றாக மாற்றிய அரசு. இந்த மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நிரந்தரக் காணி இல்லாததால் அவர்களுக்கு வீட்டு உதவி வழங்கவில்லை என்கிறார்கள் அதிகாரிகள். இராணுவத் தினருக்காக யாழ்ப்பாணத்தில் அரச நிலங்களைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறுகிறது அரசு. (உ-21)

## சிறுவன் துஷ்பிரயோகம்; சமுர்த்தி அலுவலர் கைது

தென்மராட்சி, நவ.5

14 வயதுச் சிறுவனை அழைத்துச் சென்று பாழடைந்த வீடொன்றில் வைத்துத் துஷ்பிரயோகம் செய்த சமுர்த்தி உத்தியோகத்தர் மழைக்கு ஒதுங்கிய பொலிஸ் அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை பளை நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை உடற்பயிற்சிக்காக நடந்து சென்ற பொலிஸ் அதிகாரிகள் மழை பெய்ததால் அருகில் உள்ள பாழடைந்த வீட்டின் முன் பகுதியில் ஒதுங்கினர்.

அங்குள்ள மா மரத்தின் கீழ் மோட்டார் சைக்கிளொன்று காணப்பட்டதால் சந்தேகம் கொண்ட அவர்கள் உள்ளே சென்று பார்த்த போது சிறுவன் ஒருவனைச் சமுர்த்தி உத்தியோகத்தர் துஷ்பிரயோகம் செய்வதைக் கண்டுள்ளனர்.

பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். நேற்று மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் கிளிநொச்சி நீதிமன்றுக்கு இருவரையும் அழைத்துச் சென்றனர். (த-9)

# 75,000 பனம் விதைகள் இந்த மாதத்தில் நடுகை

### பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.5

பனை அபிவிருத்திச் சபை யாழ். குடாநாட்டில் அழிந்து போன பனை வளத்தை ஈடு செய்யும் வகையில் அதிகளவு பனம் விதைகளை நடுகை செய்யும் பணியை தீவிரப் படுத்தியுள்ளது.

இதற்காக இந்த மாதத்தில் 75 ஆயிரம்பனம்விதைகள்நடுகை செய்யப்பட்டு வருவ தாகச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரைக்கும் 31 ஆயிரத்தி 750 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. மேலும் 43 ஆயிரத்தி 250 விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன. வேலணையில் 10 ஆயிரம் விதைகளும், அனலைதீவில் 2 ஆயிரம் விதைகளும், சங்கானையில் 2 ஆயிரம் விதைகளும், தெல்லிப்பழையில் ஆயிரத்து 500 விதைகளும், கரவெட்டியில் 4ஆயிரம் விதைகளும், மருதங்கேணியில் 2 ஆயிரத்து 250 விதைகளும், ஊர்காவற்றுறையில் 10 ஆயிரம் விதைகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இந்தப்பிரதேசங்களில் தெரிவு செய்யப்படும் இடங் களில் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன. பாடசாலை வளாகங்கள், பொது இடங்கள், மயானங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் போன்றவற்றிலும் இந்தப் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

நடுகைசெய்யப்பட்ட பனம்விதைகளைத் தொடர்ந்து பார்வையிட்டுப் பராமரிப்பதற்குப் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது.

குடாநாட்டில் பனை வளத்தை மேலும் அதிகரிக்க மக்கள் அனைவரும் தமது சுற்றாடல், குடியிருப்புப் பகுதிகளில் பனம் விதைகளை நட்டு பராமரிக்க முன்வரவேண்டும்.

பனம் விதை, நாற்றுக்கள் தேவைப்படு வோர் சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்- என்றார்.

(த-17)

## கூலியாகக் கிடைத்த போலி நாணயத்தாள் பொலிஸில் ஒப்படைத்த ஓட்டோ சாரதி

தென்மராட்சி, நவ.5

பயணக் கட்டணமாகத் தமக்குக் கிடைத்த ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் தார் ஓட்டோச் சாரதியொருவர்.

சேவையில் கிடைத்த பணத்தை கணக்குப் பார்த்த போது வித்தியாசமான நிலையில் காணப்பட்ட ஆயிரம் ரூபா நாணயத்தாளை ஏனையோரிடம் காண்பித்து அது போலியானது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட அவர் பின்னர் அதனை அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் துள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த நாணயத் தாள் தொடர்பாகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

ஓட்டோ பல தடவைகள் சேவையில் ஈடுபட்டதால் குறித்த ஆயிரம் ரூபா தாளை வழங்கியோருக்கு மீதிப் பணம் வழங்கியதாகவும், ஆனால் எந்தப் பயணி அந்தப் போலி நாணயத்தாளைத் தந்தார் என்பது தெரியவில்லை என வும் ஓட்டோச் சாரதி தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (த-9)

## சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்ட 9 பேருக்குத் தண்டம்

கிளிநொச்சி, நவ. 5

வலைப்பாடு கடற்பரப்பில் மூன்று வள்ளங்களில் தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 22 மீனவர்களுக்கு எதிராகக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யபபட்ட வழக்கில் இரு வள்ளங்களைச் சேர்ந்த 9 மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து இவர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் ஏனையவர்களுக்கான விசாரணையை அடுத்த வருடம் ஜனவரி 13ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலைப்பாடு கடற்பரப்பில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 5ஆம் திகதி மூன்று வள்ளங்களில் தடைசெய்யப்பட்ட றோலர் தொழிலில் ஈடுபட்ட 22 மீனவர்களுக்கு எதிராகக் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை நீதிவான் வகாப்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இரு வள்ளங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 9 மீனவர்கள் குற்றவாளிகள் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து இவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் ஒருவள்ளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 13 பேரில் ஒரு மீனவர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காததினால் இவர்களுக்கான விசாரணையை அடுத்த வருடம் ஜனவரி 13ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

(த-115)



வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு கடந்த 31 ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் வைத்து மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் பின்னர் அந்த நிகழ்வு பிற்போடப்பட்டது. இதனால் கடந்த இரு வாரங்களாக நகர சபை மைதானத்தில் மோட்டார் சைக்கிள்கள் வெய்யிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் உள்ளன. (த-421)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வேண்டும்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

புதுக்குடியிருப்பு, நவ. 5

முன்பள்ளி மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மிகவும் குறைந்தளவு ஊதியத்துடன் அடுத்த தலைமுறை மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்காக உழைத்து வருகின்றனர். சிறார்களுக்குக் குருவாகவும், தாயாகவும் ஒரே நேரத்திலிருந்து மிகப் பொறுப்பு வாய்ந்த பணியை ஆற்றிவரும் ஆசிரியர்களைக் கௌரவிப்பது தமிழ் சமுகத்தின் கடமை. எதிர்காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் தகுதியின் அடிப்படையில் ஏதாவது ஒரு பொருத்தமான திட்டத்தின் கீழ் நிரந்தர நியமனங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.



கடந்த முதலாம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நடைபெற்ற முன்பள்ளி, அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

போரினாலும், சுனாமியினாலும், பேரழிவையும் அவலங்களையும் சந்தித்த பின்னரும், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் 46 முன்பள்ளி, அறநெறி ஆசிரியர்கள் எந்தவித ஊதியமும் பெறாமல், மிகுந்த கஷ்டங்கள், வாழ்க்கைச் சுமைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களுக்குத் தங்களுடைய அர்ப்பணிப்பான ஆசிரியர் சேவையை செய்வதையிட்டு அவர்களைப் பாராட்டி நன்றி பகராமல் இருக்க முடியாது.

வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரக்கணக்கான முன்பள்ளி ஆசிரியர்கள் இன்றைய விலைவாசி ஏற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையிலும், அர்ப்பணிப்புடன் ஆசிரியர் பணியைச் செய்துகொண்டிருக்கின்றனர்.

தென்பகுதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஜனாதிபதியின் நிதியிலிருந்தும், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் நிதியிலிருந்தும் 18 ஆயிரம் ரூபா தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரை கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது.

ஆனால், எமது மாகாணங்களைப் பொறுத்தவரை மாகாண சபைகளுக்குப் போதிய நிதிவளம் இன்மையால் பல ஆசிரியர்களுக்கு 3 ஆயிரம் ரூபா வீதம் ஊதியம் கொடுக்கப்படுகின்றது. இது அவர்களின் உழைப்புக்குச், சேவைக்கு ஏற்ற கொடுப்பனவு கிடையாது. ஒரு நாட்டுக்குள்ளே சிங்கள, தமிழ் முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையில் சம்பளக் கொடுப்பனவில் வேறுபாடுகளை இனரீதியாக இந்த அரசு கடைப்பிடித்து வருகின்றது. இது நல்லிணக்கத்துக்கு ஆரோக்கியமாக அமையாது.

எனவே எதிர்காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் தகுதியின் அடிப்படையில் ஏதாவது ஒரு பொருத்தமான திட்டத்தின் கீழ் நிரந்தர நியமனங்களுக்குள் உள்வாங்கப்படவேண்டும்- என்றார். (த)

## இன ஒற்றுமை மேடையில் அல்ல செயற்பாட்டில் காட்டப்படவேண்டும்

### வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு



வவுனியா, நவ. 5

இன ஒற்றுமை மேடையில் அல்ல செயற்பாட்டில் காட்டப்பட வேண்டும் என வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட, வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முகத்தாங்குளம், மருதமடு ஆகிய குளங்களில் சுமார் 90ஆயிரம் நன்னீர் மீன்குஞ்சுகள் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனால் கடந்த திங்கட்கிழமை விடப்பட்டன.

சிங்களவர்கள் வாழும் கிராமமான மருதமடு குளத்தில் மீன் குஞ்சுகளை விட்டபின்னர், அந்தக் கிராம பௌத்த விகாராதிபதியையும், நன்னீர் மீன்பிடியாளர் சங்கத்தினரையும், மக்களையும் சந்தித்து உரையாற்றும்போது அமைச்சர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் வடக்கு மாகாணத்தில் உள்ள குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன. இந்த விடயத்தில் இன, மத வேறுபாடின்றியும் பிரதேச வாதம் இன்றியும் செயற்பாடு இடம்பெறும். வடக்கு பகுதியில் அரசினாலும், ஆக்கிரமிப்பாளர்களினாலும் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இனி வரும் காலங்களில் இந்தக் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த நீங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார் அமைச்சர். (த-86)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, நவ. 5

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட உண்ணாப்புலவு தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவின் சட்டத்தரணி திருமதி பியுமிக்குமாரி சமரசிங்க, 592 ஆவது படையணியின் பிரிகேடியர் எஸ்.எம்.ஜே. செனவிரத்ன, வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இவர்கள் மாணவர்களுக்கான கற்றல் உபகரணத் தொகுதிகளை வழங்கினர்.

(த-433)



## மீன் எழுச்சித் திட்ட 5ஆம் வருட நிறைவு



வவுனியா, நவ. 5

வவுனியா ஸ்ரீராமபுரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீன் எழுச்சித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு 5 வருட பூர்த்தி நிகழ்வு ஸ்ரீராமபுரம் சனசமூக நிலைய மண்டபத்தில் ஸ்ரீராமபுரம் மீன் எழுச்சித்திட்ட தலைவர் ர.ராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட மீன் எழுச்சி பிரதித் திட்டப் பணிப்பாளர் டி.எ.டி.ரஞ்சித், சிறப்பு விருந்தினர்களாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீன் எழுச்சி திட்ட உத்தியோகத்தர்களான சந்திரகுமார், துளசிகன், சஜீவன், குணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் ஸ்ரீராமபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பி.நிசாந்தகுமார், ஸ்ரீராமபுரம் கிராம மாதர் சங்கத் தலைவி திருமதி ரஜனி, ஸ்ரீராமபுரம் மீன் எழுச்சித் திட்டச் செயலாளர் எஸ்.ராமலிங்கம் உட்பட மீன் எழுச்சித் திட்டப் பயனாளிகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-421)

## முரசுமோட்டை மரப் பாலத்தை உடன் புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 5

கிளிநொச்சி, முரசுமோட்டை ஐயன்கோவிலடி கிராமத்துக்கான பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் மரப் பாலத்தைப் புரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவின் கீழ் வரும் ஐயன்கோவிலடி கிராமத்தில் தற்போது 27 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் இந்தக் கிராமத்தின் பிரதான வீதியாகக் காணப்படும் பழைய கண்டி வீதியின் குறுக்கே காணப்படும் மரப் பாலம் சேதமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்தப் பகுதி மக்கள் அச்சத்துடனேயே தினமும் மரப் பாலத்தைக் கடக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் பருவமழை காலங்களில் இதன் ஊடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படும். எனவே குறித்த பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்களும் முரசுமோட்டை பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கண்டாவளைப் பிரதேச செயலாளர் ரி.முகுந்தன், எதிர்காலத்தில் இதனைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (த-55)



பொது சன நூலகம்

# அரசிலிருந்து விலகுவோரின் ஆதரவுடன் வெற்றி நிச்சயம்

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ.5
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் மற்றும் அரசில் இருந்து விலகவுள்ள அணிகளின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
கண்டி பிரதேசத்தில் நேற்று வாக்குச்சாவடி பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சியில் இருந்து பிளவுபட்டு வரும் தரப்பு ஆகியோரின் ஆதரவைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் வேட்பாளர் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதைத் தடுக்க ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (ற)

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசு முனைப்புக் காட்டவில்லை

## அனுரகுமார திஸாநாயக்க குற்றம்சாட்டுகின்றார்




கொழும்பு, நவ.5
நாட்டில் தேசிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஜே.வி.பி கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க குற்றஞ் சாட்டியுள்ளார்.
வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான நாடாளுமன்ற விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
புலம்பெயர் மக்கள் பற்றி அரசு தொடர்ந்தும் ஏன் பேசுகின்றது? அரசு தொடர்ந்தும் கடந்த காலங்களில் வாழ்ந்து வருகின்றது. புலம்பெயர் மக்களுக்கு அஞ்ச வேண்டிய அவசியம் கிடையாது. - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"அரசு தனது இருப்பினைத் தக்க வைத்துக் கொள்ள கடந்த காலத்திலேயே வாழ முயற்சிக்கின்றது.
ஏகாதிபத்திய ஜனாதிபதி முறைமை இந்த நாட்டுக்கு பொருந்தக் கூடியதல்ல. தனியொரு நபரைச் சுற்றி அதிகாரம் கட்டியெழுப்பப்படுவதால் பெரியளவில் பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் பாதக விளைவுகளை மக்களே அனுபவிக்கின்றனர்.
ஜனாதிபதிக்காக நாளொன்றுக்கு 261 லட்ச ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியொரு நபருக்காக இவ்வளவு பாரியளவு தொகை ஒதுக்கீடு செய்யப்படுவதை பெரும் விரயமாகவே கருதுகின்றோம்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# சோதிடர் யோசனைப்படி தேர்தல் ஏளனம் செய்யும் சர்வதேசம்

## கபே அமைப்பு கூறுகின்றது



கொழும்பு, நவ.5
சோதிடர்களின் யோசனைக்கு அமைய தேர்தல் நடத்தப்பட்டால், சர்வதேச சமூகம் எம்மை ஏளனம் செய்யும் என்று தெரிவித்துள்ளது தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே.
ஜனவரி மாதம் 3ஆம், 7ஆம் அல்லது 8ஆம் திகதிகளில் நாட்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும் என சோதிடர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.
எனினும், இவ்வாறு சோதிடர்களின் குறித்துக் கொடுக்கும் தினமொன்றில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி னால் உலக அளவில் நாட் டையும் நாட்டின் தேர்தல் முறைமையையும் மலினப்படுத்தும் வகையில் அமையும் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.
சோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய தேர்தல் நடத்தப்பட்டால் அது இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலகுக்கும் பிழையான முன்னுதாரணமாக அமையும். சில அரசியல் கட்சிகள் ஏற்கனவே இந்தத் திகதிகளின் அடிப்படையில் பரப்புரைப் பணிகளை ஆரம்பித்துள்ளன. தேர்தல் சுயாதீன முறையில் நடத்தப்பட வேண்டியது அவசியமானது.
ஒரு வேட்பாளருக்கு சாதகம் ஏற்படக்கூடிய வகையில் தேர்தல் நடத்தப்படுவது ஆரோக்கியமானதல்ல.
ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)



மீரியாபெத்த தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவையடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பூனாகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் குழந்தைகள் எதையுமாறியாது விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

# ஷிராணியின் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ.5
முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
ஷிராணி பண்டாரநாயக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான தகவல்களை மறைத்தார் என்று தெரிவித்தே குறித்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.
இந்த மனு மீதான விசாரணை நேற்று கொழும்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக நீதிவான் கிஹான் பிலபிட்டிய அறிவித்துள்ளார். ஷிராணி பண்டாரநாயக்க தனியார் வங்கிகளில் பேணிய கணக்குகள் தொடர்பிலான தகவல்களை நீதிமன்றில் அறிவிக்கக் கூடிய இயலுமை வங்கிக்குக் கிடையாது என மத்திய வங்கியின் கண்காணிப்புப் பிரிவு பணிப்பாளர் எல். பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இதேவேளை, குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு முன்னதாகவே சில ஊடகங்களில் வங்கிக் கணக்கு விவரங்கள் வெளியிடப்பட்டது என்று ஷிராணி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார். வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக அறிவித் துள்ளார். (ற)

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நீடிக்கப்பட மாட்டாது என்று அரசு தெரிவித்துள்ளது. அமைச்சர் அநுர பிரியதர் சன யாப்பா இதனை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ அவ்வாறான செயற்பாடு ஒன்று தொடர்பில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே அமைச்சர் ஒருவர் இந்த சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் வெளியிட்ட கருத்து தொடர்பாக தெளிவுபடுத்திய அமைச்சர் அது அவரின் சொந்தக்கருத்து என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# முறைகேடுகளை மறைப்பதற்கு முயற்சிக்கின்றார் பீரிஸ்

## மத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.5
ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையில் ஏற்பட்ட முறைகேடுகளை மறைப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் முயற்சிக்கின்றார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் வடமத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம்சுமத்துகின்றார்.
இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சர் அண்மையில் தெரிவித்த கருத்துக்களை சுட்டிக் காட்டும் வசந்த சமரசிங்க, இது குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
2009 ஆம் ஆண்டு ஜெனீவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதியின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தை புனரமைப்பது தொடர்பான நடவடிக்கையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக வசந்த சமரசிங்க மற்றும் ஜெனீவாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிட பிரதிநிதி தமாரா குணநாயகம் ஆகியோர் தெரிவித்திருந்தனர்.
நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் புனரமைப்பு நடவடிக்கை தொடர்பான கணக்காய்வு அறிக்கையை சுட்டிக்காட்டியே இவர்கள் இந்த குற்றச் சாட்டை முன்வைத்திருந்தனர்.
இந்தக் கணக்காய்வு அறிக்கையின்படி, இதுகுறித்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்த பி.டி.துரைராஜா என்பவரின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும், அவர்கள் தெரிவித்திருந்தனர்.
எனினும், பி.டி.துரைராஜாவுக்கும் புலிகள் அமைப்புக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அதற்கு பதில் வழங்கியிருந்தார்.
இது தொடர்பில், சுவிற்ஸர்லாந்தின் பெடரல் பொலிஸின் பியர் ஈவ்ஸ் ஹீகனன், ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதியின் அலுவலகத்தின் அதிகாரியான யு.ஜவ்காரிடம் வினவியதாகவும், கடிதம் ஒன்றின் மூலம் அதனை உறுதிப்படுத்தியதாகவும் அமைச்சர் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பீடப்பட்டிருந்தது.
எனினும், நிதி அமைச்சின் சிரேஷ்ட நான்கு அதிகாரிகள் தயாரித்த கணக்காய்வு அறிக்கை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என குற்றச்சாட்டை முன்வைக்கும் தரப்பினர் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தனர்.
இந்தப் பின்புலத்திலேயே, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மீண்டும் இது குறித்து கருத்து தெரிவித்திருந்தார். (ற)

# லிங்கா என்ன சொல்கின்றது ?

சூப்பர் ஸ்டார் ரஜினி நடிக்கும் லிங்கா படத்தின் முன்னோட்டம் நவம்பர் முதலாம் திகதி வெளியானது. இணையத்தில் வரவேற்பை அள்ளிக் கொண்டிருக்கும் முன்னோட்டம் பற்றிய ஒரு பார்வை.

ஏழுமலையான் உருவத்தோடு ராக்லைன் நிறுவனப் பெயருடன் ஆரம்பிக்கிறது. மாவட்ட கலெக்டரான ராஜ லிங்கேஸ்வரன் (ரஜினி) கட்டிய அணையின் கல்வெட்டையும் அணையும் ஸ்டைலாக பார்க்கிறார் இன்னொரு ரஜினி. ஏ.ஆர்.ரகுமான் பெயரைத் தொடர்ந்து ரயில் சண்டைக் காட்சியும் பாலத்தை தகர்க்க சிலர் கயிறு கட்டி பாலத்தில் இறங்கும் காட்சியும் இடம் பெறுகின்றது. அதன் பிறகு தயாரிப்பாளர் ராக் லைன் வெங்கடேஷ் பெயரும். அடுத்து சூப்பர் ஸ்டார் ரஜினி பெயரும் இடம்பெறுகிறது. பிரம்மாண்ட செட்டுக்களில் ரஜினி, அனுஷ்கா ஆடுவது சிவாஜி படத்தின் செட்டுக்களை நினைவுபடுத்துகிறது. மனிதன் படத்தில் தோல் சட்டை அணிந்து வருவார் ரஜினி. அதுபோன்ற ஒரு காட்சியும், சிவாஜி படத்தில் 'தீ தீ... ஜெகஜோதி ஜோதி...' பாடலில் வரும் ஒரு துப்பாக்கி ஸ்ரைலை



இதிலும் நிகழ்த்துகிறார். கலெக்டர் ரஜினி மக்களுக்கு நடுவில் பட்டுவேட்டி, பட்டு சட்டை அணிந்து நடந்து வருவது, படையப்பா ஸ்டைலில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்திருப்பது, கோட்டை தூக்கி தோளில் போட்டு வருவது என்று காட்சிகள் இடம் பெறுகின்றன.

முன்னோட்டத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகளை வைத்துப் பார்க்கும்போது ஆங்கிலேயர் ஆட்சியில் ராஜ லிங்கேஸ்வரன் கட்டிய அணைக்கு நிகழ்காலத்தில் ஓர் ஆபத்து வருகிறது. அதனை இன்றைய ரஜினி எப்படிக் காப்பாற்றுகிறார் என்பதுதான் கதை என்பது தெளிவாகிறது.

பாடல் காட்சிகளும், சண்டை காட்சிகளும் பிரம்மாண்டமாக படம் பிடிக்கப்பட்டுள்ளன. படத்தில் மூன்றாவதாக ஒரு ரஜினி இருக்கிறார். அது முன்னோட்டத்தின் எந்த இடத்திலும் இடம்பெறாமல் சஸ்பென்ஸாக வைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ரஜினி 80ஆம் ஆண்டுகளில் இருந்த அதே தோற்றத்துடன், அழகுடன், ஸ்ரைலுடன், வேகத்துடன் இருப்பதுதான் முன்னோட்டத்தின் முக்கியம்.

# குறை கண்டுபிடித்தால் பரிசு



சமூக வலைத்தளமான பேஸ்புக் இலங்கை, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பல முக்கிய நாடுகளில் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இத்தளத்தில் குறைகள் அல்லது தவறுகள் ஏதேனும் இருப்பின், அதனை கண்டுபிடிப்பவர்களுக்கு பேஸ்புக் நிறுவனம் பரிசுத் தொகையை வழங்கி வருகின்றது. தற்போது இந்தத் தொகையை பேஸ்புக் இரட்டிப்பாக்கியுள்ளது.


பரிசுத் தொகை அதிகரித்திருக்கும் நிலையில், போட்டியும் அதிகரித்து வருகிறது. கூகிள் நிறுவனத்துக்குப் போட்டியாக இணையத்தில் விளம்பரத்தின் மூலம் வியாபாரத்தை பெருக்க பேஸ்புக் நிறுவனம் ஒரு மென்பொருளைத் தயாரித்துள்ளது.

இதில் உள்ள பிரச்சினைகளை கண்டறிய பேஸ்புக் நிறுவனம் 'வெயிட் ஹேக்கர்களை' நாடியுள்ளது. பொதுவாக இணையத்தளத்தில் ஓட்டைகளை கண்டுப்பிடிப்பவர்கள் அனைவரும் 'ஹேக்கர்களாக' தான் இருப்பார்கள்.

இதுகுறித்து பேஸ்புக் அதிகாரிகள் கூறுகையில்; எங்கள் தளத்தை சிறந்த பணியாளர்களைக் கொண்டு மிகவும் சிறப்பான மற்றும் பாதுகாப்புடன் வடிவமைத்துள்ளோம். இதனால் 'வெயிட் ஹேட்ஸ்' மூலம் நாங்கள் எந்த இடத்தில் தவறு செய்துள்ளோம் என்பதை தெரிந்துகொள்ளவே இந்தப் பரிசுத் தொகை என்று கூறினார்கள்.

'வெயிட் ஹேட்ஸ்' என்றால் என்ன? ஹேக்கிங் செய்பவர்களில் இரண்டு வகையினர்கள் உள்ளனர். பிளாக் ஹேட்ஸ் மற்றும் வைற் ஹேட்ஸ். இதில் பிளாக் ஹேட்ஸ் சட்டத்தை மீறி சமூக விரோதமான செயல்களில் ஈடுபடுபவர்கள். உதாரணமாக இண்டர்நெட் மூலம் வங்கிக் கணக்கில் பணம் திருடுபவர்கள். வைற் ஹேட்ஸ் எனப்படுவர்கள் இணையத்தளத்தில் இருக்கும் ஓட்டைகள் கண்டுப்பிடிப்பது, பிளாக் ஹேட்ஸ் வேலைகளை தடுப்பது போன்றவற்றைச் செய்பவர்கள்.

# ரிலாக்ஸா வாசியுங்க



அம்புலன்ஸ்ஸை பார்த்தவுடனே
ஒதுங்கி நிக்கிறவன்
வெளிநாட்டுக்காரன்...

அம்புலன்ஸ் பின்னாடியே போனா
சீக்கிரம் போயிடலாம்,
கண்டுபிடிச்சவன் நம்மூர்க்காரன்...

# கடலில் ஹோட்டல்



டுபாயில், உலகின் மிக பெரிய ஆடம்பர ஹோட்டலில் ஒன்றான புர்ஜ் அல் அராப் அமைந்துள்ளது. இது 7 ஸ்டார் ஹோட்டல். இந்த ஆடம்பர ஹோட்டல் 322 மீற்றர் உயரமுள்ள கட்டடமாகும். கடற்கரையிலிருந்து 280 மீற்றர் தொலைவில் கடற் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விடுதிக்குச் செல்வதற்காகவே கட்டப்பட்ட பாலம் ஒன்று இந்த ஹோட்டலை நிலப்பகுதியுடன் இணைக்கின்றது. டுபாய் நகரத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாக உலக அளவில் அறியப்பட்ட கட்டடமாக இது திகழ்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன் இங்குள்ள ஹெலி இறங்கும் தளத்தில், ரென்னிஸ் மைதானம் அமைக்கப்பட்டு, உலகின் முன்னணி வீரர்கள் இங்கு விளையாடினர். இதன் மூலம் உலகின் உயரமான இடத்தில் அமைந்த ரென்னிஸ் விளையாட்டு மைதானம் என்ற சாதனையையும் இந்த ஹோட்டல் பெற்றது. இங்கு ஓர் இரவு தங்குவதற்கு குறைந்த பட்ச வாடகை ஒரு லட்சத்துக்கு மேலாகும். 1994ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கப்பட்டது. 1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டது. எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி 15 ஆவது ஆண்டினை நிறைவு செய்வதைக் கொண்டாடும் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**பெண்களுக்கு பிறந்த வீடு புகுந்த வீடு என இரண்டு வீடுகள் இருக்கும்போது...**



**ஆண்களுக்கு பெரிய வீடு சின்னவீடு என இரண்டு வீடுகள் இருக்கக்கூடாதா???**

# கதாநாயகியான நீலிமா

ராதிகா நடித்து, தயாரிக்கும் தொடர்களுக்கு தனி இடம் உண்டு. சித்தி, அண்ணாமலை, செல்வி, அரசி, செல்லமே, வாணி ராணி, இளவரசி தொடர்களை தொடர்ந்து அடுத்து அவர் தயாரித்து நடிக்கும் தொடர் தாமரை.

ராதிகா நிறுவனத்தின் ஆஸ்தான நடிகை நீலிமா ராணி. சில காலம் சின்னத்திரையை விட்டு ஒதுங்கி இருந்த நீலிமாவை இளவரசி தொடர் மூலம் சின்னத்திரைக்கு அழைத்து வந்தார்கள். தற்போது அவர் தயாரிக்கும் தாமரை தொடரிலும் கதாநாயகியாக்கி விட்டார். நீலிமா ராணியுடன் அஸ்வின், சாய்லதா, டி.வி.வரத ராஜன், எல்.ராஜா, பபிதா, சாய் பிரசாந்த், ஸ்ரீராம் பார்த்தசாரதி, ஸ்வப்னா, சாம்பவி, ஸ்ரீதர், ராணி, ஜெய்ராம் ஆகியோர் நடிக்கிறார்கள். ராதிகாவின் சகோதரியும் முன்னாள் கதாநாயகியுமான நிரோஷா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். தேவி பாலா கதை மற்றும் திரைக்கதையை எழுதுகிறார், பிரசன்னா வசனம் எழுதுகிறார், விக்ரமன் ஒளிப்பதிவு செய்கிறார். எம்.கே.அருந்தவராஜா இயக்குகிறார். ராதிகாவின் ராடான் மீடியா தயாரிக்கிறது. நடுத்தர மக்களின் வாழ்க்கையில் உறவுச் சிக்கலையும், வாழ்க்கைச் சிக்கலையும் சொல்லப்போகும் தொடர். இதுவரை எந்தத் தொடரிலும் கையாளாத ஒரு புதுப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு கதையை நகர்த்த இருக்கிறார்கள்.



# யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில்

## கணித ஆசானாக பாட இணைப்பாளராக பகுதித் தலைவராக சேவையாற்றிய

# உயர்திரு ஜெகநாதன் குமாரதேவன் Maths Trd SLTS-I

Happy Birthday

## அவர்களின்

# சேவை நலன் பாராட்டும்

05.11.2014

# அகவை அறுபதில் பிறந்த நாள் வாழ்த்தும்

### ஆசிச்செய்தி

ஜெ.குமாரதேவன் அவர்கள் அகவை அறுபது எய்தி மணிவிழாக் காண்கின்றார். இவர் நீண்ட காலமாகக் கல்லூரியில் பணியாற்றிப் பல்வேறு பதவி நிலைகளை வகித்த பெருமைக்குரியவர். இவர் மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிகுந்த அக்கறையுள்ளவர். எவரையும் மனம் நோகப் பேசியறியாத இவரது பண்புமற்றவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கது. இவர்து ஒய்வுக்காலம் சிறப்புற எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப் பிரமணியப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

லோஹா சமஸ்தா சுகினோபவந்து.

சிவஸ்ரீ.க.சிவராசக்குருக்கள்,
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்.

### நிபுணத்துவத்துடன் கணிதத்தைக் கற்பித்தவர்

எமது கல்லூரியின் கணித ஆசானாய்ப் பகுதித்தலைவராய், பத்தாண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி தமது அறுபதாவது அகவையில் அகமகிழ்வுடன் சேவையில் இருந்து ஓய்வினைப் பெற்றுக் கொள்ளும் மதிப்பார்ந்த ஜெகநாதன் குமாரதேவன் அவர்களுக்குப் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் அளிப்பதில் பெருமகிழ்வெய்துகின்றேன். ஆசிரிய சேவையில் 35ஆண்டுகள் நிறைவு செய்தவர். ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மத்திய மாகாணத்தில் கடமையாற்றியவர். 4ஆண்டுகள் வன்னிப்பிராந்தியத்திலும் கடமையாற்றியவர். பல்வேறு பிரதேசங்களிலும் சேவையாற்றியமையால் பல்பரிமாண சிந்தனைக் கோலத்தைக் கொண்டவராக விளங்கியவர். விஞ்ஞானத்துறையில் தேர்ச்சிமிக்கவராக இருந்த இவர் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக நிபுணத்துவத்துடன் மாணவர்களுக்குக் கணிதத்தைக் கற்பித்தவர். அன்பு அடக்கம், அமைதி, செயல்திறன்மிக்க ஆளுமைப் பண்புகளால் ஆசிரியர் நலன்புரி கழகத்தின் தலைவராக இருந்து ஆற்றிய செயற்பாடுக்ள் அளப்பரியன. குறிப்பாக சகல ஆசிரியர்களுடன் நல்லுறவை மேம்படுத்திக் கொண்ட பெருமை இவருக்குரியது. இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களினதும், உயர்வு பெற்றுச் சென்ற அதிபர்களினதும் விழாக்களை மிகக் கச்சிதமாக முன்நின்று நடத்தி முடித்தவர். கல்லூரியில் மூன்று அதிபர்களின் கீழ் கடமையாற்றிய இவர் அவர்களின் நிர்வாக விடயங்களில் பங்குதாரராக விளங்கியதோடு, பெரும் ஒத்துழைப்பையும் வழங்கியமை பாராட்டிற்குரிய. வயதினால் கிடைக்கப்பெற்ற ஓய்வானாலும் உடலாலும் உள்ளத் தாலும் கிடைக்கப்பெற்ற ஓய்வாகக் கருதாமல் சேவைக்காக என்றென்றும் இக்கல்லூரி தொடர்ந்து இவரை அழைத்து நிற்பதோடு, இக்காலம் மகிழ்வும் மலர்ச்சியும் செழுமையும் நிறைந்ததாக விளங்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வே.ஞானகாந்தன்-அதிபர்.

### கணிதம் கற்பிப்பதில் விற்பன்னர்

ஜெ.குமாரதேவன் அவர்கள் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். கணித ஆசிரியராக, கணிதபாட இணைப்பாளராகப் பகுதித்தலைவராகப் பல பரிமாணங்களில் இவரது சேவைவிரிவடைந்துள்ளது. மாணவர்களுக்குச் சிக்கலான கணித எண்ணக் கருக்களை இலகுவாகப்புரியவைப்பதில் கைதேர்ந்தவர். பாட இணைப்பாளராக இவர் கடமையாற்றிய காலப்பகுதியில் கணிதபாடத்தின் சித்தி 95 வீதமாக அதிகரித்தமை சிறப்பம்சமாகும். எண்ணம், சொல், செயல் என்பனவற்றில் நிதானமும் உறுதியும் மிக்கவர். எடுத்தகாரியங்கள் எதனையும் இலகுவாக நடத்தி முடிக்கும் ஆற்றல் மிக்கவர். யாவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர். அமைதியும் அடக்கமும் மிக்கவர். இதனால் எல்லோரிடத்திலும் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமாக விளங்கியுள்ளார்.ஓய்வுக்காலத்தில் குடும்பத்தினருடன் சிறப்புற்று வாழவும் தொடர்ந்தும் மாணவ சமுதாயத்திற்குக் கல்விப்பணியாற்றவும் வாழ்த்துகின்றேன்.

அ.அகிலதாஸ்,
(முன்னாள் அதிபர்),
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

### அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்

ஆசிரியர் சேவையில் ஓய்வுபெறும் ஜெ.குமாரதேவன் ஆசிரியர் அவர்களின் சிறப்புக்களையும் மகிமையையும் பிரஸ்தாபிப்பதற்கு இவ்விதழ் போது மானதல்ல. எனினும் ஒரு சில வார்த்தைகளைக் கூறுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சிய டைகின்றேன். கணிதபாடம் கற்பிப்பதில் ஆழ்ந்த கல்வியறிவும் நிரம்பிய அனுபவமும் அர்ப்பணிப்பான செயற்பாடுகளும் அவருடைய சிறப்பம்சங்களாகும். எமது கல்லூரியில் இல்ல மெய்வல்லுனர்ப்போட்டிகளில் நாகலிங்கம் இல்லத்தின் இல்லப் பொறுப்பாசிரியராக இருந்து எமது இல்லம் தொடர்ந்து வெற்றிபெற உழைத்தவர்.

ஆசிரியரது அர்ப்பணிப்பான சேவை காரணமாக சேவை ஓய்வுகாலத்தை நெருங்கியபோதும் ஆசிரியர் கழகத்தின் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரை ஆசிரியர் கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் நன்கு திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி வெற்றி கண்டவர். அவரது ஓய்வுக்காலம் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆசிரியர்குழாம் சார்பில் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோ. முகுந்தன்- செயலாளர், ஆசிரியர்கழகம்



### சேவை விவரம்

| | |
|---|---|
| நு/டிம்புல த.ம.வி | 1979.06.01-1980.07.31 |
| நு/புனித பொஸ்கோ ம.விஅட்டன் | 1980.08.01-1981.05.31 |
| நு/கொட்டக்கலை த.ம.வி | 1981.06.01-1982.03.02 |
| நு/கணபதி த.ம.வி நோட்டன் பிறிச் | 1982.03.03-1982.12.31 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | 1983.01.01-1984.12.31 |
| கிளி/தருமபுரம் ம.வி | 1985.01.01-1989.05.31 |
| யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை | 1989.06.01- 2003.12.31 |
| யா/கோண்டாவில் இ.ம.வி. | 2004.01.01-2004.06.08 |
| யா/கொக்குவில் இ.கல்லூரி | 2004.06.09-2014.11.04 |

### ஆசிரியப் பண்புக்கு இலக்கணமாக விளங்கியவர்

ஜெ. குமாரதேவன் ஆசிரியர் நீண்டகாலத்துக்கு முன்னரே எனக்கு அறிமுகமானவர். நான் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவேளை என்னுடன் ஆசிரியராய்ப் பணிபுரிந்தவர். பின்னர் தெல்லிப்பழை மகாஜன கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். நான் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அதிபராக வந்த தகைத் தொடர்ந்து இவரும் இந்தக் கல்லூரிக்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்திருந்தார். கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமை யாற்றியபின் இன்று சேவையிலிருந்து இளைப்பாறும் இவர் சிறந்த கணிதபாட ஆசிரியராக திகழ்ந்ததுடன், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு ஏற்ற முறையில் கற்பித்து அவர்களையும் பரீட்சையில் சித்தியடையச் செய்த பெருமைக்குரியவர். சாந்தமான குணமுடைய இவர் மாணவர்களுடன் அன்பாகப் பழகி பாடத்தினைப் போதிக்கும் பண்புடையவராக விளங்கியமையால் மாணவர்களும் இவர்மீது மதிப்பும் அன்பும் கொண்டிருந்தனர். இவர் கற்பித்தற் பணியுடன் மட்டும் நின்று விடாது தனது சேவைக் காலத்தில் பாடசாலை நிர்வாகத்துக்கு உதவும்வகையில் கணிதபாட இணைப்பாளர், பகுதித்தலைவர், இல்லப் பொறுப்பாசிரியர் பதவிகளையும் வகித்ததுடன் ஆசிரி யர்கழகத்தலைவராகவும் செயற்பட்டிருந்தார். இவரது ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துவதுடன், ஆசிரியப் பணி தொடரவும், மாணவ சமூகம் பயன் பெறவும் ஏற்ற வகையில் எல்லா நலன்களையும் இறைவன் இவருக்கு அருளவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

பொ.கமலநாதன்- இளைப்பாறிய அதிபர்.

### ஒரு தசாப்த காலம் கால் பதித்தவர்

எங்கள் கல்லூரியில் ஜெகநாதன் குமாரதேவன் அவர்கள் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித் தலைவராக தமது சேவையை மேற்கொண்டவர். நான் பாடசாலையில் இருந்த காலத்தில் அவருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக இருந்து கணிதபாடத்தில் கீழ்மட்ட மாணவர்களை பரீட்சையில் சித்தியடையச் செய்துள்ளார். நாகலிங்கம் இல்லப் பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களைப் விளையாட்டுப் போட்டியில் ஈடுபடச்செய்து தொடர்ச்சியாக முதலாமிடத்தைப் பெற்ற பெருமை இவரையேசாரும். இவர் பாடசாலை ஆசிரியர் கழகத்தலைவராக இருந்து ஆசிரியர்களின் நடவடிக்கைகளை சிறப்பாக நடத்தியதுடன் ஆசிரிய நலன்களில் அக் கறையாக இருந்தார். யாருடன் பழகும் போதும் மற்றவர்களின் மனம் புண்படாத படி நடந்து கொள்வார். இவரது ஓய்வு கல்லூரிக்கு இழப்பாக இருந்த போதும் ஓய்வு என்பது தவிர்க்க முடியாதது.எனவே ஓய்வுக்காலம் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் நிறைவா கவும் அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

மு. வேலாயுதபிள்ளை
தலைவர்,
பழைய மாணவர்சங்கம்.

### தன்னலமற்ற சேவையாளர்

ஆசிரியர் என்பார் மாணவ மணிகளிடத்தே கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்பித்து அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டவர்கள். இத்தகைய உன்னத இலட்சியத்தோடு கல்விக்களம் புகுந்து பகுதித்தலைவராகவும், சிறந்த கணிதபாட ஆசிரியராகவும் 35 வருடங்கள் நிறைவான சேவையை கல்விச் சமூகத்திற்கு வழங்கி நிறைவோடு தனது சேவையை நிறைவு செய்து கொள்ளும் ஜெ.குமாரதேவன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாண கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலை களுள் ஒன்றாக விளங்கும் யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் கணித பாடத்தில் சிறந்த பெறுபேறுகளை மாணவர் பெற்றுக் கொள்ள தன்னலமற்ற சேவையை வழங்கிய ஆசிரியர் ஜெ.குமாரதேவன் அவர்கள் ஓய்வு நிலைக் காலத்தே ஒளிமயமான வாழ்வைப் பெற இறையருளை வேண்டுகின்றேன்.

செ.உ.தயகுமார்
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

### பணிநிறைவு நாளில் மனம்நிறைந்த வாழ்த்துக்கள்

அரசசேவையில் ஓய்வுபெறுவது அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பொதுவானது. மட்டுப்பாடுகள் கல்விப் பணிக்குத் தடையாக அமைவதில்லை. கல்வி என்பது கருவறையில் இருந்து கல்லறை வரை தொடர்வதாகும். கொக்குவில் இந்துக்கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றிய ஜெகநாதன் குமாரதேவன் அவர்கள் 05.11.2014இல் ஓய்வுபெறுகிறார். கணித ஆசிரியராக பல மாணவர்களின் கல்விப் பயணத்தில் வழிகாட்டியாக விளங்கியவர்.

வேலணையில் புகழ் பூர்த்த ஒரு ஆசிரியர் குடும்பத்தில் பிறந்தவர் குமாரதேவன் அவர்கள். புலவர், கவிஞர் ஜெகநாதன் ஆசிரியருக்கும் முத்துப்பிள்ளை ஆசிரியருக்கும் மகனாகப் பிறந்தவர். இவருடைய தந்தையார் நல்ல ஒரு கவிஞர். எமது ஊரில் ஆலயங்கள் பேரில் பல பாடல்களைப் பாடியுள்ளார். இவரது குடும்பமும் ஒரு ஆசிரியர் குடும்பமாக இருப்பது மேலும் பெருமைக்குரியது.

வேலணை மத்திய கல்லூரியில் 1965/1975இல் நானும் எனது நண்பர்களும் குமாரதேவன் அவர்களும் கல்வி கற்றவர்கள். நாங்கள் ஒரே கூட்டில் வளர்ந்தவர்கள். மிக அமைதியானவர், பழகு வதற்கு மிக இனிமையானவர். தொடர்புகள் பல காலம் இல் லாமல் இருந்தபோதும் மீண்டும் தொடர்புகள் ஏற்பட்டது.கொக்குவில் இந்துவில் ஆசிரியராக,கணித பாட இணைப் பாளராக பகுதித் தலைவராக உயர்ந்தது மாத்திர மன்றி ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் தலைவர் பதவியை வகித்து ஆசிரியர்களின் நலன்களுக்காக உழைத் தவர். ஆசிரியர் குடும்பத்தில் பிறந்து ஆசிரியர் குடும்பமாக மாறி கல்விக்குத் தொண்டாற் றியிருக்கிறார். இவரது சகோதரர்களும் வேலணை மத்திய கல்லூரியில் கற்றவர்கள் கல்வியில் உயர்ந்து மதிப்பும் பெருமையும் பெற்றவர்கள் இவர்கள் குடும்பம்.

ஓய்வுக் காலம் மகிழ்வாக நலமாக அமைய எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இவரும் இவர்களது குடும்பமும் மேன்மேலும் மேன்மையடைய எல்லாம் வல்ல வேலணை பெருங்குளம் முத்து மாரி அம்பாளின் பாதர விந்தங்களைப் பணிகின்றேன்.

பொன்னம்பலம் அருணகிரிநாதன்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்.
(கல்வி முகாமைத்துவம்),
யாழ்ப்பாணக் கல்வி வலயம், யாழ்ப்பாணம்.

### நல்ல தொடர்பாளர்

கல்வித்துறைக்குப் பொருந்தாத அரசாங்கத்தின் மாற்றத்திற்கான மாற்றம் எனும் கொள்கையானது தேவைக்கான மாற்றம் எனும் கோட்பாட்டினை உதாசீனம் செய்கின்றது. அதன்பலனாக பாடசாலை - சமூகத்தொடர்பு நலிவுறுகின்றது. இப்படியான ஒரு கால கட்டத்தில் ஜெ. குமாரதேவன் அவர்கள் எமது கல்லூரிக்கு மாற்றம் பெற்று வந்தார். நல்ல தொடர்பாடலையும் சிறந்த உறவினையும் உருவாக்கக் கூடிய குமாரதேவன் கல்லூரிச் சமூகத்துடன் நல்லுறவினை ஏற்படுத்தக்கூடியவராக இருந்தார். இக்குணாதிசயம் அவரை ஒரு சிறந்த கணித ஆசிரியர் மட்டுமல்லாது பகுதித்தலைவர், இல்லப்பொறுப்பாசிரியர், ஆசிரியர் கழகத் தலைவர் போன்ற பொறுப்பான பதவிகளையும் திறமையாக வகிப்பதற்கு உறுதுணையாக இருந்தன. அவர் நீண்டகாலம் வாழ்ந்து கல்விக்கு தொடர்ந்தும் சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

அ.பஞ்சலிங்கம் முன்னாள் அதிபர்,

### ஆசிரியர் திலகம்

குமாரதேவன் அவர்கள் சிரித்த முகத்துடனும் துடிப்புடனும் தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் ஆற்றல் மிக்கவர். பிரச்சினைகளைக் கண்டு துவண்டுவிடாமல் அவற்றைத் தனது ஆளுமையினாலும் அனுபவ முதிர்ச்சியினாலும் எதிர்கொண்டு பாடசாலையின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாக செயற்பட்டவர். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அணுகுமுறை அவருக்கே உரித்தானது. கடமையில் கண்ணியமும் ஒழுக்கத்தில் உயர்வும் கொண்ட அவரது கற்பித்தல் முறைமை ஏனையோருக்கு எடுத்துக்காட்டாகும். குமாரதேவனின் ஆசிரியர்கழக தலைமைத்துவம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குக் கிடைத்த பெருமையாகும். அவரது ஓய்வு பாடசாலைக்குப் பேரிழப்பு ஆகும். அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

S.K.கண்ணதாசன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக்குழு

(சி.17547)
(4.3.6)

**ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக்கல்லூரி**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மோடிக்கு வந்துள்ள சோதனை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் நிர்வாகம் 'பெட்டிக்கோட் அரசாங்கம்' என்று பழிக்கப்பட்டது. காரணம், காங்கிரஸ் தலைவியான சோனியா காந்தி சொல்வதை மட்டுமே அவர் செய்து வந்தார் அல்லது செய்ய முடிந்தது என்பதுதான். துணிச்சலான - அதிரடியான - முடிவுகளை எடுத்துச் செயற்படுத்த முடியாதவராக மன்மோகன் தனது ஆட்சிக் காலம் முழுவதும் இருந்ததற்கு சோனியாவைக் குறை கூறினாலும், பொருளியல்துறை வல்லுநரான அவரது இயல்பான சுபாவமாகவும் அதுவாகவே இருந்தது.

அயல் நாடான இலங்கையில் கொழும்பு அரசு, விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று கூறிக்கொண்டு தமிழர்கள் மீது நடத்திய போரில் நிகழ்ந்த குற்றங்களில் இந்தியா பங்காளியானதும் அதனது இந்தக் கையாலாகாத்தனத்தினாலேயே என்றால் அது பொய்யில்லை. இறுதிவரை திடமான முடிவுகளை எடுக்கமுடியாமல் இழுபட்டு, கொழும்பின் வாக்குறுதிகளை மட்டும் நம்பி அதற்கு உலக அரங்கில் ஆதரவளித்து கொழும்பின் குருதிக் கறைகளை தனது கைகளிலும் பூசிக் கொண்டது இந்தியா. மோடியைச் சந்திக்கச் சென்ற கூட்டமைப்பினர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த போதுகூட அவர், ராஜபக்ஷக்கள் வழங்கிய வாக்குறுதிகள் குறித்தே கலந்துரையாடிக் கொண்டிருந்துள்ளார். அந்தளவுக்கு அப்பாவியாக கொழும்பை நம்பினார் எனலாம். இதற்கெல்லாம் காரணம் மன்மோகன் சிங் அடிப்படையில் நிர்வாக ஆளுமையற்றவர் என்பதும் அவர் நடத்தியது - 'பெட்டிகோட் அரசாங்கம்' என்பதும்தான் என்றும் சொல்லப்பட்டது.

ஆனால் மோடி பிரதமரானபோது நிலைமை அப்படியல்ல. மோடி மன்மோகன் சிங் போன்றவர் அல்லர் என்று அடித்துச் சொன்னார்கள். உறுதியானவர், முடிவுகளை எடுப்பதிலும் அவற்றைச் செயற்படுத்துவதிலும் அவர் சிறந்தவர் என்றார்கள். சரியோ பிழையோ குஜராத் கலவரத்தில் மோடி எடுத்த முடிவுகளைக்கூட உதாரணமாகக் காட்டுகிறார்கள் சில அரசியல் அவதானிகள். மன்மோகன் சிங்கைவிட மோடி எல்லா விதத்திலும் சிறந்தவர், இந்தியாவின் மிகச் சிறந்த ஆளுமை; முடிவுகள் எடுப்பதில் வல்லவர் என்பதே அதன் அர்த்தம்.

இலங்கை அரசியல் சிக்கலிலும் மோடியின் ஆரம்ப அணுகுமுறைகள் அப்படியே இருந்தன. கொழும்பு அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடனான முதல் சந்திப்பிலேயே இனப்பிரச்சினை விடயத்தை எழுப்பினார். கொழும்பின் விருப்பமின்மைக்கு மத்தியிலும் கூட்டமைப்பின் தலைவர்களை டில்லிக்கு அழைத்துச் சந்தித்தார்.

கொழும்பின் முன்பாக தீர்க்கமான ஓர் ஆளுமையாக மோடி தன்னை நிலைநிறுத்திக் கொள்வார் என்கிற நம்பிக்கையை இவை தமிழ் அரசியல் தலைவர்களிடம் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

இத்தகைய ஒரு நிலையில் - பின்னணியில் - சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புக்கு அடிக்கடி வர ஆரம்பித்திருக்கின்றன. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை டில்லிக்கு அழைத்து இது தொடர்பிலான தமது ஆதங்கத்தை - விருப்பமின்மையை - டில்லி தெரிவித்த பின்னரும் சீன நீர்மூழ்கி மற்றும் போர்க் கப்பல்கள் வந்து சென்றிருக்கின்றன. கொழும்புத் துறைமுகத்திற்கு போர்க் கப்பல்கள் வந்து செல்வது ஒன்றும் புதிதில்லை என்று கணக்குப் பட்டியலைச் சமர்ப்பித்து விளக்கமளிக்கிறது கொழும்பு.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது மோடியின் ஆளுமையை, அவரது முடிவெடுக்கும் அதிகாரத்தை கொழும்பு சோதித்துப் பார்க்கிறதோ என்று தோன்றுகின்றது. மோடிக்கு இது சோதனைக் காலம்தான். மன்மோகனைவிட அவர் வல்லவர் என்பதை கொழும்பின் மீது நிரூபிப்பதற்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார் போல் தோன்றுகின்றது.

# ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக அலரிமாளிகையில் 'விசுவாசிகள்' குழு

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து கோகுலன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் பிரதான கட்சிகள் அதற்காக தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வதில் தீவிரமாக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இவைகளில் மிக வேகமாக தமது பணிகளை ஆரம்பித்திருப்பவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் என்று கூறலாம். அவர்கள் தமது தரப்பிலான வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அதிகப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற வகையில் சுறுசுறுப்புடன் செயலாற்றத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தக் கட்சியின் தேர்தல் மத்திய நிலையமாக அலரிமாளிகை மாற்றம்டைந்துள்ளது. இதில் முன்னிலை வகித்து பணிபுரியும் பஸில் ராஜபக்ஷ தமது அமைச்சுப் பணிகளை ஒதுக்கி வைத்து விட்டு பணியாற்றத் தொடங்கியிருக்கிறார். தனது பொறுப்புகளில் மிகக் கவனமாக இருக்கும் அவர். அலரிமாளிகை மத்திய நிலையத்திலேயே அதிக நேரத்தை செலவு செய்கிறார். மாகாண சபைகளின் உறுப்பினர்களின் கூட்டங்கள். முன்னாள் கூட்டுத் தாபன தலைவர்கள் போன்றவர்களின் கூட்டங்களை நடத்தி அவைகளுக்கு தலைமை வகிப்பதுடன் தேர்தல் தொகுதிகளில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு பரப்புரைப் பணிகளிலும் இறங்கியுள்ளார்.

இவர்களின் தேர்தல் பணிகளின் தீவிரத்தன்மையை, அதற்காக அந்த மத்திய நிலையத்தில் அவர்கள் செய்துள்ள ஏற்பாடுகளில் இருந்து கண்டுகொள்ளலாம். 160 கணினிகளுக்கு 160 மேசைகள் போடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொகுதிக்கானது. இந்த மேசைகளில் அமர்ந்து வேலை செய்பவர்கள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளில் இருந்து வரும் விவரங்களை தமது கணினிகளில் பதிவேற்றம் செய்துகொள்கிறார்கள். வாக்காளர்களின் குறைபாடுகள் எந்தெந்த இடங்களில் அவை அதிகமாக காணப்படுகின்றன போன்றவற்றை இவர்களிடம் நினைத்த மாத்திரத்தில் பெறக்கூடியதாக இருக்கிறது. அதுபோலவே எதிர்த் தரப்பினர்களின் செல்வாக்குள்ள பகுதிகளின் தேவைகள் போன்றவையும், அவர்களுக்கு அத்துப்படியாக விருக்கும். அரசியல் பணிகளில் மிகத் திறமையானவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மிக விசுவாசமானவர்களும் மட்டுமே இந்தப் பணிக்கான ஒருங்கிணைப்பாளர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு சுண்டிப் பார்த்து தெரிவுசெய்யப்பட்டுள்ள தொண்டர்களின் தெரிவுகள் ஜனாதிபதி தேர்தலுக்கப்பாலும் பயன்படுத்தப்படுவதாய் இருக்குமோவென்று அரசு தரப்பிலுள்ள பழைய பிரமுகர்கள் மத்தியில் ஒரு வித கலக்கம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் வரக்கூடிய பொதுத் தேர்தலில் இவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்படலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ஆனால் அது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே ஜனவரி 8ஆம் திகதி நடைபெறலாம் என்பது வேறு ஒரு பிரச்சினையையும் தோற்றுவித்துள்ளது. அது பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகையாகும். அவர் ஜனவரி 13ஆம் திகதி இலங்கைக்கு வருவதாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடு இன்னமும் மாற்றம் செய்யப்படாமல் இருக்கின்றது. வத்திக்கானிலிருந்து பிரதிநிதிகள் குழுவொன்று இங்குள்ளள நிலைமைகளை ஆராய்ந்து திட்டமிட்டபடி பாப்பரசரின் வருகை இடம்பெற வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக கடந்த சனிக்கிழமை இலங்கைக்கு வந்தது. பாப்பரசரின் வருகை இப்போது திட்டமிடப்பட்டுள்ளபடி நடைபெறவேண்டும் என்பதில் அரசு ஆர்வமாக உள்ளது. வத்திக்கானின் நிலைப்பாடு குறித்து அரசுத் தலைவர்களுக்கு கொழும்பு பேராயரும் கருதினாலுமான மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஒன்று நடக்க விருக்கும் ஒரு நாட்டுக்கு தேர்தல் தினத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக அல்லது ஒரு மாதத்துக்கு பின்னதாக மாத்திரமே பயணம் மேற்கொள்வது பாப்பரசர் சம்பிரதாயமாக இருந்து வருவதை அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பேராயர்கள் திருச்சபை உறுப்பினர்கள் கூட்ட மொன்றில் உரை நிகழ்த்தினார். நாட்டின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த 14 பேராயர்கள் திருச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். யாழ்ப்பாணம் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் மற்றும் திருகோணமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியவர்களைத் தவிர ஏனையவர்கள் திருச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

பாப்பரசரின் வருகையையொட்டி உயர்மட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று செயலாளர் கோத்தபாய அவர்களுக்கு உறுதியளித்தார். அவரது வருகை இடம்பெறாமல் போகுமானால் இங்குள்ள கத்தோலிக்க மக்கள் மாத்திரமன்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும்கூட ஏமாற்றமடைவதாய் இருக்கும் என்று அவர் விளக்கமளித்தார். அது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு அவமானமாக இருக்கும் என்று அவர் எடுத்துக் கூறினார். நாட்டில் இடம்பெறும் சகல நிலைமைகளும் வத்திக் கானுக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றன. பாப்பரசரின் இலங்கைக்கான பயணம் பற்றி வத்திக்கானில் உள்ளவர்கள்தான் முடிவு செய்வார்கள் என்று பேராயர்கள் விளக்கமளித்தார்கள். பாப்பரசரின் வருகை குறித்த தினத்தில் இடம்பெறுமா இல்லையா என்பது பற்றிய தீர்மானம் இலங்கை வந்துள்ள வத்திக்கான் குழுவினர் நாடு திரும்பிய பின்னரே எடுக்கப்படும் என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. பாப்பரசர் வருகை தொடர்பான பேராயர்கள் ஊடக மற்றும் தகவல் பிரிவின் தலை வர். காலி பிரதேச ஆயர் றேமன்ட் விக்கிரமசிங்க விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்திருப்பது. "சமூக இணையத் தளங்கள் சிலவற்றில் "பாப்பரசரின் ஜனவரி மாத பயணத்தை நிறுத்துக" என்றும் மஹிந்த ராஜபக்ஷ திருச்சபைக்கு அழுத்தம் தொடுக் கின்றார் என்றும், அறிக்கைகள் வெளிவந்திருப் பதையும் நாம் அறிவோம்.

இவைகளை நாம் திட்டவட்டமாக மறுப்பதோடு பின்வரும் விளக்கத்தையும் முன்வைக்கிறோம்.

பரிசுத்த பாப்பரசரின் வருகையை அடுத்து உடனடியாக தேர்தல் ஒன்று நடத்தப்படக்கூடாது என்பது எமது கோரிக்கையாக இருந்து வந்துள்ளது. ஏனென்றால் சுயநலமிக்கவர்கள் அரசியல் ரீதியான பரப்புரைக்கு இதனைப் பயன்படுத்திக்கொள்ள எத்தனிக்க முடியும். அவர் வருகைக்கு முன்னதாக நடைபெறுவதானால் அந்த நிகழ்வினால் பயணம் குழம்பிப் போகலாகாது. இரண்டு நிகழ்வுகளுக்குமிடையில் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த வகையில் எல்லாமே ஒழுங்காக நடைபெறும் என்றும் தேர்தல் காரணமாக பயணம் குழப்பமடையாமல் இருக்க சகல ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும் எமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் ஒன்றை நடத்துவதும் அதற்கான திகதியை நிர்ணயிப்பதும் முழுக்க முழுக்க அரசின் கையில் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரின் கையில் உள்ள விடயம். அந்த விடயத்தில் தலையிடுவதற்கு திருச்சபை எந்தவித முயற்சியும் செய்யமாட்டாது.

பாப்பரசரின் பயணம் தொடர்பாக எந்தவொரு சமயத்திலும் ஜனாதிபதியோ அரசில் உள்ள வேறு எவருமோ திருச்சபையின் மீது நெருக்குதல் ஏதும் கொடுத்ததில்லை. உண்மையில் அதற்கு அவசியமான வசதிகளையும் ஆதரவையுமே அவர்கள் வழங்கியுள்ளார்கள்" என்று அவர் கூறியிருந்தார்.

இது ஒரு புறமிருக்க ஹெல உறுமய கொண்டுவரும் அரசமைப்பின் 19ஆவது திருத்தப் பிரேரணையைத் தாங்கள் ஆதரிக்கத் தயாராக இருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். 19ஆவது திருத்தத்தின் மூலம் பல விடயங்களைச் செயற்படுத்த ஜாதிக ஹெல உறுமய விரும்புகின்றது.

ஜனாதிபதியின் பதவியை பாதுகாப்பு அமைச்ச ருடன் நிறுத்திக்கொள்ளவேண்டும். நாட்டின் இறைமையை மீறுகின்ற அரசமைப்பு பிரிவுகள் நீக்கப்படவேண்டும். இதில் மாகாணசபைகளுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களும் அடங்கும். இவை ஜே.எச்.யுவின் 19ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணையாகும்.

நிறைவேற்று ஜனாதிபதியானவர் நாடாளுமன்றத்துக்கு பதில் கூறுபவராகவும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுபவராகவும் இருக்கவேண்டும் என்பவையும் அவர்களின் பிரேரணைகளில் அடங்கும். இதுபற்றி கடந்தவாரம் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ராஜபக்ஷ; இப்போதும்கூட நான் நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறுபவராகவே இருக்கின்றேன். நாடாளுமன்ற சபையில் நான் அமர்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளேன். நீதித்துறையின் நடவடிக்கைகளுக்கு உட்பட்டவராய் இருக்கும் ஜனாதிபதி முறையொன்று எந்த நாட்டில் இருக்கின்றது? அப்படியானால் அவர்கள் தமது முழுநேரத்தையும் நீதிமன்றங்களில்தான் விரயமாக்கிக்கொண்டிருக்க நேரும் என்றார் அவர். தேர்தல் முறைகளில் திருத்தங்கள் செய்யும் விடயம் இப்பொழுது அதிகமாகவே அரசின் கவனத்தில் இருந்து வருகின்றது என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஜாதிக ஹெல உறுமய தனது ஆலோசனைகளை அரசு தரப்பினர் ஏற்றுக்கொள்ளச் செய்வதில் தோல்வி கண்டுள்ளனர். அந்தக் கட்சியின் மத்திய செயற்குழுவினர் கடந்த ஞாயிறன்றுகூடி ஆராய்ந்த பின்னர் அரசு தரப்பினர் தமது ஆலோசனைகளை ஏற்காத பட்சத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது சுயாதீன நிலைப்பாடு ஒன்றைக் கடைப்பிடிப்பது என்று தீர்மானித்தனர். இத்தகவலைத் தெரிவித்த அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் மேலதிக விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

# நெற்செய்கையில் புதிய இனம்

## அறிமுகமும் புதிய தொழில்நுட்பங்களும்

பொ.அற்புதச்சந்திரன்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், மன்னார்.



மன்னார் மாவட்டத்தில் 70 சதவீதமான மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். இவற்றுள் அதிகமானோர் நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர். இங்கு காலபோகத்தில் 20814 ஹெக்டெயர் நிலப்பரப்பிலும், சிறுபோகத்தில் 3025 ஹெக்டெயர் நிலப்பரப்பிலும் நெற்செய்கை பண்ணப்படுகின்றது. இவற்றுள் காலபோகத்தில் 15,154 ஹெக்டெயர் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழும் 3,160 ஹெக்டெயர் சிறு குளங்களின் கீழும் 1900 ஹெக்டெயர் மானா வாரியாகவும் நெற்செய்கை செய்யப்படுகின்றது. மாவட்டத்தில் ஒன்பது வகையான மண் வகைகள் காணப்படுகின்றபோதிலும், குருமுசோல் என் அழைக்கப்படும் கருங்களி வகை மண் காணப்படுகின்றமை நெற்செய்கையாளர்களுக்கு வரப்பிரசாதமாகும். நெற்செய்கையில் உச்ச விளைவைத் தரக்கூடிய இந்த வகை மண், முருங்கன், ஆள்காட்டிவெளி, நானாட்டான், உயிலங்குளம் மற்றும் மாந்தை விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளை உள்ளடக்கி கட்டுக்கரை குள நீர்ப்பாசனத்தின் கீழான நிலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மன்னாரில் அதிகளவில் சம்பா இனங்களே விரும்பிப் பயிரிடப்படுகின்றன.

புதிய நெல் இன்ம் அறிமுகம் :-பிஜி 370 3 ½ மாத வயதுடைய வெள்ளைச் சம்பா வகையான புதிய இனம் எதிர்வரும் கால போகத்தில் அறிமுகம் செய்யப்படவிருக்கின்றது. குறைந்த வயதுடைய உருண்டையான வெள்ளை நிற அரிசி இனங்களுக்கு சந்தைவாய்ப்பு அதிகரித்து வருகின்றதைக் கருத்திற்கொண்டு இவ்வினம் அறிமுகம் செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட இனமானது பத்தலகொடையில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தில் இன விருத்தி செய்யப்பட்டு 2013 இல் விவசாயத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சராசரி விளைவாக ஹெக்டெயருக்கு 6 தொன்னும் உயர் விளைவாக 9 தொன்னும் தரவல்லது.

நெற்செய்கையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க மிக முக்கியமாக அமைவது தரமான விதை நெல் பாவனையாகும். இதனால் பின் வரும் நன்மைகளை அடையலாம். விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம், வீரியமான நாற்றுக்களைப் பெறலாம், சரியான பயிர் அடர்த்தியைப் பேணிக் கொள்ளலாம், நீர் முகாமைத்துவம், களை முகாமைத்துவம் என்பன இலகுவாக அமையும்.

கலப்பினங்கள் காணப்படாது, நோய்ப் பீடைகளை எதிர்த்து பயிர்கள் வளரும் குறித்த காலத்தில் சீரான முதிர்ச்சி அடையும் ஒரே நேரத்தில் முதிர்ச்சி அடையும். இதனால் அறுவடை இலகுவாக அமைவதுடன் சந்தைப் பெறுமதியும் அதிகரிக்கும்.

தரமான விதைநெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக மாகாண குறித் தொதுக்கப்பட்ட நிதியத்திலிருந்து 75 பயனாளிகளுக்கு பதிவுசெய்யப்பட்ட விதை நெல்லான பிஜி 360 மூன்று புசல் வீதமும் இவற்றுடன் களைநாசினிகளும் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் கால போகத்தில் இந்தத்திட்டத்தின் மூலம் 10,000 புசல் விதைநெல் மாவட்டத்துக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.



மேலும் குறிப்பிட்ட திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் விதைநெல் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும். அடுத்ததாக சுய விதைநெல் உற்பத்தியில் ஈடு படுபவர்கள் கருத்தில் கொள்ள வேண்டியவைகளைக் கவனிப்போம்.

### சுய விதை நெல்லை உற்பத்தி செய்வது எவ்வாறு?

முதலாவதாக உயர் தரமுள்ள விதைநெல்லை விதைத்து பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க வேண்டும். இதற்காக விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைநெல்லைப் பயன்படுத்தலாம்.

தெரிவு செய்த நெல்வர்க்கத்தின் வயதுக்கேற்ப பயிரை வறட்சியான காலத்தில் அறுவடை செய்து கொள்வதற்கு ஏற்றவாறு பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க வேண்டும்.

உங்களுக்குத் தேவையான விதை நெல்லை உற்பத்தி செய்வதற்குப் போதுமான வயலை அல்லது வயல் துண்டத்தைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். அந்த வயல் துண்டம் வளமானதாகவும் நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். நிழல் இருக்கக்கூடாது. வேறு நெல் வர்க்கங்கள் கலந்து விடாதிருக்கும்படி பார்த்துக்கொள்ளுதல் அவசியமாகும்.

வயலை நன்கு பண்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். முந்திய போகத்தில் உதிர்ந்த நெல் விதைகள், களை விதைகள் என்பன முற்றாகச் சேதமடையத் தக்கவாறு உழுது பண்படுத்திக் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் வரிசையில் நாற்று நடுவது மிகவும் நல்லது.

பரிந்துரை செய்யப்பட்டுள்ளபடி சரியான பசளை வகைகள் சரியான நேரத்தில் சரியான அளவுகளில் வயலுக்கு இடப்பட வேண்டும். நெல் நாற்றுக்கள் முளைத்து 14-20 நாள்களில் வயலில் களைகள் காணப்பட்டால் அவற்றைப் பிடுங்கி அகற்றுவதுடன் வரம்புகளையும் சுத்தமாக வைத்திக்க வேண்டும். ஆரம்ப பருவத்திலிருந்து நெற்பயிர் பூக்கும் பருவம் வரை வயலை நன்கு அவதானித்து பயிர் செய்யப்படாத நெல்வர்க்கப் பயிர்கள் காணப்பட்டால் அவற்றை முற்றாகப் பிடுங்கி அகற்ற வேண்டும்.

தாவரங்களின் உயரம், தண்டின் நிறம், இலைகளின் இயல்புகள் , பூத்தலில் வித்தியாசம், கதிர்களிலுள்ள நெல்மணிகளின் இயல்புகள், அரிசியின் நிறம் ஆகியவற்றைக் கொண்டு வேறு இனப் பயிர்களை அடையாளம் காணமுடியும்.

பயிரிலிருந்து பிடுங்கி அகற்ற வேண்டிய நெல் தாவரங்களைப் பற்றி பயிர்ச் செய்கையின் ஆரம்பத்திலிருந்தே கூடிய கவனம் செலுத்த வேண்டும். விதை நெல் உற்பத்தி செய்யும் போது பயிரிடப்பட்டுள்ள வர்க்கம் தவிர்ந்த ஏனைய வர்க்கங்களை சேர்ந்த தாவரங்களை அகற்றுவது மிகவும் முக்கியமானது. நோய்களையும் பூச்சிப்பீடைகளையும் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். இதற்கு அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம்.

நெற்பயிரில் கதிர்களிலுள்ள நெல்மணிகளில் 85 வீதமானவை பொன்னிறம் அடைந்தவுடன் பயிரை வெட்டி எடுக்கலாம். வெட்டிய பயிரை ஒரு நாள் அல்லது இரண்டு நாள்கள் வயலிலேயே காயவிடுதல் வேண்டும்.

இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் சாக்குப் படங்குகளின் மேல் அல்லது வேறு ஏதாவது விரிப்பின் மேல் சூடடிப்பது விரும்பத்தக்கது. சூடடிக்கும் முன்பு அதற்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும், இயந்திரங்களையும் நன்கு சுத்தப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

விதைகளைப் பிரித்தெடுத்த பின்பு நன்கு தூற்றி சப்பி மற்றும் வேறு பொருள்கள் என்பவற்றை அகற்றுதல் வேண்டும். சுத்தப்படுத்திய விதைகளின் நீரிளைவு 12-13 வீதத்துக்குக் குறையும் வரை வெயிலில் காய வைத்தல் வேண்டும்.

சாதாரணமாக இரண்டு பற்களுக்கிடையில் வைத்து கடித்துப் பார்த்து இதனை அறிந்து கொள்ளலாம்.

நிழலில் வைத்து சூடு ஆறிய பின்னர் சுத்தமான சாக்குகளில் கட்டி வைக்க வேண்டும். பின்பு இவற்றை நன்கு உலர்ந்த காற்றோட்டமுள்ள இடங்களில் மரத்தட்டுகளின் மேல் சேமித்து வைத்தல் வேண்டும்.. சாக்கின் உள்ளேயும் வெளியேயும் இலகுவில் அடையாளம் கண்டு கொள்வதற்காக நெல் வர்க்கத்தின் பெயர், அறுவடை செய்த தின்ம் ஆகிய தகவல்களை கொண்டுள்ள லேபிள்களை கட்டிவிடுதல் வேண்டும்.

தொடரும்.

# மரம், சட்டம், எதிர்கால சந்ததி

செல்வராசா

இந்த வருடத்து ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தென் கொரியாவின் இன்ச்சியான் நகரில், செப்ரெம்பர் 19 இல் தொடங்கி நடைபெற்றிருந்தது. 45 நாடுகளைச் சேர்ந்த 13 ஆயிரம் வீரர்கள் பங்கெடுத்திருந்தனர்.

செழிப்பான இந்த மாகாணத்தில் யுனெஸ்கோவின் சமாதானத்துக்கான மையமும், பயிற்சி நிலையமும் 750 ஏக்கர் கொண்ட காட்டின் மத்தியில் அமைந்துள்ளன. இந்த நிலையம் சுருக்கமாக 'அப்சேயு' என அழைக்கப்படும்.

இங்கு இடம்பெற்ற பயிற்சி ஒன்றின் போது நிகழ்த்துகை ஒன்றுக்கு 22 சோடி கோலாட்டத் தடிகள் தேவைப்பட்டன. கோலாட்டத் தடிகளின் அளவுப் பரிமாணம் வாசகர்களுக்குத் தெள்ளெனப் புரியும். எமது தேவையைப் பயிற்சி நிலைய அதிகாரியிடம் தெரிவித்தேன். "இவ்வாறான தேவைகள் ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இப்போது சொல்லி ஒன்றும் செய்துவிட முடியாது" என நிலையப் பொறுப்பு அதிகாரி தெரிவித்தார்.

"கத்தியைத் தாருங்கள். நாங்களாகவே வெட்டிக் கொள்கின்றோம்" என்று அவரிடம் கேட்டேன். அவர் அதிர்ந்து போனார். "இங்கு காடுகளில் தடி வெட்ட முடியாது. பட்ட மரங்களிலிருந்து கூட சட்டப்படி நீங்கள் தடிகளை வெட்ட முடியாது. முட்டாள்தனமான வேலை பார்த்துவிடாதீர்கள்" ஏன்று ஆலோசனை கூறினார்.

பின்னர் எமது ஆற்றுகைக்கென 2 செ.மீ. சதுர கன அளவுடைய 30 செ.மீ. நீளமான 44 துண்டுகளைத் தந்தார். அவை அங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த கட்டுமானப் பணிகளுக்கெனத் தருவிக்கப்பட்டிருந்த 'றீப்பை'த் துண்டுகளாகும்.

அவர்கள் மரங்களின் மீதும், சட்ட திட்டங்கள் மீதும், எதிர்காலச் சந்ததி மீதும் கொண்ட பற்றுமட்டுமல்ல, அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாகவும் தென்கொரியா திகழ்கின்றதன் தாற்பரியமும் அப்போதுதான் புரிந்தது.



மரங்களை நாட்டி அவற்றை அவை தப்பிப் பிழைத்து உயிர்வாழ நடத்தும் போராட்டங்களைக் காணாய். மரம் நாட்டுவது இலகு. பராமரிப்பதற்கு எதிர்காலச் சந்ததி மீது கொள்ளும் பற்றே காரணமாய் அமையும்.

கோயில்களில் ஸ்தல விருட்சம் சொல்லும் செய்திகள் மரங்களும் நம்மைக் காக்கும் கடவுள்களள்தான்.

இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை.

பாலைவனங்களைச் சோலைவனங்கள் ஆக்குவர் அறிவாளிகள். சோலை வனங்களைப் பாலை வனங்களாக்குவர் முட்டாள்கள். அதனைப் பார்த்துக் கொண்டு பேசாமடந்தையராக இருப்பர் அடி முட்டாள்கள்.

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
# கேள்வி அறிவித்தல் - 2015

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2015 இலிருந்து 31.12.2015 வரையான காலப் பகுதிக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 07.11.2014 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 26.11.2014 நண்பகல் 12.00 மணிவரை (அலுவலக நாள்களில் மட்டும்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 27.11.2014 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 27.11.2014 பி.ப 01.00 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்புப் பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 01. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 20,000.00 | 5,286,000.00 |
| 02. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 1,832,000.00 |
| 03. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 1,443,000.00 |
| 04. | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 562,000.00 |
| 05. | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 700,000.00 |
| 06. | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 111,000.00 |
| 07. | றெட்பானா பொதுச்சந்தை | 1,000.00 | 1,500.00 | 27,000.00 |
| 08. | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 15,000.00 | 1,375,000.00 |
| 09. | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 552,000.00 |
| 10. | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 6,000.00 | 363,000.00 |
| 11. | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 01. | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 111,000.00 |
| 02. | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |
| 03. | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 01. | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | 1,000.00 | 5,000.00 | 281,000.00 |

நிபந்தனைகள்:

- ❖ கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை செயலாளர், பிரதேச சபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- ❖ எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியை 05.12.2014ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவல்க நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் தாம் வதியும் வதிவிடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருப்பமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
- ❖ மரக்கறிச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் (1Km சுற்றுவட்டாரத்துள்) நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.
- ❖ சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணம் அறவிடலாம். மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் இடத்திற்கு (4'X4') ரூபா 40.00இற்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 5.00உம் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00உம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
- ❖ இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையின்து கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு. ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- ❖ இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.
- ❖ இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00ஐ கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
- ❖ சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு எந்தவிதமான வரியும் அறவிடக்கூடாது.
- ❖ ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதில் பங்குபற்ற இயலாது.
- ❖ சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.
- ❖ மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கு.மிதிலைநாதன்.
செயலாளர்,
பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2014.11.04.

(C/17554)(10.3)

# டில்லி சட்டசபையை கலைக்கப் பரிந்துரை



டில்லி. நவ.5
டில்லியில் மறுதேர்தல் நடத்த பாஜக உட்பட அனைத்துக் கட்சிகளும் விருப்பம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, டில்லி சட்டப் பேரவையை கலைக்க பரிந்துரைத்து ஜனாதிபதிக்கு துணை நிலை ஆளுநர் நஜீப் ஜங் அறிக்கை அனுப்பியுள்ளார்.

டில்லியில் 8 காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள் ஆதரவுடன் முதல்வரான ஆம் ஆத்மி கட்சியின் அர்விந்த் கேஜ்ரிவால், 49 நாள் ஆட்சிக்குப் பின்னர் லோக்பால் பிரேரணையை நடைமுறைப்படுத்தமுடியவில்லை என்று கூறி ராஜினாமாச் செய்தார். அதன்பின்னர், அங்கு ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு சட்டசபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தக்கோரி ஆம் ஆத்மி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. வழக்கு விசாரணையின்போது. அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசித்து முடிவு எடுப்பதாக துணை நிலை ஆளுநர் நஜீப் ஜங் தெரிவித்திருந்தார்.

அதன்படி, பா.ஜ.க, காங்கிரஸ் தலைவர்களை அழைத்து துணை நிலை ஆளுநர் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார். பா.ஜ.க. சார்பில் மாநில தலைவர் சதீஷ் உபாத்யா. துணை நிலை ஆளுநரை சந்தித்துப் பேசினார். அப்போது. டில்லியில் மறு தேர்தல் நடத்த விரும்புவதாக பா.ஜ.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஹரியானா மற்றும் மகாராஷ்டிரா மாநில தேர்தலில் வெற்றி கிடைத்திருப்பதால் தேர்தலைச் சந்திக்க பா.ஜ.க. முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் தரப்பில் நஜீப் ஜங்கை சந்தித்த ஹாரூண் யூசூப் பின்னர் செய்தியாளர்களிடம் கூறும்போது, கேஜ்ரி வால் ராஜினாமா செய்த மறுநாளிலிருந்தே. மறு தேர்தல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். துணை நிலை ஆளுநரிடமும் அதையே கூறியுள்ளோம்- என்றார்.

அனைத்துக் கட்சிகளும் மறு தேர்தலுக்கு விருப்பம் தெரிவித்திருப்பதை அடுத்து. டில்லி சட்டசபையைக் கலைக்க பரிந்துரைத்து ஜனாதிபதிக்கு துணை நிலை ஆளுநர் நஜீப் ஜங் அறிக்கை அனுப்பினார். (வ)

# ஜப்பானின் உயர் விருதை பெறுகின்ற முதல் இந்தியர்



டில்லி, நவ.5
ஜப்பான் நாட்டின் உயரிய விருதுக்கு முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜப்பான்-இந்தியா இடையே 35 ஆண்டுகளாக நட்புறவு நீடித்து வருகிறது. இந்த நிலையில், இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதிலும், அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதிலும் தொடர்ந்து பங்காற்றியதற்காக தி கிராண்ட் கார்டன் ஒப் தீ ஆர்டர் ஒப் தி பாலோனியா பிளவர்ஸ்' என்ற விருது அவருக்கு வழங்கப்படுவதாக ஜப்பான் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதை பெறும் முதலாவது இந்தியர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து மன்மோகன் சிங் கூறியதாவது: "இது எனக்கு உண்மையான கௌரவமாகும். ஜப்பான் அரசும், அந்தநாட்டு மக்களும் என் மீது கொண்டுள்ள அன்பால் நான் பெருமையடைகிறேன். இந்திய-ஜப்பான் உறவுகள் செழுமையடைய வேண்டும் என்பதே எனது கனவு. இதற்காகவே நான் பாடுபட்டேன். பிரதமராக இருந்த என்னுடைய ஆட்சிக் காலத்தில் மட்டுமல்ல, எனது பொதுவாழ்வில் பெரும்பாலும் இதற்காகவே உழைத்திருக்கிறேன்" என்று மன்மோகன் சிங் தெரிவித்தார். (வ)

# காங்கிரஸுடன் நண்பனாக இருக்கவே விரும்புகிறேன்

**வாசன் கூறுகிறார்**



சென்னை, நவ.5
காங்கிரஸ் கட்சியுடன் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. தொடர்ந்து அந்தக்கட்சிக்கு நண்பனாகவே இருக்க விரும் புகிறேன் என்று ஜி.கே. வாசன் கூறியுள்ளார். காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி புதிய கட்சி ஆரம்பித்துள்ள ஜி.கே. வாசன் சென்னையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, காங்கிரஸ் கட்சியுடன் எந்த கருத்து வேறு பாடும் இல்லை. தொடர்ந்து அக்கட்சிக்கு நண்பனாகவே இருக்க விரும்புகிறேன். காங்கிரஸ் தலைமையை ஆதரவாளர்கள் விமர்சித்து பேசினால் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். மேலும், கட்சியின் கொடி, பெயர் மற்றும் சின்னம் குறித்து தேர்தல் ஆணைய நடைமுறை நடந்து வருகிறது. நடைமுறைகள் முடிந்த பின்னர் அவை அறிவிக்கப்படும் என்று கூறினார். (வ)

# கவிழ்ந்தது அகதிகள் படகு

## 24 பேர் சாவு



துரிதமாக நடக்கிறது மீட்புப் பணி.....

இஸ்தான்புல், நவ.5
புகலிடம் தேடி ஐரோப்பா நோக்கிச் சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் பெண்கள், குழந்தைகள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர்.
துருக்கியின் தலைநகரம் இஸ்தான்புல் வடக்கு கடற்பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.
இந்தச்சம்பவம் போஸ்போரஸ் மற்றும் கருங்கடல் சங்கமிக்கும் பகுதியில் நடை பெற்றுள்ளது. மீட்புப்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. சீரற்ற காலநிலையால் மீட்புப் பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
ஒரு சிறிய படகில் சுமார் 40 பேர் பயணித்துள்ளனர். படகு கவிழ்ந்ததால் முதலில் குழந்தைகளின் உடல்கள் மிதந்து வந்தன. விபத்தில் இறந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை என்று மீட்புக்குழு அதிகாரி ஒருவர்தெரிவித்தார். தென் ஆபிரிக்கா மற்றும் சிரியா போன்ற நாட்டில் உள்ளவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோத மார்கச் சென்று குடியேற துருக்கிக் கடல் பகுதியைத் தெரிவு செய்கின்றனர். (வ)

## ஏலத்தில் விற்கப்பட்ட ஹிட்லரின் சுயசரிதை



பேர்ளின், நவ்.5
ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் சுயசரிதைப் புத்தகம் 19000 பவுண்ஸுக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது. ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் தனக்காக வைத்திருந்த அவரது சொந்த சுயசரிதை ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது.
மூனிச் கட்டடத்திலிருந்து 1945 ஆம் ஆண்டில் பெறப்பட்ட இந்தப் புத்தகம் 18,800 பவுண்ஸுக்கு விற்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து ஏலத்தை நடத்திய கோட்லியப் கூறுகையில்: குறித்த புத்தகம் ஹிட்லரின் சொந்தப் புத்தகம் என்றும் இது அவர் கையெழுத்திட்ட புத்தகத்தை விட மிக முக்கியமானது என்றும் கூறியுள்ளார்.
இந்தப் புத்தகம் நாஜி தலைவர் ஹிட்லரால் எழுதப்பட்டு 1932 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஈரானில் ஆண்கள் கரப்பந்தாட்டம் பார்க்க முயன்ற பெண்ணுக்குச் சிறை



தெஹ்ரான், நவ.5
ஈரானில் ஆண்கள் கரப்பந்துப் போட்டியைக் காண முயன்ற பிரிட்டன்-ஈரானிய பெண்ணுக்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஈரானில் பெண்கள் கரப்பந்து விளையாட 2012 ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. பெண்கள் கரப்பந்து விளையாடினால் அவர்களை அநாகரிகமாக நடந்து கொள்ளும் ஆண் பார்வையாளர்களிடம் இருந்து பாதுகாக்க வேண்டிஉள்ளது என்று ஈரான் அதிகாரிகள் தெரிவித்தனர்.
லண்டனில் உள்ள ஷெபர்ட்ஸ் புஷ் பகுதியைச் சேர்ந்தவர் பிரிட்டன்-ஈரானிய ஆர்வலரான கோன்சே கவாமி (வயது-25). லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்த கவாமி அடங்கிய பெண்கள் குழு, கடந்த ஜூன் மாதம் 20 ஆம்திகதி ஈரானில் அந்தநாட்டு அணியுடன் இத்தாலி அணி மோதிய கரப்பந்துப் போட்டியைக் காணச் சென்றது. அந்தக் குழுவினரைப் பொலிஸார் கைது செய்து, அடித்து அதன் பின்னர் விடுவித்தனர்.
கவாமி மட்டும் மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் கடந்த மாதம் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினார்.
இந்தநிலையில் கரப்பந்துப் போட்டியைக் காண முயன்றதற்காக கவாமிக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து ஈரான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. கவாமியை உடனே விடுதலை செய்யக் கோரி 7 லட்சத்துக்கும் அதிகமானோர் இணையத்தளம் மூலமான கோரிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



## ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு எதிராக கனடாவின் தாக்குதல் ஆரம்பம்

ரொரொன்றோ, நவ.5
ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை இலக்கு வைத்து கனேடிய போர் விமானங்கள் தங்களது முதலாவது தாக்குதலை நடத்தியுள்ளன.
ஈராக் மற்றும் சிரியாவின் பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தலைமையிலான நாடுகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.
இந்தத்தாக்குதல்களில் தற்போது கனடாவும் இணைந் m ˆ á m , i ½! ½B CF-18வி போர் விமானங்கள் தங்களது முதல் தாக்குதலை நேற்று முன்தினம் நடத்தியுள்ளன. 500 தொன் எடையுள்ள லேசர் உதவியுடனான குண்டுத் தாக்குதலை வலூஜா மற்றும் ஈராக் பகுதிகளில் நடத்தியுள்ளன.
இது ஓர் ஒருங்கிணைந்த தாக்குதல் என்றும் ஒக்ரோபர் 30 ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு எதிரான போராட்டத்தில் இணைந்த பின்னர் இடம்பெறும் முதலாவது தாக்குதல் என்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் றொப் நிக்கல்சன் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.
மேலும் இந்தத் தாக்குதல் நடவடிக்கை நான்கு மணித்தியாலங்களுக்கு இடம் பெற்றதாகவும், இதில் கனடாவின் பொலாரிஸ் விமானத்தில் இருந்து வானில் விமானங்களுக்கு எரிபொருள் மாற்றும் நடவடிக்கையும் அடங்கியிருந்தது என்றும் நிக்கல்சன் கூறியுள்ளார். (வ)

## அமெரிக்கா கண்டனம்

வொஷிங்டன், நவ.5
இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பாக செய்தி யாளர்களைச் சந்தித்த வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி, "தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்காவின் கண்டனத்தை பதிவு செய்கிறோம் எனக் கூறினார்.
மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.
தாக்குதலில் ஈடுபட்டவர் களை கண்டறிய பாகிஸ்தானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்க அளிக்கும் என்றும் ஜென் சாகி உறுதி அளித்தார். (வ)

## காட்டேரி மான் கண்டுபிடிப்பு



60 வருடத்துக்கு பின் ஆப்கானிஸ்தானில் காட்டேரி போன்ற விஷப்பற்களைக் கொண்ட மான் கண்டறியப்பட்டுள்ளது.

## பழங்குடியின மக்கள் 50 பேர் சுட்டுக்கொலை

### ஐ.எஸ்.ஐ.எஸ். இன் உச்சக்கட்ட வெறிச்செயல்

பக்தாத், நவ.5
ஈராக்கில் 50 பழங்குடியின மக்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.
சிரியா, ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். தீவிரவாதிகள் முக்கிய நகரங்களைப் பிடித்து வைத்திருக்கின்றனர். அத்துடன் பல எண்ணெய்சுத்திகரிப்பு ஆலைகளையும் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளனர். கடத்தல், கச்சா எண்ணெய் விற்பனை மூலம் தான் ஐ.எஸ். தீவிரவாதிகள் இப்போது ஈராக்கிலும், சிரியாவிலும் அமெரிக்க தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடூரம் மேலும் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. ஈராக்கின் அன்பார் மாகாணத்தில் 50 இற்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர். இதில் பெண்களும் அடங்குவர்.
இது தொடர்பான அதிகாரபூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையே ஐ.எஸ். தீவிரவாதிகளின் இந்தக் கொடூரத் தாக்குதலில் 86 பேர் உயிரிழந்தனர் என்று மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது.
மாகாணத்தின் ராஸ் அல்-மா கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
தற்போது பழங்குடியின மக்கள் வசித்த பகுதியை தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## வாகா எல்லையில் மேலும் வெடிகுண்டுகள் கண்டெடுப்பு

டில்லி, நவ.5
வாகா எல்லையில் நடைபெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தப் பகுதியில் மேலும் வெடிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
இந்திய-பாகிஸ்தான் வாகா எல்லையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 17 வயதான மற்றொரு தற்கொலைப் படை தீவிரவாதி உட்பட 20 பேரை அதிகாரிகள் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.
கைது செய்யப்பட்ட மனித வெடிகுண்டுத் தீவிரவாதி முல்தான் மாவட்டத்தைச் சேர்ந்த அப்துல் ரகுமான் என்பது தெரியவந்துள்ளது. முல்தானிலுள்ள வீட்டில் சோதனையிட்டபோது அவன் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.
மேலும் குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்துக்கு அருகே 8 கிலோ வெடி மருந்துகள் உட்பட வெடி குண்டுகள் மற்றும் மனித வெடிகுண்டு தீவிர வாதிகள் பயன்படுத்தும் இடுப்பு பெல்ட் ஆகியவையும் கண்டறியப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: புதிய பட்டம் பதவி உங்களைத் தேடிவரும். உங்கள் முயற்சிகள் எதுவானாலும் வெற்றி பெறும். நினைத்தது நடக்கும். எதிர்பார்க்கும் இடங்களிலிருந்து நல்ல செய்தி வரும். தடைப்பட்டு வந்த சுப நிகழ்ச்சிகள் இப்போது நடக்கும்.



**இடபம்**: நீண்டநாளைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு ஓரிடத்தில் அமர்ந்து செய்யக்கூடிய பணியாக இல்லாமல் ஊர் ஊராகச் சென்று செய்யக்கூடிய வேலை அமையும்.



**மிதுனம்**: குடியிருக்கும் வீட்டைச் சுத்தமாகவும் கவனமாகவும் பார்த்துக்கொள்வது நல்லது. சில மாணவர்கள் கல்வியின் காரணமாகவோ அல்லது வேறு வேலை விடயமாகவோ வெளியூர் சென்று தங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.



**கடகம்**: சொந்தத் தொழில் செய்பவர்கள் எச்சரிக்கையோடு முக்கிய முடிவுகளை எடுக்காவிட்டால் திண்டாட நேரிடும். அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சிலர் அலுவலகப் பிரச்சினை வேறு இடத்துக்கு பணிமாற்றம் செய்யப்படலாம்.



**சிங்கம்**: புதிதாகத் தொழில் செய்ய நினைப்பவர்கள் கவனத்துடன் செயலாற்றவேண்டும கூட்டுத்தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ளாவிட்டால் கூட்டாளிகள் விலக நேரிடும். தேவையில்லாத இடமாற்றம் வரும்.



**கன்னி**: தந்தை மற்றும் தாய்வழி உறவுகள் சிறக்கும். அவர்களால் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் கிடைக்கும். சிலருக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.



**துலாம்**: கௌரவப் பட்டங்களும் பதவி, பொறுப்புகளும் கிடைக்கும். பூர்வீகச் சொத்தால் ஆதாயமும் மேன்மையும் கிடைக்கும். உங்களுடைய எதிரிகளும்கூட உங்களுக்கு சாதகமாகச் செயற்படுவார்கள். அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு வேலைப்பளு குறையும்.



**விருச்சிகம்**: அலுவலகத்தில் சுமுகமான நிலை ஏற்படும். உடன் வேலை செய்பவர்களால் உங்களுக்கு அனுகூலம் கிடைக்கும். சிலருக்கு கூட்டுத்தொழில் வாய்ப்புக் கிடைக்கும். நல்ல கூட்டாளி கிடைப்பார்.



**தனுசு**: மாற்றுமத நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். உங்கள் முகத்தில் ஒரு பொலிவு தோன்றும். உங்கள் முகத்தில் உள்ள பொலிவு அனைவரையும் கவர்ந்திழுக்கும். மனதில் தைரியமும் செயலில் சுறுசுறுப்பும் ஏற்படும். நண்பர்களின் துயரங்களைப் போக்குவீர்கள்.



**மகரம்**: உங்களுக்கு அதிகாரமான பதவி அந்தஸ்து முதலியவை உண்டாகும். உங்களுடைய முயற்சி இல்லாமலே வருமானம் உங்களைத் தேடி வரும். எந்த விடயமாக இருந்தாலும் அதில் வெற்றி பெற்று சாதனை வீரராக வலம் வருவீர்கள்.



**கும்பம்**: இதுவரை அனுபவித்து வந்த துன்பம், தொல்லை, வறுமை அனைத்தும் நீங்கி வளம் பெறுவீர்கள். இதுவரை குடத்துக்குள் இட்ட விளக்காக இருந்த திறமை இனிமேல் குன்றின் மேலிட்ட விளக்காகும் விதத்தில் உங்கள் திறமைகள் வெளி உலகுக்குத் தெரிய வரும்.



**மீனம்**: சொன்னது சொன்னவாறு நடந்து கொண்டு உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்வீர்கள். தற்போது உங்களுக்கு எதிராக உங்கள் எதிரிகளால் செய்யப்படும் காரியங்கள்கூட உங்களுக்குச் சாதகமாக மாறி உங்களை மேம்படுத்தும்.

## நாளை

**ஐப்பசி-20 வியாழக்கிழமை | 06.11.2014**

திதி: பூரணை
பி.இ.04.24 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பி.ப.04.30 வரை

சுபநேரம்:07.35-09.05 வரை
இராகுகாலம்:01.35-03.05 வரை
**பூரணை விரதம், திருமூலர் குருபூஜை**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பொறாமையை நீக்குங்கள்

நீங்கள் உண்மையில் உங்கள் சமயத்தை நேசித்தால் உங்கள் நாட்டைநேசித்தால் நீங்கள் செய்ய வேண்டிய தவிர்க்க முடியாத கடமை என்னவென்றால், உங்களது சாஸ்திரங்களில் மூடப்பட்டுக் கிடக்கின்ற கருவூலங்களை வெளியே கொண்டு வந்து அதற்கு உரிமையான சந்ததியாரிடம் தருகின்ற காரியத்தை அது எவ்வளவு கடினமானாலும் செய்தே ஆக வேண்டும் என்பதுதான். இவைஅனைத்துக்கும்மேலாக ஒன்று அவசியம். காலங்காலமாக நாம் பயங்கரமான பொறாமையால் நீர்த்துப் போயிருக்கிறோம். எப்போதும் மற்றவர்கள் மீது பொறாமைப்பட்ட படியே இருக்கிறோம். இந்த மனிதனுக்கு இருக்கும் அதிக முக்கியத்துவம் எனக்கு ஏன் இல்லை. என்றே எப்போதும் நினைக்கின்றோம். கடவுளை வழிபடச் செல்லும் கோவில்களில்கூட நமக்கு முன்னே நிற்கும் மரியாதை தரப்பட வேண்டும் என்று நினைக்குமளவுக்கு நம் அடிமை நிலை கீழானதாகவுள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் கட்டளையிடவே விரும்புகின்றனர். யாருக்கும் கட்டளைக்கு பணிய விருப்பமில்லை. இது பழங்காலத்தில் நம்மிடம் இருந்த பிரம்மசரியம் அழிந்து போனதால் ஏற்பட்ட விளைவாகும். முதலில் பணியக் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு ஆணையிடுகின்ற தகுதி தானே வரும். எப்போதும் முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு எஜமான் ஆவதற்கான தகுதியைப் படைத்தவர்களாவீர்கள். இந்தப் பொறாமையை நீக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்திருக்காத மகத்தான காரியங்களைச் செய்வீர்கள். ஏம்து முன்னோர்கள் மிக ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்கள். அவர்கள் செய்துள்ள செயல்களை நாம் மிகுந்த மதிப்போடும் பெருமையோடும் நினைவு கூர்ந்து கொள்வோம். நாமும் மகத்தான செயல்களையே செய்வோம். நமக்கு பின்வருபவர்கள் பெருமையோடு எமது செயல்களை தங்கள் முன்னோர்கள் நற்காரியமாக போற்றுவார்கள்.

# பெண்களின் சடலங்களை தோண்டி எடுத்து திருமணம்



சீனாவில் இறந்த இளம் பெண்களின் சடலங்களைத் தோண்டியெடுத்து ஆண்கள் திருமணம் செய்து கொள்ளும் விநோதமான பழக்கமொன்று இருந்து வருகிறது. இதற்காகச் செயற்படும் பிரத்தியேக கும்பலொன்று, சடலங்களை தோண்டியெடுத்து ஆண்களுக்கு விற்று வருகின்றது.

இந்தக் கும்பலின் சண்டாங் மாகாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், சமீபத்தில் மோட்டார் சைக்கிள் திருடிய விவகாரத்தில் பொலிஸாரிடம் பிடிபட்டுள்ளார்.

இவரிடம் நடத்திய விசாரணையில், இவர் இளம் பெண் ஒருவரின் சடலத்தைத் தனது நண்பர்களுடன் சேர்ந்து தோண்டியெடுத்து 2000 பவுண்களுக்கு விற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதுகுறித்து பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், தாம் இதுவரை 11 பேரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்களை விசாரித்தால் இன்னும் பல கும்பல்கள் சிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவில் தடை செய்யப்பட்ட பேய்த் திருமணங்களை நடத்துபவருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 6 | 3 | | | 5 | 2 |
| | | | 1 | | | | 3 | 4 |
| 9 | | | | 8 | 2 | | | |
| 3 | | 7 | 4 | 5 | | 2 | | |
| 1 | 5 | | | | | | 9 | 3 |
| | | 9 | | 1 | 3 | 7 | | 5 |
| | | | | 6 | | | | 8 |
| 5 | 9 | | | | 8 | | | |
| 4 | 8 | | | 2 | 5 | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 6 | 7 | 5 | 2 | 3 | 9 | 1 |
| 9 | 2 | 5 | 3 | 1 | 8 | 7 | 4 | 6 |
| 1 | 7 | 3 | 4 | 9 | 6 | 8 | 2 | 5 |
| 6 | 5 | 2 | 9 | 3 | 1 | 4 | 8 | 7 |
| 7 | 3 | 1 | 8 | 2 | 4 | 5 | 6 | 9 |
| 8 | 9 | 4 | 5 | 6 | 7 | 2 | 1 | 3 |
| 3 | 6 | 8 | 2 | 7 | 9 | 1 | 5 | 4 |
| 2 | 1 | 7 | 6 | 4 | 5 | 9 | 3 | 8 |
| 5 | 4 | 9 | 1 | 8 | 3 | 6 | 7 | 2 |

# மானிப்பாய் ஏஞ்சலை வீழ்த்தி வாகை சூடியது சென்.ஜோன்ஸ்



யாழ்ப்பாணம், நவ. 5
யாழ். இந்துக் கல்லூரி நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை 11 புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

பாடசாலைகளின் 19 வயது ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தி வருகிறது. லீக் முறையிலான ஆட்டங்கள் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறுகின்றன.

நேற்றைய ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதியது.

முதல்கால்பாதி ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் 8 புள்ளிகளையும் மானிப்பாய் ஏஞ்சல் 7 புள்ளிகளையும் பெற்றன. ஆட்டம் மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது. இடைவேளையின்போது மானிப்பாய் ஏஞ்சல் முன்னிலை பெற்றது. சிறப்பாக ஆடிய அணி 2 புள்ளிகளால் ஆட்டத்தில் முந்தியது. இரண்டாவது கால்பாதி ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் 11 புள்ளிகளையும் ஏஞ்சல் 14 புள்ளிகளையும் பெற்றன. ஏஞ்சல் வீரன் சயிந்திரன் சிறப்பாக விளையாடி 7 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தார். ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது சென்.ஜோன்ஸ் 19 புள்ளிகளையும் மானிப்பாய் ஏஞ்சல் 21 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

மூன்றாம் நான்காம் கால்பாதி ஆட்டங்கள் ஆக்ரோஷமானதாக இருந்தன. மூன்றாவது பாதியில் சென். ஜோன்ஸ் உக்கிரமாக மோதி விட்ட முன்னிலையைப் பிடித்தது. அது 21 புள்ளிகளையும், ஏஞ்சல் 11 புள்ளிகளையும் பெற்றன. சென்.ஜோன்ஸ் வீரன் பவிகரன் 9 புள்ளிகளையும், அருள்நேசன் 6 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

நான்கம் கால் பாதி ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் தனது மேலாண்மையை நிலைநிறுத்தி வெற்றியை உறுதிப்படுத்தியது. அணி 24 புள்ளிகளையும், ஏஞ்சல் 21 புள்ளிகளையும் பெற்றன. பவிகரன் 12 புள்ளிகளைத் தனியாளாகப் பெற்றார். தனுசனும் 8 புள்ளிகளைத் தள்ளினார். முடிவில் சென். ஜோன்ஸ் 64: 53 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்தாடியிருந்தது மத்தியகல்லூரிஅணி.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணியினரும் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் ஆடினர். முதல்கால்பாதி முடிவில் யாழ். இந்துக் கல்லூரி 13 புள்ளிகளையும், யாழ்.மத்திய கல்லூரி 10 புள்ளிகளையும் பெற்றனர். இதில் யாழ். இந்துக் கல்லூரி மன்சுதன் 6 புள்ளிகளையும், உதயபவன் 4 புள்ளிகளையும், விஸ்ணு வர்த்தனன். 2 புள்ளிகளையும், தர்சன் ஒருபுள்ளியையும், யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் கர்சன் 6 புள்ளிகளையும், சுவித்தன்,ரகுராம் ஆகியோர் தலா 2 புள்ளிக ளையும் பெற்றனர்.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்தின்போதும் யாழ்.இந்துக் கல்லூரி அணியினரின் புள்ளி பெறும் வேட்டை தொடர்ந்தது. பதிலுக்கு யாழ்.மத்திய கல்லூரி அணியினரும் தமது அணிக்கான புள்ளிகளைப் பெறுவதற்காக கடுமையாகப் போராடினர். இரண்டாம் கால் பாதி ஆட்ட முடிவில் யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 12 புள்ளிகளையும், யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 8 புள்ளிகளையும் பெற்றனர். இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் மன்சுதன், விஸ்ணுவர்த்தனன் ஆகியோர் தலா 4 புள்ளிகளையும், கஜந்தன், உதயபவன் ஆகியோர் தலா 2 புள்ளிகளையும், யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் கர்சன் 3 புள்ளிகளையும், ரகுராம் 4 புள்ளிகளையும். சுவந்திரன் 1 புள்ளியையும் பெற்றனர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது யாழ்.இந்துக்கல்லூரி அணி 25 புள்ளிகளையும், யாழ். மத்திய கல்லூரி 18 புள்ளிகளையும் பெற்றன.

மூன்றாம்கால்பாதி ஆட்டத்தின்போது இரண்டு அணியினரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி மாறி மாறி தமது அணிக்கான புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். மூன்றாம்கால் பாதி ஆட்ட முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணியினர் 14 புள்ளிகளையும், யாழ். இந்துக்கல்லூரி அணி 13 புள்ளிகளையும் பெற்றனர். இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் சுவிந்திரன் 3புள்ளிகளையும், கர்சன் 11 புள்ளிகளையும், யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பில் மன்சுதன். விஸ்ணு வர்த்தனன், ஆதவன் ஆகியோர் தலா 3 புள்ளிகளையும், உதயபவன் 4 புள்ளிகளையும் பெற்றனர்.

நான்கம் கால் பாதி ஆட்டத்தில் வீறு கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணியினர் அதிரடி [illegible]பான [illegible]ட்டத்தினை வெ[illegible]ப்படுத்தினர். [illegible]லுக்கு யாழ். இந்துக் கல்லூ[illegible] அணியினர் அதிர[illegible] ஆடினர். இதன[illegible]ட்டத்தின் கடைசி [illegible]டம் வரை பரபரப்பு நிலவியது. நான்காம் கால் பாதி ஆட்டநேர முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணி 18 புள்ளிகளையும், யாழ். இந்துக் கல்லூரி அணி 6 புள்ளிகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.இதில்யாழ் இந்துக்கல்லூரிஅணி சார்பில் உதயபவன் 4 புள்ளிகளையும், மன் சுதன் 2 புள்ளிகளையும், யாழ். மத்திய கல்லூரி அணி சார் பில் கர்சன் 6 புள்ளிகளையும், ரகுராம் 10 புள்ளிகளையும், சுவிந்திரன் 2 புள்ளிகளையும் பெற்றனர். ஆட்டத்தின் முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணி 50:46 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (உ-த-23.)

## மன்னாரின் சம்பியன் சவேரியார்

யாழ்ப்பாணம், நவ. 5
இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனம் மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய சமபோச வெற்றிக் கிண்ணத்துக்கான 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. இதன் மூலம் தேசிய மட்டப் போட்டிக்கும் தகுதி பெற்றது.

திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில்பள்ளிமுனை லூட்சிய மகா வித்தியாலய அணிஎய எதிர்த்தது புனித சவேரியார் அணி.

இரு அணிகளுமே பலம் பொருந்தியவை என்பதால் விறுவிறுப்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை. கோல் அடிப்பதில் ஆரம்பம் முதலே இரு அணியினரும் மும்முரமாக இருந்தனர். ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் சவேரியார் வீரன் றொபின் பெர்னாண்டோ முதலாவது கோலை கம்பங்களுக்குள் தள்ளினார். ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. லூட்சிய வீரர்களுக்கு கோல் அடிக்க சில வாய்ப்புகள் கிட் டின. ஆனால் கோட்டை விட்டார்கள். இடைவேளையின் போது 1:0 என்ற கோல் கணக்கில் சவேரியார் முன்னிலை பெற்றது.

மீண்டும் ஆட்டம் ஆரம்பமான கையோடு கோல் அடிக்க கிடைத்த வாய்ப்பை லூட்சிய மகா வித்தியாலய அணி மீண்டும் தவற விட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட சவேரியார் ஆட்டத்தின் இரண்டாவது கோலைத் தள்ளியது. இந்த முறை றெபிரன் காலில் கிடைத்த பந்தை கோலாக்கினார். அதன் பின்னர் சவேரியார் தற்காப்பில் முழுக் கவனத்தையும் செலுத்த லூட்சி யவால் கோல் அடிக்க முடிய முடியவில்லை. 2:0 என்ற கோல் கணக்கில் சவேரியார் வெற்றி பெற்றது.

## வவுனியாவில் செட்டிகுளம் ம.வி. சம்பியன்

வவுனியா மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவுக்கான சமபோச கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியன் ஆகியது. இதன் மூலம் தேசிய மட்ட போட்டிக்கு அந்த அணியும் தகுதிபெற்றுள்ளது.

செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் எதனையும் போடவில்லை. கடுமையாக போராடிய போதும் சிறப்பான தடுப்பாட்டத்தால் இரு அணியினருமே கோல் அடிக்க முடியவில்லை.

இடைவேளையின் பின்னர், கிடைத்த சந்தர்ப்பத்தை வெகு லாவகமாகப் பயன்படுத்திய செட்டிகுளம் மகா வித்தியாலய அணி ஆட்டத்தின் முதல் கோலை அடித்தது. முஸ்லிம் மகா வித்தியாலய அணியால் கடைசிவரை பதில் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. செட்டிகுளம் மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது. (உ-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 5
யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:பி.ப. 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (உ-23)

* * *

மானிப்பாய் ஏஞ்சல் சர்வ தேச பாடசாலை குறோஸ் வேநோத் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் இன்று புதன் கிழமை பாடசாலை கூடைப் பந்தாட்டதிடலில் நடை பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு: பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வ தேச பாடசாலை நீல அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மரூன் அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (உ-23)

## மேசைப்பந்தாட்ட விருத்திக்கு இலங்கைக்கு சீனா உதவி

இலங்கையில் மேசைப்பந்து விளையாட்டினை அபிவிருத்தி செய்ய சீனா ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. முதற்கட்டமாக 25 மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 250 லட்சம் ரூபா பெறுமதியான 150 மேசைப்பந்து மேசைகள் சீன அரசினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சீன அரசிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இவை வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகின்றது.

இத்திட்டத்தின் மூலம் விளையாட்டு உபகரணங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் வீரர்களுக்கு வழங்கப்படவுள்ளன. தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களையும் வழங்கவும் சீன அரசு முன்வந்துள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. (உ)

## யாழ். 4 ஸ்ராரை வீழ்த்தி வெற்றியை ருசித்தது ஒற்றுமை

யாழ். 4 ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை 21 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்.

கம்பர்மலை கம்பன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றது. தொண்டமானாறு ஒற் றுமை விளையாட்டுக் கழக மும் யாழ். 4 ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஒற்றுமை, நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. பிரதீப் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்றார். ஜெரிக் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

74 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ். 4 ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிரணியின் பந்துவீச்சுக்களுக்கும் களத்தடுப்புக்களுக்கும் மத்தியில் ஓட்டங்களைப் பெறமுடியாது 52 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் 22 ஓட்டங்களால் ஒற்றுமை வென்றது. வகன் 3 இலக்குகளையும் சுரேன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். போட்டியில் மூன்றாமிடத்தை கொம்பந்தனை இளைஞர் விளையாட்டுக் கழகம் பெற்றது.

(உ-108)

## ஐ.பி.எல். திகதி அறிவிப்பு

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஐ.பி.எல். போட்டிகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி அடுத்த ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி முதல் மே 25ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவதன் மூலம் பெருமளவு வருமானம் கிடைப்பதால், கிரிக்கெட் வீரர்கள் சர்வதேச போட்டிகளில் விளையாட அக்கறை காட்டுவதில்லை என பல்வேறு நாடுகள் குற்றஞ் சாட்டிவரும் நிலையில், மீண்டும் ஐ.பி.எல். போட்டிகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# முன்னேறியது பாகிஸ்தான்



உலக டெஸ்ட் தரப்படுத்தலில் ஆறாமிடத்திலிருந்த பாகிஸ்தான் மூன்றாமிடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டித்தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றதன் மூலம் இந்த மாற்ற நிலை ஏற்பட்டுள்ளது. 105 புள்ளிகளைப் பாகிஸ்தான் அணி பெற்று, ஆறாமிடத்திலிருந்து மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றபோது மூன்றாமிடத்தைப் பிடித்த பாகிஸ்தான் அணி அதன் பிறகு மூன்றாவது இடத்துக்கு முன்னேறுவது இதுவே முதல்முறையாகும்.

இதேவேளை, தென்னாபிரிக்க அணி 124 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தோற்றதால் 6 புள்ளிகளை இழந்த ஆஸ்திரேலிய அணி இரண்டாமிடத்திலுள்ளது. இங்கிலாந்து அணி ஓர் இடம் பின்தங்கி 104 புள்ளிகளுடன் நான்காமிடத்திலுள்ளது. இலங்கை அணி ஓர் இடம் சரிந்து 101 புள்ளிகளுடன் ஐந்தாமிடத்திலுள்ளது. இந்திய அணி ஆறாமிடத்திலுள்ளது.

நியூசிலாந்து ஏழாமிடத்திலும் மேற்கிந்திய தீவுகள் எட்டாமிடத்திலும், சிம்பாப்வே ஒன்பதாம் இடத்திலும் வங்காளதேசம் பத்தாமிடத்திலும் உள்ளன. (கு)

## சூதாட்ட அறிக்கையில் டோனியின் பெயரா ?



முத்கல் விசாரணைக் குழு வெளியிட்டுள்ள சூதாட்ட அறிக்கையில் இந்திய அணித்தலைவர் டோனியின் பெயரும் இடம் பெற்று இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி முகுல் முத்கல் கமிட்டி விசாரணை நடத்தியது.

இந்தக் குழுவின் இறுதி அறிக்கை உச்சநீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்வரும் 10ஆம் திகதி இது தொடர்பான விசாரணை நடக்கவிருக்கிறது. இந்த சூதாட்ட அறிக்கையில் இந்திய அணித்தலைவர் டோனியின் பெயரும் இடம் பெற்று இருப்பதாக தக வல் வெளியாகி இருக்கிறது.

அவர் ஆதாயம் தரும் பொறுப்புகளில் இருந்ததாக முகுல் முத்கல் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறது. இந்திய அணித் தலைவராக இருக்கும் டோனி, தனது நண்பர் நடத்தும் ரித்விக் நிறுவனம் மூலம் பயன் அடைந்து உள்ளார். இந்த நிறுவனத் தில் டோனிக்கு பங்குகள் இருப்பதாக ஏற் கனவே தகவல் வெளியாகி இருந்தது.

இதுதவிர மேலும் அவர் ஆதாயம் தரக்கூடிய பொறுப்புகளில் இருப்பதாகவும் கூறப்படு கிறது. மேலும் இந்த அறிக்கையில், இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் ஒதுங்கி இருக்கும் என்.சீனிவாசனுக்கு இந்த விடயத்தில் எந்த தொடர்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. (கு)

## இந்திய அணியில் மூன்று முத்துக்கள்



இந்திய அணிக்கு மூன்று சிறந்த தொடக்க வீரர்கள் கிடைத்திருப்பது அதிர்ஷ்டம்' என ஷிகர் தவான் கூறியுள்ளார்.

கட்டாக்கில் நடந்த இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் தொடக்கத்தில் அசத்திய ஷிகர் தவான் (113), ரஹானே (111) சதம் அடித்து இந்திய அணிக்கு வலுவான அடித்தளம் அமைத்தனர்.

இதையடுத்து 363 ஓட்டங்களை எட்டிய இந்திய அணி இமாலய வெற்றி பெற்றது.

தற்போதைய நிலையில் தவான், ரஹானே தவிர தொடக்க இடத்தில் களமிறங்க ரோகித் சர்மாவும் தயாராக உள்ளார். இதனால், தொடக்க இடத்துக்கு கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஷிகர் தவான் கூறியதாவது:-

ரோகித் சர்மா, ரகானே மற்றும் நான் என மூன்று முத்தான தொடக்க வீரர்கள் இந்திய அணிக்கு கிடைத்துள்ளனர்.

மூன்று பேரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவது அதிர்ஷ்டம் தான். என்னைப் பொறுத்தவரையில் நல்ல பார்ட்னர்' என ரோகித் அல்லது ரஹானே ஆகியோரில், யாராவது ஒருவரை மட்டும் கூற முடியாது. இருவருடன் களமிறங்கும் போதும் நன் றாகத்தான் விளை யாடுகிறேன். அவர்களும், என்னுடன் சிறப்பாக விளையாடுவதாக நினைப்பர் என்று நம்புகிறேன்.

ரோகித், ரஹானே வெவ்வேறு ஸ்டைலில்' விளையாடுபவர்கள். தொடக்க வீரராக நான் தொடர்வது குறித்து அணி நிர்வாகம்தான் முடிவுசெய்ய வேண்டும். இதற்குப் பதில் சொல்ல முடியாது. இலங்கைக்கு எதிராக சதம் அடித்ததன் மூலம் எனது தன்னம்பிக்கை அதிகரித்துள்ளது என்று கூறியுள்ளார். (கு)





## புனேக்கு இரண்டாவது வெற்றி

ஐ.எஸ்.எல் உதைப்பந்து போட்டியில் புனே அணி, வடகிழக்கு யுனைட்டெட் அணியை வீழ்த்தி, இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

ஐ.எஸ்.எல் உதைபந்து தொடர் இந்தியாவில் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் புனே, வடகிழக்கு யுனைட்டெட் அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க வில்லை.

இரண்டாவது பாதியில் பந்து பெரும்பாலும் புனே வீரர்கள் கையில் தான் இருந்தது. போட்டியின் 88ஆவது நிமிடத்தில், புனே வீரர் டுடு அடித்த பந்து கோல் கம்பத்தின் மேலே பட்டுத் திரும்பியது.

இதை அங்கிருந்த கூசென்ஸ், தலையால் முட்டி கோலாக மாற்றினார். மறுபுறம், வடகிழக்கு அணி தனது மூன்று மாற்று வீரர்களை களமிறக்கியும் பயன் கிடைக்கவில்லை.

முடிவில், 1-0 என்ற கோல் கணக்கில் புனே அணி வெற்றி பெற்றது.

ஏற்கனவே, கோவா அணிக்கு எதிராக வென்றிருந்த புனே அணிக்கு, இது இரண்டாவது வெற்றியாக அமைந்தது. (கு)




## பாடம் கற்காத ஆஸ்திரேலியா

கடந்த காலங்களில் ஆஸ்திரேலியா பெற்ற தோல்வியின் மூலம் தமது அணி பாடம் கற்றுக் கொள்ளவில்லை என அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இந்திய அணிக்கு எதிரான சுற்றுத்தொடரில் 4:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலிய அணி தோல்வி கண்டது. இதன் பின்னரும் நாம் பாடம் கற்றுக்கொள்ள வில்லை. அபுதாபியில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட தோல்வி குறித்து கிளார்க் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

மந்தமான ஆடுகளங்களில் விளையாடுவது பற்றி ஆஸ்திரேலியா கூடுதல் அனுபவத்தைப் பெற வேண்டுமென கிளார்க் தெரிவித்தார்.

பாகீஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு 603 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், ஆஸ்திரேலிய வீரர்கள் சகல இலக்குகளையும் இழந்து 246 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார்கள்.

இந்த வெற்றியின் மூலம், 20 வருடகால இடைவெளிக்குப் பின்னர் வெளிநாட்டு சுற்றுத்தொடரொன்றில் ஆஸ்திரேலியாவை தோற்கடித்த பெருமை பாகிஸ்தானுக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (கு)



# சப்பலின் முகத்திரையை கிழிக்கும் சச்சின்



'பிளேயிங் இட் மை வே' என்ற தனது சுயசரிதைப் புத்தகதை வெளியிடவுள்ளார் சச்சின். அதில் அவர், தனது 24 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்வு குறித்த, சுவாரஸ்ய தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

அதில், மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற 2007 உலகக் கிண்ணத் தொடருக்கு சில மாதங்களுக்கு முன்னதாக, ராகுல் திராவிட்டை அணித்தலைவர் பொறுப்பில் இருந்து நீக்கி விட்டு, என்னை அணித்தலைவராக செயல்படுமாறு அப்போதைய பயிற்சியாளர் கிரேக் சப்பல் வலியுறுத்தினார் என்று சச்சின் டெண்டுகல்கர் தெரிவித்துள்ளார்.

2005 முதல் 2007 வரை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரேக் சப்பல் இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்தது. அவரது தலைமையில் இந்திய அணி, 2007 உலகக்கிண்ண போட்டியில் மோசமாக செயல்பட்டது. சப்பலின் அணுகு முறை, சப்பலின் அரசியல் உள்ளீட்டவற்றை சச்சின்; அந்தப் புத்தகத்தில் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார்.

நாளை வெளியாகவுள்ள அந்தப் புத்தகத்தில்,

"2007 உலகக் கிண்ணம் தொடங்குவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாக சப்பல் எனது வீட்டுக்கு வந்தார். அப்போது அவர் டிராவிட்டிடம் இருந்து அணித்தலைவர் பொறுப்பை என்னை ஏற்கச் சொன்னார். அவர், நாம் இருவரும் இணைந்து இந்திய கிரிக்கெட்டை நீண்ட ஆண்டுகளுக்குக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்றார் அப்போது எனது மனைவி அஞ்சலியும் உடன் இருந்தார். இதைக் கேட்டதும் நாங்கள் இருவருமே அதிர்ச்சி அடைந்தோம். இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக அவர் என்னை சமாதானப்படுத்த முயற்சித்தார். முடிவில், அவரது முயற்சி பலனளிக்காமல் வீட்டில் இருந்து வெளியேறினார்"- என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஹர்பஜன் சிங் கூறும்போது:

முன்னாள் பயிற்சியாளர் சப்பல் குறித்து சச்சின் கூறிய கருத்துகள் உண்மை. வீரர்களுக்கு இடையில் மோதலை தூண்டிவிட்டார், தவிர, வீரர்களுக்கு இடையிலான நல்லுறவில் விரிசலை ஏற்படுத்தினார். இதன் மூலம், அவரது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார். இந்திய அணியை சீர்குலைத்துவிட்டார்"- தெரிவித்துள்ளார். (ற)

## தொடர்ச்சிகள்

### கொத்துக்

ளும் ஜனாதிபதி ஆணைக் குழு முன் தாய் ஒருவர் சாட்சியமளித்தார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, கடந்த ஜுலை மாதம் முதல் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு வருகின்றது. அதற்கமைய முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இடம்பெற் அமர்விலேயே தாய் ஒருவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

தம்பிராசா ஜெயராணி என்ற அந்த தாயார் சாட்சியமளிக்கையில், "எனது மகன் ஜெயாதித்தன் 2009 ஆம் ஆண்டு காணாமற் போனார். நாம் இடம்பெயர்ந்து சுதந்திரபுரத்தில் இருந்தோம். அப்போது கொத்துக் குண்டு போட்டார்கள். அதில் எனது மகன் காயப்பட்டான். அவனைக் கூட்டிக் கொண்டு நான் திருகோணமலைக்குச் சென்று விட்டேன். இதனால் எனது மற்றைய மகன்களைத் தவறவிட்டு விட்டேன்.

நான் தவறவிட்ட பிள்ளைகள், ஓமந்தை இராணுவச் சோதனை சாவடிக்கு வந்தனர். இரண்டு பிள்ளைகளில் ஒரு பிள்ளையை இராணுவத்தினர் பிடித்தனர். மற்றைய பிள்ளை தற்போது இருக்கின்றது"- என்று தெரிவித்தார்.

அப்போது ஆணைக்குழுவினர் "கொத்து குண்டா போடப்பட்டது?" என்று கேள்வியெழுப்பினர். இதற்கு சாட்சியளித்த அவர், "ஆம், கொத்துக் குண்டுதான் போட்டனர்."- என்றார். "அது கொத்துக்குண்டு என்று எப்படித் தெரியும்?" என்று மறு கேள்வியை ஆணைக்குழுவினர் எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த தாய், "அந்தக் குண்டு மேலிருந்து போட்டவர்கள். அது வெடிச்சு நிறைய துண்டாக வெடித்த பின்னர் ஒவ்வொரு குண்டும் வெடித்துச் சிதறியது"- என்று நீண்ட விளக்கம் கொடுத்தார்.

(ற-5)

### அமைச்சர்

ஜனாதிபதி ஆணைக்குழு வின் அமர்வில், முத்தையன்கட்டைச் சேர்ந்த பத்மரஞ்சினி என்பவர் சாட்சியமளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

"முள்ளிவாய்க்காலிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தோம். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, இராணுவத்தினர் விடுத்த அறிவித்தலுக்கு அமைய எனது கணவர் அவர்களிடம் சரணடைந்தார். நான் கத்தி அழுத போதும், இர்ாணுவத்தினர் என்னிடமிருந்து கணவரை வேறுபடுத்திக் கொண்டு சென்றனர். அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ராதா படையணியில் இருந்தவர். அதனால் அவரை இராணுவத்தினர் தனியாகக் கொண்டு சென்றனர்.

இதன் பின்னர் அவருடன் எனக்குத் தொடர்பு இருக்கவில்லை. இந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5 ஆம் திகதி கொழும்பில் இருந்து வெளிவந்த பத்திரிகை ஒன்றில், எனது கணவரின் படம் வெளியாகியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த வவுனியா தடுப்பு முகாமுக்கு, முன்னாள் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க சென்று பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட படம் பிரசுரமாகியிருந்தது. அந்தப் படத்தில் எனது கணவரும் இருந்தார்.


அப்படியானால் வவுனியா தடுப்பு முகாமில் வைத்திருந்த எனது கணவர் இப்போது எங்கே?"- என்று அவர் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவினர், தங்களால் முடிந்தவரை தேடிப் பார்க்கின்றோம் என்று தெரிவித்தனர்.

(ற-5)


## நன்றி நவிலல்

### திருமதி சவினம்மா அந்தோனிப்பிள்ளை



யாழ். மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவினம்மா அந்தோனிப்பிள்ளை கடந்த 01.11.2014 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எம்மோடு அனுதாபத்தை தெரிவித்துக் கொண்ட அனைவருக்கும்,வெளிநாடுகளில் இருந்தும் மின்னஞ்சல் ஊடாகவும், தொலை பேசியூடாகவும் துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதோடு, இறுதிக்கிரியைகளின் போது எமக்கு உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (05.11.2014) புதன்கிழமை மதியம் நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

சூரி (மகன்)
AM பேக் ஹவுஸ்.
021 2211 810 / 077 676 1363

பழைய சந்தை வீதி,
மாதகல். (53805)(10)



## வேலையாள் தேவை

பான்ஸி ஹவுஸ் ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை. கணினி அறிவு உடையவர் விரும்பத்தக்கது. (52743)(10)

தொடர்புகளுக்கு: 077 967 1668



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி

பரிசில் நாள் 2014

இடம்: அருணாசலம் மண்டபம்
காலம்: 08.11.2014 சனிக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி

தலைவர்:

பிரதம விருந்தினர்:

சிறப்பு விருந்தினர்:

பரிசில் வழங்குநர்:

2012 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றி 2013 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் பரிசில்பெற தவறாது வருகை தரவும்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- கல்லூரிச் சமூகம்



## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் தயாளன் (தயா)

(சாரதி அரச சிறுவர் இல்லம்-கைதடி)

கோண்டாவில் வடக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தயாளன் (தயா) நேற்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுதேஷாவின் (உஷா, யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், அற்சகியின் (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், ரவீந்திரன், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் சேகர், மகேஸ்வரன், லோகேஸ்வரன், சுமதி, லதா, அட்செல்வி ஆகியோரின் சகோதரனும், இராஜநாயகம் (திரவியம்), செபமாலையம்மா தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (05.11.2014) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு மட்டுவில் லூர்து மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.இராஜநாயகம் (திரவியம்)

சந்திரபுரம், மட்டுவில். (53810)(10)

## சுன்னாகத்தில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

சுன்னாகம் பொது நூலகத்தின் அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள வாசிப்பு மாத சிறப்பு நிகழ்வு கல்லூரி அதிபர் திரு.இ.ஈஸ்வரதாசன் தலைமையில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற வுள்ளது. இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய அதிபர்களின் பட்டிமன்றம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ற-36)


### தவறிவிட்டது

இணுவில் கிழக்கு, இளந்தாரி கோயிலடியில் வசிக்கும் சாம்பசிவ ஐயர் சிற்சபேசர்மா என்பவரது அடையாள அட்டை (482110096V) மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்களும் அடங்கிய பேஸ் உடுவில் தெற்கு, சித்தி விநாயகர் கோயிலுக்கும் இணுவில் கிழக்கிற்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்து தவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொ.பே: 077 605 5539

(53786)(4.6.3)

### 33ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
ஞானேஸ்வரி குலேந்திரன்



தோற்றம் 20.02.1940

மறைவு 04.10.2014

கண்ணிமையாது காலமெல்லாம் காத்து
வந்த எங்கள் அன்னை
பெண்ணினல்லாள் பெருந்தகை எம்மைப்
பத்துமாதம் சுமந்த தெய்வம்
மண்ணில் நல்ல வண்ணம் நாம்
வாழ வழிகாட்டி
துன்பச் சுமைதான் தாங்கி நின்றாளுக்கு
எம் இதய அஞ்சலி

இணுவில் தெற்கு, இணுவில்.

மகள், மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53745)(4.6.3)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ 08.07.1952

மனம் பதைக்க 05.11.2013

திருமதி
ரஞ்சிதமலர் யூட் ஞானச்சந்திரன்

கண்ணிமைக்கும் நேரத்தில் கனதூரம்
சென்றுவிட்டாய்
தாங்கமுடியவில்லை தவிக்கின்றோம்
அன்ராவே!
எண்ணமெல்லாம் நீங்கள் தான்.
ஏக்கமெல்லாம் நீங்கள் தான்
கர்த்தரின் சமுகத்தில் நாம் உங்களை
சந்திக்கும் வரை
ஈரவிழிகளுடன் உங்களுக்காய்
காத்திருப்போம்.

குடும்பத்தினர்
தாரிக்கபற்று, வதிரி, கரவெட்டி.

### தவறிவிட்டது

ஆஸ்பத்திரி வீதிக்கும் வேம்படிச் சந்திக்கும் இடையில் பேர்ஸ் ஒன்று, தேசிய அடையாள அட்டை (911713306V) School IC, சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட வேறு சில ஆவணங்களுடனும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 9468839

(53791) (10)

### கண்ணீர் அஞ்சலி

நிதிக் கிளையில் கொள்வனவு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் அ. இளங்கோ அவர்களின் தந்தையார்

ஜேக்கப் அன்ரனிப்பிள்ளை

காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்துக்காக பிரார்த்திக்கின்றோம்.

நிதிக்கிளை,
யாழ். பல்கலைக்கழகம்.

(53780) (10)

நிதிக்கிளை,
அலுவலர்கள்.

### வலிகிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி.

### அறிவித்தல்

**கணக்காய்வுக்கான மீதிகளை உறுதிப்படுத்தல்**

வலி கிழக்கு தெ.ப.ப.நோ.கூ.சங்கத்தின் 01.06.2012-31.05.2013 காலப்பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சங்கக் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக்கையாளரும் கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படியான திகதிகளில் கடமை நேரத்தில் 31.05.2013 இல் தங்கள் புத்தகப்படியான மீதிகளைக் கிரா மிய வங்கிப் புத்தகங்களின் மீதியுடன் ஒப்பிட்டு உறுதி செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

| | |
|---|---|
| 01. நீர்வேலி கிராமிய வங்கி | 10.11.2014 |
| 02. கோப்பாய் கிராமிய வங்கி | 11.11.2014 |
| 03. உரும்பிராய் கிராமிய வங்கி | 12.11.2014 |

(சி/17555) (10)

கணக்காய்வாளர்.

### கண்ணீர் அஞ்சலி

பாதுகாப்பு உத்தியோகத்தர், எமது சங்க அங்கத்தவர் A.மதியழகன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் ஜேக்கப் அன்ரனிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும், பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவு சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்..

(53803) (10)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி இராசலட்சுமி தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற கனிஷ்ட நிறைவேற்று முகாமையாளர் - இலங்கை வங்கி)



அன்னை மடியில் 03.06.1949

ஆண்டவன் அடியில் 06.10.2014

எமது குடும்ப ஒளிவிளக்கு நோயுற்றிருந்த போது சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள், தாதிமார் மற்றும் ஊழியர்களுக்கும் மரணச்சடங்கில் நேரடியாக கலந்து கொண்டும், தொலைபேசி மூலமாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் இன்னும் பல வழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

இன்று (05.11.2014) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"ராஜ்மஹால்",
82/2, குறுக்கு வீதி,
நல்லூர்.

(53740)(12.3.6)

குடும்பத்தினர்.
021 222 5356

### மரண அறிவித்தல்

திருமதி அன்னலட்சுமி துரைச்சாமி



யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி துரைச்சாமி (01.11.2014) லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், பெரியதம்பி துரைச்சாமியின் (ஓய்வுபெற்ற தபால் அத்தியட்சகர்-கொழும்பு), பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, திலக வதி, பூமணி குணரட்ணம் மற்றும் குமாரசாமி (கனடா), சரோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயகுமார் (லண்டன்), குசல குமார் (லண்டன்), பிரேம்குமார் (லண்டன்), ரஜினி (லண்டன்) மற்றும் சிவ லோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், ஆஸ்திரேலியா அரியதுரை, சறோ, பத்மா ஆகியோரின் சிறிய தாயும், தயாநிதி, பிருந்தா, ஜனார்த்தனி, சத்தியமூர்த்தி, பரந்தாமன் ஆகியோரின் அன்பு மாமியும், அஸ்வினி, பிரசானா, டேமியன், திவியா, விஸ்ணுகா காலஞ்சென்ற சஜித் மற்றும் பானுஜா, அஹிர் ஷன், கிஷோ, சங்கீதா, நிரேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2014) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கணவர்:- P.துரைச்சாமி (லண்டன்) 00442089009881

பிள்ளைகள்

மகேந்திரன் (பற்றிமா இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய்)
0778510671, 0213735637


ரூபா சுப்பிரமணியம் (மகளிர் திட்டம், அம்பாள் நகர்)
0773235788, 0243247274

(41914)(10.6.3)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### மரண அறிவித்தல்

கந்தசாமி கிருஸ்ணசாமி பத்தர்



வேலணை பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வகுல வழித்தோன்றலாகிய கந்தசாமி கிருஸ்ணசாமி நேற்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னபூரணம் தம்பதியரின் மூத்த மகனும், செகராசா - பாக்கியலக்சுமி தம்பதியரின் மருமகனும், கிரிசாம்பாளின் அன்புக் கணவரும், துர்க்காம்பிகை, சுவர்ணா, ஜமுனாதேவி, கல்கிராஜ், கஸ்தனி, துளசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணரூபன், சங்கர் ஆகியோரின் மாமனாரும், ஹரினி, கபிர்ஷன் ஆகியோரின் தாத்தாவும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் கமலாதேவி, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், தேவகுஞ்சரம்பாள், ஞானாம்பாள், ஜெகதாம்பாள், ஸ்ரீகந்தராசா, ஸ்ரீ சந்தனராசா, சுந்தராம்பாள், ஸ்ரீ சௌந்தரராஜா (நந்தன்), ஸ்ரீ தவரட்ணராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் றோட்,
(மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோயிலடி),
தம்பர் லேன், மானிப்பாய்.

(53750) (12.3)

தகவல்: குடும்பத்தினர்.
H.P.No: 077 645 4444

**JAAHED Jaffna Alagappa Academy for Higher Education**

அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி, தமிழ்நாடு இந்தியா

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட கற்கை நெறிகள் (UGC/UA/4)

**Degree Courses**
- BA (Tamil Lit)
- BA (English)
- BA (History)
- BA (Public Administration)
- B.Sc (Psychology)
- B.Sc (Mathematics)
- B.B.A (Administration)
- B.C.A (Computer)
- B.B.A (Banking)
- B.com

**Master Degrees**
- M.com
- M.com (Finance)
- M.S.C (IT)
- M.A (English)
- M.A (History)
- M.Sc (Maths)
- M.A (Education)
- M.B.A (Education Management)
- M.A (Journalism)
- M.A(Sociolosy)
- M.A.(Tamil)




- Post Graduate Diploma Programmes
- P.G. Dip in Sports Management
- M.A Education = M.Ed
- MBA Education Management

2015 May பரீட்சைக்கு விண்ணப்ப முடிவுத்திகதி 15.11.2014

**Prof.M.Sinnathamby**
(ஓய்வுநிலை பேராசிரியர், அழகப்பா பல்கலைக்கழக அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல் நிறுவனத்துவ வழிகாட்டுநர்)

**Mr.A.Panchalingam**
(Emeritus Principal)

தொடர்புகளுக்கு: P.BALAMUHUNTHAN
(Co-ordinator Jaffna Alagappa Academy for Higher Education)
Mobile No : 077 386 7458

இல. 20, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு.
(Smart Kids Building)

(C/16388)(7&3)


# மரண அறிவித்தல்



## திருமதி விமலாதேவி நடராசா

யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு குமரந்தனையைப் பிறப்பிட மாக வும் வள்ளிபுனத்தில் வசித்தவருமாகிய விமலாதேவி நடராசா நேற்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-தையல் நாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், பத்மராணி, பத்மநாதன், தவமணிதேவி, பரமநாதன் ஆகியோரின் அன்பு சகோதரியும், தெய்வமலர் விமல ராசா இன்பராசா (கண்ணன்) இதயராசா ஆகியோரின் தாயாரும், தேவராசா, தவரஞ்சினி, கிரிஜா, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது மகன் இன்பராசா (கண்ணன்) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வள்ளி புனம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மகன் இன்பராசா (கண்ணன்)**
புதிய தனுசியன் வெதுப்பகம்
உரிமையாளர்

கண்டிக்குளம் சந்தி,
விசுவமடு.
077 361 4706

(47917)(10)

## வாகனத் தரிப்பிடம் திறப்பு விழா

அளவெட்டி, நவ.5

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப் பட்ட பணியாளர்களுக் கான வாகனத் தரிப் பிடம் இன்று 5 ஆம் திகதி காலை 9 மணிய ளவில் திறந்து வைக் கப்படவுள்ளது. வைத் தியசாலை பதில் வைத் திய அத்தியட்சர் வைத் திய கலாநிதி திவாகர் தலைமையில் திறப்பு விழா நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ந-36)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழக உப தலைவர் வி தயாபரன் (தயா அச்சகம்) அவர்களின் அன்பு மகனும், நிர்வாக சபை உறுப்பினர் த. யதுர்ஷன் அவர்களின் அன்புச் சகோதரனுமாகிய

அமரர் த. சிவதர்ஷன்

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்**
**சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர்**
(சி/17559)(10) **366, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**


**கிளிநொச்சி, யாழ்ப்பாணம் சொப்ட்லொஜிக் காட்சியறைகளுக்கு கீழ்க்காணும் வின்னப்பங்கள் கோரப்படுகின்றன.**

- காசாளர்-கிளிநொச்சி- பெண்
- வெளிக்கள உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்/கிளிநொச்சி-ஆண்
- காட்சியறை உத்தியோகத்தர்- யாழ்ப்பாணம் -பெண்

தகைமைகள்:
- சிறந்த பேச்சு ஆற்றல் உள்ளவர்கள்
- சாதாரணதரம் சித்தியடைந்திருத்தல்
- 18-25 வயதுக்குட்பட்டவர்கள்

நேர்முகப்பரீட்சை 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை 9.30 - 12 மணி வரை நடைபெறும்.

தொடர்பு:
077 739 7734- யாழ்ப்பாணம்.
077 454 4344- கிளிநொச்சி


# மரண அறிவித்தல்



## குமாரசாமி இராமச்சந்திரன்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மாசாரை வதிவிடமாகவும், தற்போது இல.63, முதலாம் குறுக்கு இரத்தின புரத்தை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி இராமச்சந்திரன் நேற்று (04.11. 2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-அப்புஜம் தம்பதியரின் மக னும், சுப்பிரமணியம் காலஞ்சென்ற யோகம்மா தம்பதியரின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெனனாநந்தன் (சுகாதார திணைக் களம்-யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்க ளான ஜெனனகுமார், யசோதா மற்றும் திலகநாதன் (நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சி), ஜெயசாந்தி (தாதியர் கல் லூரி, வவுனியா), ராஜன் (கனடா), ஜெயந்தினி, ஜெனுசன் ஆகியோரின் தந்தையும், நாகேஸ்வரி, பிரதீபன் ஆகியோரின் மாமனும், கிசோதா, கீபிகா, திபிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2014) புதன்கிழமை பகல் 12.00 தொடக்கம் ஒரு மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனகிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(47916)(10)

# தவறிவிட்டது

இராமசாமி வினோதன் ஆகிய எனது தே.அ. அட்டை (821174929V) சாரதி அனுமதிப்பத்திரம், Insurance, Tex, ATM அட்டைகள் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்-ஆனைக்கோட்டை-நவாலி வழியாக காரை நகருக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவு செய்து தந்துதவவும்.

தொடர்பு: 077 288 1783

(சி/17290)(10)

# மரண அறிவித்தல்



## இராசையா ஜெயலிங்கம்

யாழ். இருபாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zurich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஜெயலிங்கம் கடந்த (31-10-2014) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசையா-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற பரஞ் சோதி-நாகம்மா(மூத்த விநாயகர் கோவிலடி- கரணவாய் தெற்கு) தம்பதியரின் அன்பு மருமகனும், சிவமலரின் அன்புக் கணவரும், ஜெயபிரகாஷ், வெண்ணிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலர், மகாலிங்கம், செல்வராணி, குலசேகரி, சிவலிங்கம், சத்தியலிங்கம் காலஞ்சென்றவர்களான தன பாலசிங்கம், தனராணி, இன்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வமலர், செல் வச்சோதி, செல்வமலர், சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் திருவுடலானது இன்று (05-11-2014) புதன்கிழமை காலை 09:00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை Sperletweg 6A, 8052, Zurich என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மனைவி,**
**பிள்ளைகள், சகோதரர்கள்.**

(53806)(10)


**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

Spoken English
Veta Fluency Diploma
புதிய பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்
Mon, Fri 11.00 a.m.
Sat, Sun 9.00 p.m.

நெல்லியடி
Mon, Fri 3.30 p.m.

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

**IELTS**
(Duration: 50 hrs with 5 mock exams)
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

DMI British Council, இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

DMI COMPUTER EDUCATION

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கண்டிவீதி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, Tel.:021-224 1970 |


# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் ஈஸ்வரன்

கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஆறுமுகம் ஈஸ்வரன் நேற்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-கண்மணி தம் பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரனின் சகோதரனும், இலங்கைநாதன், ஞானசேகரம் (கனடா), குலசேகரம் (கனடா), சிவசுப்பிரமணியம் (இத்தாலி), ஸ்ரீசிவசாந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துன ரும் ரவீந்திரன் (இத்தாலி), ஜமேலா, சயந்தன் (லண்டன்), சயந்தகுமார் (இத்தாலி) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (இத்தாலி), கலைநேசன் (மாகாணக் கல்வித் திணைக்களம்- வடமாகாணம்), சங்கீதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹர னிகா, ஹரிகரன், திருஷா (இத்தாலி), லகீஷன், டிலக்ஷனா, கிஷான், கிரீஸ், ஜகீஸ் (லண் டன்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
தொ.பே: 021 492 3490, 077 449 3273

**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

(53793)(10)

## தொடர்ச்சிகள்

### 18 ஆவது

வித்தல், லஞ்சம் வழங்கிக் காரியங்களைச் சாதித்தல் ஆகியவற்றிலிருந்து நீதித்துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு இலங்கை அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் போராளிகளைப் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களிலிருந்து பாதுகாக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள், பாலியல் வன்முறைகள், சித்திரவதை செய்யப்படுதல் ஆகியன தொடர்பாகப் பக்கச் சார்பற்ற விசாரணைகள் இடம்பெறவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் அவர்கள் ஆண்களுக்குச் சமனான வகையில் நடத்தப்படவேண்டும். ஊடகவியலாளர்கள், சட்டவாதிகள், மதகுருமார், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் எனப் பலரும் தாக்கப்படுவதும், கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதும், குற்றஞ் சுமத்தப்படுவதும் அதிகரித்துக் காணப்படுவதாகப் பரவலாக அறிக்கைகள் கிடைத்து வருகின்றன. அரசு இவற்றை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

தனியாள்களோ அல்லது அமைப்புக்களோ தகவல்களைச் சுதந்திரமாக வழங்க முடியும். இவர்களுக்குரிய பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் மனித உரிமைகள் சபை தெரிவித்துள்ளது. (த-க)

### கூட்டமைப்பின்

சரிவுகள் ஏற்படக் கூடிய அபாயங்கள் இருக்கின்றன என்பதை இலங்கை அரசு தெரிவித்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸே தெரிவித்துள்ளது. அப்படிக் கூறப்பட்டிருப்பின் ஊவா மாகாண அமைச்சராக இருக்கும் செந்தில் தொண்டமான் சரி, ஏனைய அமைச்சர்களும் சரி இந்த மக்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை இதுவரை எடுத்திருக்கின்றீர்கள். பெரிய அழிவுகள் ஏற்பட்ட பின்பும் ஆளும் கட்சியில் இருக்கின்றோம் என்பதற்காக ஏனையோரில் குற்றம் காணுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. அது மாத்திரமல்ல மலையகத்துக்கான எங்களுடைய பயணம் என்பது எந்தவித அரசியல் நோக்கம் கொண்டதுமல்ல. மலையக மக்களிடம் நாங்கள் வாக்குக் கேட்டு வரப்போவதுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்பது அடக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுபவர்கள். ஆகவே அடக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்கள் மலையகத்தில் இருந்தாலும், வேறு எங்கிருந்தாலும் குரல் கொடுக்க வேண்டியது எங்கள் கடமை. ஆகவே அவ்வாறு பேசக் கூடாதென்று யாரும் எமக்கு தடையுத்தரவு போட முடியாது. செந்தில் தொண்டமான் கண்டனம் தெரிவிக்கும் அளவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றும் பிழையாக நடக்கவில்லை. ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான மலையக தமிழ் மக்களுக்குக் காணிகள் வழங்கி அவர்கள் நிரந்தரக் குடிகளாக இருப்பதை உறுதிப்படுத்தியவர்கள் நாங்கள்.

போரினால் நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், எமது மக்களின் காணிகளை இராணுவம் பறித்தெடுக்கின்றது என்பதும் உண்மை. ஆனால் அவற்றை நாங்கள் பெற்றுக் கொள்ள இறுதிவரை போராடுவோம் என்பதையும், மலையகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்ற மாற்றுத் திட்டங்களை அரசு முன்னெடுக்காவிட்டால், அவர்களுக்கு வடகிழக்கில் இடம் இருக்கின்றது என்பதையும் மீண்டும் வலியுறுத்தி கூற விரும்புகின்றேன் - என்றுள்ளது. (த)

### சூரன்போர்

வன் பாடசாலையில் கல்வி கற்கும் குறித்த சிறுவன் சூரன் பார்ப்பதற்காக வவுனியா நகர் நோக்கிச் சென்றுள்ளார். ஆனால் இன்று வரை அவர் வீடு திரும்பவில்லை. அவர் பற்றிய எந்த வித தகவலும் கிடைக்கவில்லை. அது தொடர்பாகத் தாமும் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-421)

### மு.கா எடுக்கும்

நாங்கள் மிகத் திறந்த மனதோடு நாம் கலந்துரையாட வேண்டும். மக்களது விருப்பத்தைப் புரிந்து கொள்ளாமல் புறந்தள்ளித் தேர்தல் பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ள முடியாது. அரசு ஏதோ ஒரு கணிப்பைப் போட்டு முஸ்லிம் காங்கிரஸ் தன்னோடு இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளது. மற்றக் கட்சிகளைப் போலவே முஸ்லிம் காங்கிரஸ் தன்னோடு வராவிட்டால் அதனை உடைக்க தனக்குத் தெரியும் என எண்ணலாம்.

அன்றும், இன்றும் முஸ்லிம் காங்கிரஸை அடிப்பதற்கென்று கங்கணம் கட்டப்படுவதனால் நாங்கள் ஆத்திரமடைகிறோம். முஸ்லிம் காங்கிரஸின் இருப்புக்கு ஆபத்து ஏற்படுவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். எங்களை அதட்டி, அடிபணிய வைக்க முயற்சிப்பவர்களுக்கு நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. எங்களுக்கென்று ஒரு கட்டம் வரும். அதுவரை நாம் பொறுமை காக்கின்றோம். நாங்கள் மத்திய அரசில் மட்டும் ஆட்சியின் பங்காளர்கள் அல்ல. கிழக்கிலும் ஆட்சியின் பங்காளர்கள். கிழக்கில் ஆட்சியின் பங்காளர்களாக வர நேர்ந்ததே வடக்கு-கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான். இவ்வளவு பங்களிப்புச் செய்தும் எங்கள் சமூகத்துக்கு எதுவும் உருப்படியாக நடக்கவில்லை என்பதனால் தான் எங்களது ஆத்திரமும், ஆவேசமும் இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறது.

எங்களை மற்றவர்கள் பகடைக் காய்களாகப் பாவிக்க இடங்கொடுக்காமலும் அடுத்த கட்சிகளின் முன்னெடுப்புக்களைக் கூர்மையாக அவதானித்தவர்களாகவும் தான் நாங்கள் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அந்த முடிவு ஈற்றில் இந்த நாட்டு முஸ்லிம்களின் விமோசனத்துக்கு வழி வகுக்கின்ற முடிவாகவும் இருக்க வேண்டும்-என்றார். (த-10)

### பயங்கரவாதச்

புலிகளைப் பற்றிப் பேசும் இந்த அரசு, கனவிலும் புலிகள் வரவேண்டும் என்றே விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

அவசரகால தடைச்சட்டம் நீக்கப் பட்டிருந்தாலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாக தமிழ் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்தச் சட்டத்தைக் காரணங்காட்டி வடக்கு, கிழக்கில் அறவழியில் நடைபெறும் போராட்டங்கள்கூட தடுத்து நிறுத்தப்படுகின்றன. எனவே, சட்டம், ஒழுங்கு என்பது தென் பகுதிக்கு ஒரு விதமாகவும், வடக்கு, கிழக்குக்கு மற்றுமொரு விதமாகவுமே பயன்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் பலர் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் நான்காம் மாடிக்கு விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். சமாதானம் மலர்ந்து விட்டது எனக் கூறும் அரசு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடன் நீக்குமா? தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமா?

அத்துடன், வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் குறி வைக்கப்படுகின்றனர். அவர்கள் வாழும் வீடுகளுக்கு முன்னால் இராணுவப் பொருள்களைப் புதைத்து விட்டு அவர்களை விசாரணைக்காக 4ஆம் மாடிக்கு அழைக்கும் நிலையிலேயே இன்று சட்டம், ஒழுங்கு காணப்படுகின்றது - என்றார்.

### மீரியபெத்தயில்

பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். இதேவேளை - மண்ணுக்குள் புதையுண்ட சிலரது உடற்பாகங்கள் நேற்றும் மீட்கப்பட்டன என்று - பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### மீனவருக்காக

துழைப்பு இயக்கத்தின் தலைவர் ஹேமன்குமார, வடக்கு - கிழக்கு இணைப்பாளர் ஏ.ஜேசுதாசன் மற்றும் யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, மன்னார் இணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். (த-402)

### நேற்றிரவு

தென்படாமல் அவர்களுடன் மோதுண்டிருக்கலாம் என்றும், சைக்கிளில் சென்ற இருவரும் மீன் பிடிப்பதற்கான பறியை நீளமான தடியில் வைத்துக் கட்டிக்கொண்டு சென்றனர் என்றும், வாகன ஒளி காரணமாக அதுவும் கண்ணுக்குப் புலப்படாமல் விபத்து இடம்பெறக் காரணமாக அமைந்திருக்கலாம் என்றும் அங்கிருந்தவர்களால் கூறப்பட்டுள்ளது.

விபத்தையடுத்து குறித்த வாகனம் தன்பாட்டில் சென்றுவிட்டது என்றும், காயமடைந்தவர்கள் காரைநகர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சடலம் காரைநகர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-4)

### சாட்சிகளைத்

நிறைவேற்றப்பட்டுள்ளன. இறுதியாக கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலமே இலங்கை சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2012ஆம் மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஊடாக நம்பகரமானதும், சுயாதீனமானதுமான உள்நாட்டு பொறிமுறையை ஸ்தாபிக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப் படாததன் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தற்போது விசாரணைக்கான பொறிமுறையாக நிபுணர்கள் குழுவொன்றை அமைத்துள்ளது.

எனினும், இந்த விசாரணைக் குழுவுக்கு அரசு அனுமதி மறுத்துள்ளது. அத்துடன், இலங்கைப் பிரசை ஒருவர் இந்த விசாரணைக் குழுவிடம் தமக்குத் தெரிந்தவற்றை சாட்சியமளிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது அடிப்படை உரிமை மீறலாகும்.

இந்நிலையில், ஐ.நா. நிபுணர் குழுவின் விசாரணைக்கு உதவும் வகையில் எவரும் சாட்சியமளிக்கும் பொருட்டு அரசமைப்பை மீறிச் செயற்பட்டால், அவர்கள் சட்டத்தின் முன்னிலையில் தண்டிக்கப்படுவார்கள் என்று அதிகாரத்திலுள்ள இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது சாட்சிகளை அச்சுறுத்தும் செயலாகும்."- என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

"பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நீண்டகால தீர்மானத்துக்கான நடவடிக்கை குறித்து அரசுடன் சிந்திக்க வேண்டும். குறிப்பாக, இலங்கையில் போர் இடம்பெற்றபோது ஐ.நா. செயற்பட தவறிவிட்டது என்று ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கு நியாயபூர்வமான வழிமுறையொன்று இலங்கையில் இல்லை என்றும், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமித்த குழு தெரிவித்தது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வடக்கு மாகாண சபையை யார் ஆட்சி செய்யவேண்டும் என்பதற்கான தெளிவான ஜனநாயக தீர்ப்பை வடக்கு மக்கள் வழங்கியுள்ளனர். வடமாகாண சபைத் தேர்தலில் 78.48 சதவீத வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்தது. எனவே, வடக்கு மக்கள் வழங்கிய தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அந்த மக்களின் தீர்ப்பு மதிக்கப்படவேண்டும். அதை குப்பைக் கூடையில் எறிந்துவிட முடியாது.

ஆகவே, தமிழ் மக்களின் கோரிக்கைக்கமைய அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும். வடக்கு மாகாண சபையும் அதன் முதலமைச்சரும் ஜனநாயக தீர்ப்புக்கமைய இன்று செயற்படுகின்ற நிலையில், கிழக்கு மாகாண சபை, மக்களின் தீர்ப்புக்கு முரணாகவே செயற்படுகின்றது. அரசால் நியமிக்கப்பட்ட முதலமைச்சர் மட்டுமே இருக்கிறார்.

வடக்கிலும், கிழக்கிலும் அதிகப்படியான இராணுவ பிரசன்னமானது மாகாண சபைகளின் அதிகாரங்களை சீரழிப்பதில் பெரும் பங்கை வகிக்கின்றது. வடக்கு, கிழக்கு மாகாணசபை ஆட்சி வெற்றிகரமாக அமைந்துவிடக் கூடாது என அரசு சிந்திக்கின்றது. வடக்கு மாகாணசபைக்கும் அதன் முதல்வருக்கும் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை; மதிக்கப்படவில்லை."- என்று தெரிவித்தார். (ற-சி)

### சொந்தக் காணி

மக்கள்.பதுளை, கொஸ்லந்தவில் ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களை நேற்று நேரில் சென்று சந்தித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர். அப்போது அவர்களுக்கான உதவிப் பொருள்களையும் அவர் வழங்கினார். அவர்களுடன் கலந்துரையாடும் போதே அந்த மக்கள் முதலமைச்சரிடம் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

"நிவாரணம் எமக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றது. ஆனால் எமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும். எமக்கு சொந்தமாகக் காணிகளைப் பெற்றுத் தருவதோடு, வீடுகளையும் கட்டித்தருவதற்கு அரசுக்கு நீங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்"- என்று அவர்கள் முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண முதலமைச்சர், "வடக்கு மாகாண மக்களும் உங்களுடன் இருக்கின்றார்கள் என்பதை புரியவைக்கவே நான் இங்கு வந்தேன் உங்களுக்கான காணிகள், வீடுகள் தொடர்பில் எமது கட்சி நாடாளுமன்றிலும், வெளியிடங்களிலும் பேசுகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். குறிப்பாக, பெற்றோரை இழந்துள்ள பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வியை முன்னெடுக்கவும் அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் நாம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் எம்முடன் தொடர்புகொள்வார்களானால் அவர்கள் வடக்கில் அல்லது கொழும்பில் கல்வியைத் தொடருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

தேர்தல் காலங்களில் இங்கு வந்து வாக்குக் கேட்பது மட்டும் அரசியல்வாதிகளது வேலையில்லை. இவ்வாறான பாதிப்புகள் ஏற்படும் இடங்கள் இனங்காணப்பட்டிருந்தால் அவற்றுக்கு மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்துவதும் அவர்களின் கடமையாகும்"- என்று தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான மனோ கணேசன், மத்திய மாகாணசபை உறுப்பினர் வேலுகுமார், ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான சி.பாஸ்கரா, தி.நிரோஷ் ஆகியோரும் முதலமைச்சருடன் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். (ற-4)

### பாப்பரசருடைய

தில் தேர்தல் நடத்தப்பட்டாலும் பரிசுத்த பாப்பரசரின் வருகை திட்டமிட்டப்படி நடைபெறும். பாப்பரசரின் வருகைக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கும் இடையிலான குழப்பங்கள் தேவையற்றவை.

13ஆம் திகதி இலங்கைக்கு வரும் பரிசுத்த பாப்பரசர் 14ஆம் திகதி காலிமுகத்திடலில் திருப்பலி நிகழ்வில் கலந்துகொள்வார். தொடர்ந்து அன்றைய தினம் மாலை மடுவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிபாடுகளில் பங்கேற்றுக்கொண்டு 15ஆம் திகதி பிலிப்பைன்ஸ் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எந்த விதமான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை. தேர்தல் திகதி இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் பரிசுத்த பாப்பரசரின் வருகைக்கு இலங்கை பாதுகாப்பு தரப்பினர் போதுமான ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் பரிசுத்த பாப்பரசரின் வருகை திட்டமிட்டபடி நடக்கும்"- என்று அவர் தெரிவித்தார். (ற-10)

### ஓய்வெடுத்த

எதுவுமில்லை. அது தொடர்பில் உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் யாழ்.நீதிவான் பெ.சிவகுமார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டார். பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

### ஆணைக்குழுவிடம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இடம்பெற்ற அமர்வில், 67 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 61 பேர் சாட்சியமளித்தனர்.

சாட்சியமளித்தவர்களில் 26 பேர், தமது பிள்ளைகள் காணாமற்போனமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என்று தெரிவித்தனர். புலிகளால் கட்டாய ஆள்சேர்ப்பில் கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னரே காணாமற் போயினர் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இராணுவத்தினரால் தமது உறவுகள் காணாமற்போகச் செய்யப்பட்டனர் என்று 20 பேர் சாட்சியமளித்தனர். அவர்களில் பலர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பின்னர் காணாமற் போயினர் என்று தெரிவித்தனர். அத்துடன் சிலர், தமது இடத்தை இராணுவம் சுற்றி வளைத்துப் பிடித்த போது காணாமற்போனார்கள் என்று குறிப்பிட்டனர்.

இதேவேளை- 6 சாட்சிகள் தமது உறவுகளை நேரடியாக இராணுவத்திடம் கையளித்து காணாமற் போனதாகத் தெரிவித்தனர். அதில் 4 பேர் வட்டுவாகலிலும், 2 பேர் ஓமந்தையிலும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று சாட்சியத்தில் குறிப்பிட்டனர்.

இதேவேளை - 15 பேர் வரையில் தமது உறவுகள் யாரால் காணாமற் போயினர் என்பது தெரியாது என்று சாட்சியமளித்தனர். (ற-5)

## பாக்கின் வெண்ணிறப் பகுதி வாய்ப்புற்று நோய்க் காரணி

கொழும்பு, நவ.5
முழுப்பாக்கு ஒன்றின் நடுப் பகுதியில் காணப்படும் வெண்மையான பகுதியில் உள்ள 'எரிகொலின்' என்ற இரசாயனப் பொருள் வாய்ப்புற்று நோய்க்கான காரணி என்று ராஜகிரியவில் உள்ள மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான திருமதி எஸ்.கே. எம். கே. ஹரபந்தெனிய தெரிவித்தார்.
பாக்கைச் மெல்லும்போது அந்த இரசாயனப் பொருள் வாயினுள் உள்ள சளிக் கோளத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும் தொடர்ச்சியாக மெல்லும் பழக்கத்தால் புற்றுநோய் அபாயம் இருப்பதாகவும் திருமதி ஹரபந்தெனிய விளக்கமளிக்கிறார்.
வெற்றிலை போடுவதற்கு நாம் பயன்படுத்தும் பாக்குத் துண்டொன்றின் நடுவில் காணப்படும் வெண்மையான பகுதியைச் சுரண்டி அகற்றி விட்டே வெற்றிலையுடன் பாக்கைச் சேர்த்துக் கொள்வதை எமது மூதாதையர்கள் பழக்கமாகக் கொண்டதாகவும் தெரிவிக்கும் அவர் இன்று பெரும்பாலானோர் அதைக் கடைப்பிடிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
அடிக்கடி வெற்றிலை மெல்லுவதாகவும், அந்த வெற்றிலை மெல்லலை வாயில் வைத்தவாறே நித்திரை செய்வதால் மற்றும் வெற்றிலையை மென்று விட்டு வாயை நீரால் கழுவிச் சுத்தப்படுத்திக் கொள்ளாதிருப்பதாலும் புற்றுநோய் அபாயம் அதிகரிப்பதாகவும் திருமதி ஹரபந்தெனிய அபாய அறிவிப்பு செய்கிறார். (வ-22)

## சுவிஸில் நகரசபை தேர்தலில் ஈழத் தமிழ்ப் பெண் போட்டி



ஜெனீவா, நவ.5
புலம்பெயர் தமிழரின் இரண்டாவது தலைமுறை, தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வரும் நிலையில், அந்தந்த நாட்டின் உள்ளூர் அரசியலிலும் பிரவேசித்து முத்திரை பதித்து வருகின்றது. அந்த வரிசையில் சுவிற்சர்லாந்து நாட்டின் பேர்ண் மாநிலத்தில் உள்ள தூண் நகர நகராட்சித் தேர்தலில் இளம் தமிழ்ப் பெண்மணி ஒருவர் களம் இறங்கியிருக்கிறார்.
சுவிற்சர்லாந்து நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் சோசலிசக் கட்சியின் சார்பில் திருமதி தர்சிக்கா கிருஷ்ணானந்தம் (வடிவேலு) இந்த நகராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றார்.
கணக்காளராக ஆவதற்குப் பயின்று, பட்டம் பெற்ற தர்சிக்கா ஒரு தொழில்முறை மொழி பெயர்ப்பாளராகவும் விளங்கி வருகின்றார். அதேவேளை, தூண் நகரசபையில் இந்து மதம் மற்றும் தமிழர் கலாசாரம் என்பவற்றுக்கான ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள நகராட்சித் தேர்தலில் தூண் நகரசபைக்காக 40 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். அவர் சார்ந்த சோசலிசக் கட்சி சார்பில் கடந்த தேர்தலில் 8 உறுப்பினர்கள் தெரிவாகி இருந்தனர். இந்தத் தேர்தலில் சுவிஸ் பிரஜா உரிமை பெற்றவர்களும் 'சீரக வதிவிட உரிமை பெற்றவர்களும் வாக்களிக்க முடியும்.
எனவே, இந்த நகரப் பிரதேசத்தில் வாழும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் ஏகோபித்த ரீதியில் ஒற்றுமையாக தர்சிக்காவுக்கு வாக்களிக்கும் நிலையில் அவர் ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மோடி அரசு மீது வைகோ காட்டம்

## தமிழக மீனவரின் தூக்கு விடயத்தில்



சென்னை, நவ.5
தமிழக மீனவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளதற்கு நரேந்திர மோடி அரசு தான் காரணம் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ காட்டமாகத் தெரிவித்துள்ளார்.
தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரியும், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரியும், பால் விலையை உயர்த்திய தமிழக அரசை கண்டித்தும் ம.தி.மு.க சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நேற்று போராட்டம் நடைபெற்றது.
அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், "ஒழியட்டும், ஒழியட்டும் தூக்குத் தண் டனை ஒழியட்டும்" என்று கோஷங்கள் எழுப்பப்பட்டன.
இதன்போது, செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, தமிழகத்தில் பால் விலை உயர்வால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
5 மீனவர்களின் தூக்குத் தண்டனைக்கு மத்திய அரசே காரணம். மோடி அரசின் தவறான அணுகுமுறையால் மீனவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷவுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுத்த மானங்கெட்ட அரசு. அந்த அரசுக்கு இங்கே ஒருவர் பாரத ரத்னா கொடுக்க வேண்டும் என்கிறார்" என்று ஆவேசமாகக் கூறினார். (வ)

CMYK

## அறநெறி அமுதம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.5
அறநெறி அமுதத்தின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரிமண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார்.
கௌரவ விருந்தினர்களாக நல்லை ஆதீன பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ் வரானந்தஜி மஹராஜும் கலந்து கொள்வர்.
சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டஸும், உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் அ.அருள்நந்தசிவமும் கலந்து கொள்வர். (வ-ரி)

## வடமராட்சி வலய அதிபர்கள் விவரம் வலயத்தால் திரட்டல்

நெல்லியடி, நவ.5
வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தால் திரட்டப்படவுள்ளது. புதிய அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 1.7.2008 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற இலங்கை அதிபர் சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக உள்வாங்குவதற்காக அவர்கள் குறித்த விவரங்கள் திரட்டப்படுகின்றன.
மத்திய கல்வி அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலக்கம் 02 படிவத்தை சம்பந் தப்படுவோர் இன்று புதன் கிழமை வலயக் கல்வி அலுவ லகத்துக்கு சமுகமளித்து பூர்த்தி செய்து வழங்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார். அறிவித்துள்ளார். (வ-35)

# வீதி அமைத்தல் அபிவிருத்தியல்ல மன நல விருத்தியே உண்மையான மேம்பாடு

## உள மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5
வீதி புனரமைத்தல், கட்டடங்கள் அமைத்தல் என்பனவே அபிவிருத்தி என்று பலர் கருதிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அவை அபிவிருத்தியல்ல. சமாதானம், நீதி, சமூக விருத்தி, நோயின்மை மற்றும் வறுமையின்மை உள்ளிட்ட மன நலத்துடனேயே அபிவிருத்தி சாத்தியம் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது. இவற்றையே அபி விருத்தி என்று கூறவேண்டும் என்று உள நல்மருத்துவர் சி.சிவதாஸ் தெரிவித்துள்ளார்.
உளநல தினத்தையொட்டி 'சித்தம் அழகியார் என்ற தொனிப் பொருளில் யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த புதன்கிழமை நிகழ்வொன்று இடம்பெற்றது.
அந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
சூழல், பொருளாதாரம், சமூகம் ஆகிய மூன்றும் இணைந்து காணப்படுமாயின் அதனை அபிவிருத்தி என்று கூறலாம். எடுத்துக் காட்டாக ஏ-9 வீதி புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் அந்த வீதியை அண்மித்துள்ளவர்களுக்கு அது ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் அதன் மூலமாகப் பயன் ஏற்பட்டதா என்று கேட்டால் ஆராயப்பட வேண்டும் என்று தான் கூறமுடியும். அபிவிருத்தி என்று கூறுவதற்கு சமாதானம், நீதி என்பன வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். வறுமை, நோயின்மை காணப்பட வேண்டும். இவற்றையே அபிவிருத்தி என்று கூற முடியும்.
உளநல பாதிப்பு இங்கு பெரிய அளவில் காணப்படுகிறது. ஒருவர் தன்னுடைய திறன்களை அறிந்து கொள்ளல் சாதாரண நெருக் கடியை ஏற்றுப் பாதுகாத்தல் என்பவற்றுடன் சமூகத்துக்கு உபயோகமாகப் பங்களித்தல் என்பதும் முக்கியமாகவுள்ளன. மன நிலை பாதிக்கப்படுவது பல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. ஆராய்ந்த பின்னரே அவ்விதம் கூறப்பட்டுள்ளது.
சமூகத்தில் சமவுரிமை இல்லாத தன்மையும் பாதிக் கும். தனியே வாழ்கின்ற மக்கள் பாதிக்கப்படுவர். விவாகரத்து ஏற்படலாம், சிறுவர்கள் கைவிடப்படல், சமூக ஆதரவு குறைந்து காணப்படுதல், வன்முறை, போதைக்கு அடிமையாதல் போன்றன காணப்படும். அவர்களது அடிப்படைப் பொருளாதார நிலையைக் கட்டியெழுப்ப வேண்டும். போருக்குப் பின்னர் சிவில் சமூகத்தை கொண்டு வருதல், சட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதும் முக்கியம். உளப்பிரச்சினைகள் நிறைய அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பாதிப்பு எமது மக்களைப் பொறுத்த வரையில் 3 பேருக்கு ஒருவர் அல்லது 3 பேருக்கு 2 பேர் என்ற அடிப்படையிலான ஏதுநிலை காணப்படுகிறது.
மிகமுக்கிய பிரச்சினைகளை குண மாக்கலுக்கான வெளி மிகக் குறைவு. உதாரணமாக நினைவுகூரலுக்குத் தடை காரணமாகிறது. நினைவு கூரல் அரசியலாக்கப் படுவதாலும், அதற்குத் தடை விதிக்கப்படுகிறது. குணமாக்கலுக்கான வெளியை அரசு தர வில்லை. அரசியலுக்கு அப்பால் நோய்களைக் குணப் படுத்த முற்பட்டால் நன்று. சமூக, சமய விடயமாக அதனைச் செய்தால் நன்று. அவ்வாறு செய்யாவிட்டாலும் பரவாயில்லை காயப்படுத்தாது விட்டாலே போதும்" - என்றார். (வ-4)

## மலையக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் அவசியம் உணரப்பட்டுள்ளது

### நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவிப்பு

லண்டன், நவ. 5

இலங்கையில் மலைப் பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை இந்த மண்சரிவுச் சம்பவம் எமக்கு உணர்த்துகின்றது என்று நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள மீரியப்பெத்த கிராமத்தில் மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பாக அனுதாபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், மண்ணுக்குள் புதைந்தவர்களுக்குத் தமது இறுதி மரியாதைச் செலுத்தியதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தமது உணர்வு பூர்வமான அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்து வாழும் பல்வேறு குழுக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைவழங்குவதற்கு அனுமதிக்கப்படாத நிலை தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசு கடும் விசனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மீரியபெத்த பேரிடரில் சாவடைந்தவர்களை நினைவு கூருமுகமாக ஒருவாரம் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுமென விடுத்த அழைப்பைத் தாம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடு கடந்து வாழும் அனைத்துத் தமிழ் மக்களையும் இதை அனுஷ்டிக்குமாறும், அதன்போது இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பிரார்த் தனையில் ஈடுபடுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசு விடுத்துள்ள செய்தியின் முக்கிய பகுதி பின்வருமாறு:-

மிகவும் பயங்கரமான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட நிலையில் வாழுகின்ற தமிழ் சகோதரர்கள் மீது இயற்கையும் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இலங்கையில் மலைப் பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை இந்த மண் சரிவுச் சம்பவம் எமக்கு உணர்த்துகின்றது.

அதேவேளை, வரையறைகளுக்கு உட்படாத வகையிலான உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானத்துக்கு வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம். இலங்கை அரசின் தடைகாரணமாக நிவாரண நடவடிக்கைகளில் நேரடியாக எமது அரசு ஈடுபடமுடியாத நிலையில் இருப்பது தொடர்பாக நாம் கடும் விசனம் அடைகின்றோம் - என்றுள்ளது. (த-க)

## கோயில், கடையில் நள்ளிரவில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ 5

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு கோயில் மற்றும் கடை என்பனவற்றில் திருட்டு இடம்பெற்றுள்ளது. அதில் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாவடியிலுள்ள பிள்ளையார் கோயில் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மருதனார்மடம் பகுதியில் உள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன, பால்மா பைக்கற்றுக்கள் உள்ளிட்ட பொருள்களே அங்கு திருடப்பட்டுள்ளன.

தவிர பதுளையைச் சேர்ந்த இரண்டு பேர் சுன்னாகம் சந்தியை அண்மித்துள்ள கடைகளில் பணம் மாற்றுமாறு கூறிக் கடைக்காரர்களிடம் தந்திரமாகச் செயற்பட்டுப் பண மோசடி செய்துள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டதனையடுத்து ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## சிப்பாய்க்கு மறியல் நீடிப்பு

விபத்து சம்பவம் ஒன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கடற்படைச் சிப்பாய் உள்ளிட்ட இருவரின் விளக்கமறியல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. (த-103)

## மாலக சில்வாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

பொது மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவின் பிணை மனுவை நிராகரித்து எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு, கொள்ளுபிட்டி பகுதியில் இரவு நேர களியாட்ட விடுதியொன்றில் ஸ்கொட்லாந்து பொறியியலாளர் மற்றும் அவரது காதலியைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தானும் கடுமையாகத் தாக்கப்பட் டுள்ளதாகத் தெரிவித்து சிகிச்சைகளுக் காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் எம்.எச்.சஹாப்தீன் அங்கு சென்று சந்தேகநபரான மாலக சில்வாவை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கு மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபரை ஆள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த வேண்டி யிருப்பதால் அவருக்கு பாதுகாப்புக்கு வழங்குமாறு நீதிவான் சிறைச் சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, மாலக்க சில்வா இதற்கு முன்னரும் இது போன்ற தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் தடுப்பில் இருந்த நபர் காயத்துடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், நவ. 5

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் தடுப்பில் இருந்த நபர் கை, கழுத்துப் பகுதிகளில் வெட்டுக் காயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மல்லாகம் நீதிவான் வைத்தியசாலைக்குச் சென்று குறித்த சந்தேக நபரைப் பார்வையிட்டதோடு அது தொடர்பில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கட்டுவன் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி அனிஸ்ரன் (வயது-29) என்பரே இவ்வாறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குடும்பஸ்தரை அன்றைய தினம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த சுன்னாகம் பொலிஸார், விசாரணை எதுவுமின்றித் தடுத்து வைத்திருந்து பிற்பகல் 2 மணியளவில் அவரின் தாயார், மனைவியை வீட்டுக்குச் செல்லுமாறு கூறிவிட்டு அவரை அங்குள்ள பொலிஸ் தடுப்பில் அடைத்துள்ளனர். அதனால் அவர் விரக்தியுற்றிருந்ததாகக் கூறப்பட்டது.

செல்லில் உள்ள மலசல கூடத்துக்குச் சென்றபோது அங்கு இருந்த சவர அலகை(பிளேட்) அவர் எடுத்துத் தனது பொக்கற்றில் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. தன்னை பொலிஸார் விடுதலை செய்வார்கள் என அவர் எதிர்பார்த்திருந்துள்ளார். பொலிஸார் ஒருவர் அவரிடம் வந்து 28 ஆம் திகதி எங்கிருந்தாய் என்று மட்டும் கேட்டுவிட்டுச் சென்று விட்டார். அவர் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் விடுவிக்கப்படவில்லை.

ஏற்கனவே சிறையிலிருந்து விடுதலையாகி 9 ஆவது நாளன்று அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். தன்னை எதற்காகக் கைது செய்யதனர் என்பது எதுவும் தனக்குத் தெரியவில்லை என்றார் அவர்.

இரண்டு முறை தனது பிள்ளையின் பிறந்தநாளைக் கொண்டாட முடியாமல் போனதாகவும், கைதான தினம் பிள்ளையின் மூன்றாவது பிறந்த நாள் கொண்டாட இருந்ததாகவும், இதனால் விரக்தியடைந்து தான் எடுத்து வைத்திருந்த சவர அலகினால் தனது கழுத்து, கை, தோள் பகுதிகளில் தாறுமாறாக வெட்டிக் காயப்படுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து அவரைப் பொலிஸார் பிற்பகல் 2 மணியளவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் ஜே.எ[illegible] மகாதேவா கடந்த முதலாம் திகதி வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு அது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பொலிஸார் தெரிவிக்கையில்:

அவர் வெவ்வேறு குற்றங்கள் செய்தமை நிரூபிக்கப்பட்டமையால் ஒரு வழக்குக்கு 21 மாதங்களும் மற்றைய வழக்குக்கு 25 மாதங்களும் தண்டனை விதிக்கப்பட்டதோடு அதனை ஏக காலத்தில் அனுபவிக்கலாம் என்றும் - தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. மல்லாகம் பகுதியில் இடம்பெற்ற களவு சம்பந்தமாக விசாரிப்பதற்காக அவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். -என்று கூறினர். (த-4)

## மாதாந்த பொது அறிவு தொகுப்பு வெளிவருகின்றது

அரச பதவி உயர்வு பரீட்சைகள், புதிய வேலைவாய்ப்புக்கான போட்டிப் பரீட்சைகள் போன்றவற்றுக்கு அவசியமான பொது அறிவு விடயங்கள், உலக பொருளாதார - அறிவியல், தொழில்நுட்ப நிகழ்வுகளின் ஒவ்வொரு மாத தொகுப்புகள் மாதாந்தம் ஒழுங்குமுறையாக தொகுத்து வழங்கும் ஓர் ஏற்பாட்டை ஒளி அரசி சஞ்சிகை மேற்கொண்டுள்ளது. அந்தவகையில், கடந்த ஓகஸ்ட், செப்டெம்பர் மாத தொகுப்பானது நவம்பர் மாத ஒளி அரசியில் இரண்டு பாகங்களில் வெளிவந்துள்ளது என அந்த சஞ்சிகையின் ஆசிரியர்பீடம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. இலங்கையில் வெளிவரும் மாதாந்த சஞ்சிகைகளில் அரசியல், பாலியல் கலப்பற்றவாறும், குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பார்த்து அறியவேண்டிய பல நல்ல தகவல்களைத் தாங்கியும் நல்லதொரு குடும்பம் என்ற இலக்கில் வெளிவரும் ஒரு சிறந்த சஞ்சிகை என்று மேலும் அதில் தெரிவித்துள்ளது.

இந்தச் சஞ்சிகையை சகல பத்திரிகை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இதுதொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் - இந்த சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 0215677222/0776569617 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகப் பிரிவு,
ஒளிஅரசி

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
af ONLY OFFICIAL CENTRE FOR FRENCH IN NORTHERN PROVINCE SINCE 1976
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
- கற்பதற்கு FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136+ நாடுகளில் 1040+ கிளைகள்.
- ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக் கழக பிரெஞ் & ஆங்கில ஆசிரியர்கள் (பிரெஞ் நாட்டவர் உட்பட) சரியான உச்சரிப்பு
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். உடன் பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



பிரத்தியேக / குழு வகுப்புக்கள்
கணக்கீடு / வணிகக்கல்வி
A/L 2015, A/L 2016 & Day Batch, AAT, Banking Classes (#/17204) (10)
Mobile: 0755287808, 075 077 5660

சிவப்பு மணல் விற்பனைக்குண்டு
பூமரங்கள் நாட்டுவதற்கும், அத்திவாரங்கள் நிரப்புவதற்கும், பள்ள நிலங்கள் சீர் செய்வதற்கும் உகந்த சிவப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:
T.P: 077 240 5258 (A/17288) (10)

குறுகிய நேரத்திலும் குறைந்த செலவிலும் நிர்மாண வேலைகளை செய்து கொள்ள...
Smart Kings (Pvt) Ltd.
ஸ்மார்ட் கிங்ஸ் (பிறைவேற்) லிமிட



(53691)(7.6.3)
கட்டடங்கள் கட்டுவதற்கு அத்திபாரம் தோண்டுதல், காணி துப்புரவாக்குதல், கட்டடம் உடைத்தல், கிணறு, மலசல குழி, குளங்கள் தோண்டுதல், அண்டக் கிறவுண்ட் பிறேக்கர் மூலமாகவும் அனைத்து விதமான வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
மணல், கல், ABC கிறவல் மணல் என்பனவும் வழங்கப்படும். JCB, Excavator, Roller, Wacker, Hilti, Concrete Mixer என்பனவும் மணித்தியால அடிப்படையிலும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
Hotline - 077 375 4040
Head Office: 684A, Colombo Road, Kurana/Negombo
148, Station Road, Jaffna. (Railway Station இற்கு முன்பாக)
Tel : 021 730 6099 Fax : 021 454 6699
Email : kuhan79@live.com

விசேட கருத்தரங்கு
இம்மாதம் நடைபெறவுள்ள சுங்கத்திணைக்களத்தின்
சுங்க பரிசோதகர், சுங்க உதவி பரிசோதகர்
பரீட்சைகளுக்கும்
தொழில்நுட்ப கல்லூரி போதனாசிரியர்
தெரிவு பரீட்சைக்கும்
வியாழன் (6/11) மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 - 3.00 மணிவரை நடைபெறவுள்ளன.
T.P: 075 416 4564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

பராமரிப்பாளர் (பெண்) தேவை
வயோதிபத் தாய் ஒருவரை நன்கு பராமரிக்கக் கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. இரவு பகல் நேரம் தங்கி நிற்பவரும் விரும்பத் தக்கது.
சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம்.
(53790) (45,6)
தொடர்பு: 077 845 2932

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

05 NOV 2014

புதன் பொய்கை

உதயன்

05 நவம்பர் 2014 புதன்கிழமை

இன்பமும் துன்பமும், எவனிடம் ஏற்கனவே அபரிமிதமாக இருக்கின்றனவோ அவனையே நாடிச் செல்லுகின்றன

- ராச் போகால்டு

மூத்த தமிழ் ஊடகவியலாளர் என். வித்தியாதரன் எழுதிய 'என் எழுத்தாயுதம்' என்ற நூல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09.11.2014) அன்று கொழும்பில் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. அந்நூலில் இடம்பெறும் ஒரு சுவையான பகுதி இங்கு பிரசுரமாகின்றது. (ஆ–ர்)

# பத்மநாபாவின் கொலைத் தகவல் குடாநாட்டுக்கு வந்த கதை

இந்தியப் படைகளோடு 1990 முற்பகுதியில் இலங்கையைவிட்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையும் உறுப்பினர்களும் இடம்பெயர்ந்தனர் என்றும், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் ஒரிஸ்ஸாவில் தஞ்சம் புகுந்தனர் என்றும் குறிப்பிட்டேன் அல்லவா. அந்தச் சமயத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் முக்கிய அலுவலகம் சென்னை கோடம்பாக்கத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

அதேவேளை, ஜூன் இரண்டாம் வாரத்தில், 'ஈழப்போர் -2' வெடித்த கால கட்டத்தில் யாழ்ப் பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசி இணைப்பும் மீண்டும் துண்டிக்கப்பட்டது. மின்சார வசதியும் இல்லாமல் போயிற்று. யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களான எங்களுக்கு இருந்த பிரதான தொடர்புச் சாதனம் வானொலி மட்டும்தான். வானொலிப் பெட்டிகளுக்குத் தேவையான பற்றரிகளைப் பெற்றுக் கொள்வதுகூட முயல்கொம்பைத் தேடும் வேலைதான்...!

அக்காலத்தில் பலாலி படைத்தளம் போன்ற பிரதான முகாம்களுக்குள் படையினர் முடக்கப்பட்டிருக்க - யாழ். கோட்டை முகாமும் புலிகளின் முழு முற்றுகைக்குள் வீழ்ந்திருக்க - குடாநாட்டின் எஞ்சிய பிரதான பகுதிகள் யாவும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதான பகுதிகளில் - தரிசு நிலங்கள் உள்ள பிரதேசங்களில் - அரசுப் படைகள் இரவோடு இரவாக ஹெலிக்கொப்டரில் வந்திறங்கி, அதிரடித் தாக்குதல்களை நடத்தலாம் என்ற அச்சம் - பீதி - குடாநாட்டில் நிலவியது. அதுவும் யாழ். கோட்டை முகாமில் சிக்கியுள்ள படையினர் மற்றும் பொலிஸாரை மீட்பதற்கான அதிரடி முயற்சி ஏதும் அதை அண்டிய பகுதிகளில் உள்ள தரைப் பிரதேசத்தைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படலாம் என்ற சந்தேகம் நீடித்தது. அதனால் குடாநாட்டில் பரவலாகவும் - குறிப்பாக யாழ். நகரத்தை அண்டிய பிரதேசங்களிலும் - உள்ள பெரும் தரைப் பகுதிகள் - விசேடமாக ஹெலிக்கொப்டர் தரையிறங்கக்கூடிய வாய்ப்புள்ள மைதானப் பகுதிகள் - குறித்து புலிகள் உள்ளூர்வாசிகளை எச்சரிக்கை செய்திருந்தனர். அத்தகைய இடங்களில் திடீரென இரவு வேளைகளில் படையினர் தரையிறக்கப்பட்டால் அது குறித்து, நேரத்துடனேயே உள்ளூர் புலித் தலைவர்களுக்குத் தகவல் தரக்கூடிய வகையில் இத்தகைய பிரதேசங்களில் நள்ளிரவுக் காவல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. உள்ளூரில் உள்ள மக்களைத் திரட்டி அந்தந்தப் பகுதிகளில் உள்ள மைதானங்கள், தரைகள் மற்றும் பரந்த வெளிப் பிரதேசங்களை இரவிரவாக நோட்டமிட்டுக் கண்காணிக்கும் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் நான் தங்கியிருந்த யாழ். இந்துக் கல்லூரிப் பகுதியில் உள்ள கல்லூரி மைதானமும் இரவுக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. கல்லூரி பழைய மாணவர்கள் அணியிடமும், உள்ளூர்வாசிகளிடமும் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இரவில் மாறி, மாறி விழித்திருந்து, கதைகள் பேசி, பாட்டுக் கேட்டு, சதுரங்கம், சீட்டு போன்ற சிறுசிறு விளையாட்டுக்களுடன் ஆரவாரமாகத் தொடர்ந்து காலம் கழிக்கும் ஒரு குழு உருவானது. தினசரி இரவு 7 அல்லது 8 மணிக்குக் கூடும் அக்குழு விடிகாலை 5 மணிவரை மைதானச் சுற்றாடலில் ஆரவாரமாகச் செயற்படும். அக்குழுவுக்கு அயல் வீடுகளிலிருந்து அல்லது பாடசாலை சமையலறையிலிருந்து அவ்வப்போது தேநீர், சிற்றுண்டிகளும் வழங்கப்படுவது வழமை. அந்தக் குழுவில் இருந்த ஒருவர் - நான் பெயர் குறிப்பிட விரும்பவில்லை - நள்ளிரவு பன்னிரண்டு, ஒரு மணி அளவில் தமது ஸ்கூட்டரில் அனைத்துப் பத்திரிகை அலுவலங்களுக்கும் ஒரு சுற்று வருவார். எல்லாப் பத்திரிகை அலுவலகங்களுடனும் அவருக்குத் தொடர்பு இருந்தது. அப்போதுதான் வெளியாகும் அடுத்தநாள் பத்திரிகைகளுள் ஒன்றைச் சுடச்சுட வாங்கிக் கொண்டு - அல்லது சுட்டுக் கொண்டு - அவர் மைதானக் காவல் அணியிடம் வருவார். அதிகாலை 1 மணி முதல் அடுத்த ஓரிரு மணித்தியாலங்களுக்கு அந்தப் பத்திரிகைகளில் வெளியான செய்தியை ஒட்டிய அரசியல் அலசலில் அந்தக் கண்காணிப்புக் குழு மூழ்கிப்போகும். அதிகாலை ஒரு மணிக்குப் பின்னர் எனது இரவுப் பணி முடிந்து வீடு திரும்பும் நானும் இடைவழியில் இந்தக் குழுவின் அரட்டை அரங்கத்தில் - அரசியல் அலசலில் - இறங்கிக் கொண்டு ஓரிரு மணித்தியாலங்கள் செலவழித்த பின்னரே வீடு திரும்புவேன். அந்தக் குழுவில் இருந்தவர்கள் எனக்கு நெருங்கியவர்கள். எனது நண்பர்கள். அவர்களுடன் மனம் விட்டுப் பேசி, கதைத்துச் சிரிப்பது மட்டுமல்லாமல் அங்கு போனால் ஏனைய பத்திரிகைகளையும் நேரத்துடனேயே ஒரு மேலோட்டம் பார்த்துவிடலாம் என்பதும் எனது நோக்கமாக இருந்தது.

இந்தச் சூழலில்தான் அந்தச் சம்பவம் நடந்தது. அந்தக் காலகட்டத்தில் இரவில் அகில இந்திய வானொலியின் ஆங்கிலச் செய்தி இரவு 9 மணி, 11 மணி, நள்ளிரவு 12 மணி, விடிகாலை 1.30 மணிக்கு ஒலிபரப்பாவது வழமை. இரவு 9 மணிக்கு இந்திய வானொலியின் ஆங்கிலச் செய்தி முடிவடையும் அதேசமயத்தில் - இரவு 9.15 மணிக்கு - பி.பி.ஸியின் தமிழோசை ஒலிபரப்பாகத் தொடங்கும்.

பத்திரிகை அலுவலகத்தில் இரவு 9 மணிக்கு இந்திய வானொலியின் ஆங்கிலச் செய்தியைக் கேட்பவர் அச்செய்தி அறிக்கையின் முடிவில் மீண்டும் தலைப்புச் செய்தி வாசிக்கத் தொடங்கும்போது தமிழோசை ஒலிபரப்பாகும் அலைவரிசையை நோக்கி வானொலியைத் திருக ஆரம்பித்துவிடுவார். இதுதான் வழமை.

எமது உதயன் அலுவலகத்தில் இந்த வானொலிச் செய்தி மூலம் உலகத் தகவல்களைத் திரட்டி தரும் ஓர் அசகாய சூரர் இருந்தார். மூத்த செய்தியாளரான சி.குருநாதன்தான் அவர். எனது சொந்த இடமான திருகோணமலையைச் சேர்ந்தவர். எனது வயதும் அவரது ஊடகத்துறை அனுபவமும் ஏறத்தாழ சமம் என்று கூறலாம்.

சிறுவயதில் என்னைத் தூக்கித் திரிந்து, வழிப்படுத்திய நல்லிதயங்களுள் அவரும் ஒருவர். எமது அயல் வீட்டுக்காரர். ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிச் சிறப்போடு செய்திகளைச் சுடச் சுடத் தருவதற்கு அவருக்கு நிகர் யாரும் இல்லை என்பேன். தினபதி, சிந்தாமணி, த சன், வீக்கெண்ட் ஆகிய பத்திரிகைகளின் திருகோணமலைச் செய்தியாளராகக் கலக்கிக்கொண்டிருந்த அவரை 'உதயன்' தொடங்கிய சமயத்தில் குடும்பத்தோடு யாழ்ப்பாணத்துக்கு இழுத்துவந்து, உதயனுடன் கட்டிப்போடும் உரிமை எனக்கு இருந்தது. அவர் வெறும் குருநாதன் மட்டுமல்ல, செய்தித் துறையில் எங்களைப் போன்ற அடுத்த சந்ததியினருக்கு அவர் உண்மையான குருநாதராகவும் விளங்கினார். ஒரு பிரதேச செய்தியாளர் தனது திறமை மூலம் அந்தப் பிரதேசத்தையே கட்டிப் போட்டு ஆளலாம் என்பதை திருகோணமலையில் நிரூபித்தவர் அவர். ஒவ்வொரு ஊடகவியலாளனும் அவரிடம் படிக்க வேண்டியவை நிறையவே உண்டு. பிறிதொரு சந்தர்ப்பத்தில் வாய்ப்புக் கிடைக்கும்போது அவற்றை விவரிப்பேன்.

> குடாநாட்டின் ஏனைய மூன்று பத்திரிகைகளும் அந்தச் செய்தியைக் கோட்டை விட்டிருந்தன. அதுவும் அந்தத் தாக்குதலை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடான 'ஈழநாதம்' பத்திரிகைக்குக்கூட அந்தச் செய்தி தெரிந்திருக்கவில்லை.

குருநாதர் சில பழமையான பழக்க வழக்கங்களை விடாது தொடர்ந்து கொண்டிருந்தார். தாம் சார்ந்த நிறுவனத்தின் - அல்லது தமக்கு படி அளக்கும் நிறுவனத்தின் - தலைமையை கேள்விக்கு இடமின்றி மதித்து தலையில் வைத்துக் கூத்தாடுவதில் தொடங்கி, பேனா மைப் போத்தலைத் திறந்து வைத்துக் கொண்டு பேனாவினால் மையைத் தொட்டுத் தொட்டு எழுதும் ஐம்பதாம் ஆண்டு காலப் பழக்க வழக்கங்கள் வரை அவரிடம் சில விநோதப் பண்பியல்புகள் இருந்தன.

இந்தப் பண்பியல்புதான் எங்களுக்கு ஒரு 'எக்ஸ்குளுசிவ்' செய்தியைப் பரபரப்பாக யாழ். குடாநாட்டில் வெளியிடும் வாய்ப்பைப் பெற்றுத்தந்தது. ஒரு தடவை பேனாவை மையில் தொட்டு எழுதத் தொடங்கினால் அந்த மை முடியும் வரை விடாமல் தொடர்ந்து எழுதுவார் அவர்.

1990 ஜூன் 19ஆம் திகதி. இரவு வேளை 9 மணிக்கு ஆரம்பமான இந்திய வானொலிச் செய்தியை டேப்பில் பதிவுசெய்யவிட்டபடி கேட்டுக்கொண்டே, வேறு ஒரு விடயம் குறித்து எழுதிக் கொண்டிருந்தார் குருநாதன். ஆசிரிய பீட முன்புற அறையில் பிற செய்திகளை 'எடிட்' செய்து, எழுத்துக்களுடன் மல்லுக் கட்டிக் கொண்டிருந்தேன் நான்.

குருநாதன் ஒரு தடவை பேனாவை மையில் தொட்டுவிட்டு எழுத ஆரம்பிப்பதற்கும் இந்திய வானொலியின் ஆங்கிலச் செய்தி அறிக்கை முடிவடைவதற்கும் சரியாக இருந்தது. வழமையாகச் செய்தி அறிக்கையின் முடிவில் மீண்டும் தலைப்புச் செய்திகள் என்று அறிவிப்பார்கள். ஆனால் அதுவரை காத்திருக்காது பி.பி.ஸி. தமிழோசைக்கு நிலையத்தை மாற்றுவது நமது வழமை. ஆனால் அன்று தாம் தொட்டுவிட்ட மையில் எழுதக் கூடியவற்றை எழுதி முடிப்பதில் குருநாதன் முனைப்பாக - குறியாக - இருந்தமையால் நிலையத்தை மாற்றுவதற்காக வானொலியைத் திருகுவதை அவர் தாமதித்தார். அவசரமாக பி.பி.ஸி. நிலையத்தைப் பிடித்தாலும்கூட, முதல் ஓரிரு நிமிடங்களுக்கு தவில், நாதஸ்வர இசையும் இது பி.பி.ஸியிலிருந்து முழங்கும் தமிழோசை, இன்று இன்ன வருடம் ஆனித் திங்கள் ஐந்தாம் நாள் இன்ன கிழமை என்ற முன்னறிவிப்புகள் தாம் வரும். ஆகையினால் இரண்டு நிமிடங்கள் தாமதித்து நிலையத்தை மாற்றினால் என்ன என்ற அசிரத்தையுடன் தமது எழுத்தில் தொடர்ந்து மூழ்கிப் போனார் குருநாதன்.

(8 பக்கம் பார்க்க....)







# பூநகரியின் தொன்மைச் சின்னங்கள் பாதுகாக்கப்படுதல் அவசியமாகும்

## பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கருத்து

பூநகரியின் தொன்மைச் சின்னங்களும் வரலாறுகளும் பாதுகாக்கப்படவேண்டும் என்று பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன் தெரிவித்தார்.

பூநகரி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற பிரதேச செயலகத்தின் கலாசார விழாவில் தலைமை உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூநகரிப் பிரதேச செயலகம் ஆண்டுதோறும் கலாசார விழாவை முன்னெடுத்து வருகின்றது. மீள்குடியேற்றத்துக்குப் பின்னர் பல கலாசார விழாக்களையும் நூல் வெளியீடு களையும் நடத்திய பெருமை பிரதேச செயலகத்துக்கு உண்டு. அவ்வகையில் இவ்வாண்டுக்கான விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசம் தனித்துவமான வரலாற்றுப் பண்புகளைக் கொண்டது. சிறப்புக்குரிய பூநகரிக் கோட்டை மற்றும் இன்று வெளியீடு செய்யப்படவுள்ள 'பூந்துணர்' நூலில் அட்டைப்படமாகவுள்ள பெருக்கமரம், மற்றும் அல்லிராணிக்கோட்டை, மண்ணித்தலை சிவன்கோவில் என்பன பூநகரியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும். இந்தக் கலாசாரப் பேரவையால் வருடந்தோறும் விழாக்களை மட்டும் நடத்தி வராமல் கலாசாரம், இலக்கியம் போன்ற முயற்சிகளையும் முன்னெடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றோம். இவ்வருட இறுதிக்குள் சிறுவர்களுக்கான குறும்படம் ஒன்றை வெளியிடவுள்ளோம்.

எமது பிரதேச செயலகத்தில் வரலாற்றுத்துறை பட்டதாரியான சூரியகுமாரன், வரலாற்றுத் தொன்மை தொடர்பான நூலொன்றை எழுதியுள்ளார். விரைவில் அந்த நூல் வெளிவரவுள்ளது. பூநகரி கவிப்பிரியா என்பவர் இரண்டு நூல்களை உருவாக்கியுள்ளார். அவர்கள் போன்று வேறு பலரும் நூலை வெளியிடவுள்ளனர். பூநகரியின் வரலாற்றுத் தொன்மை தொடர்பான விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அழிவடைந்து செல்லும் தொன்மைகளையும் வரலாறுகளையும் பாதுகாக்க வேண்டும். பூநகரி வாடியடியிலுள்ள கோட்டையும் பாதுகாக்கப்படவேண்டும் - என்றார்.

கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட பூந்துணர் நூலை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் வெளியிட நிகழ்வின் முதன்மை விருந்தினரான நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பெற்றுக் கொண்டார். நூலுக்கான மதிப்பீட்டு உரையை கிளிநொச்சி மாவட்ட அரச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்தினார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி வேல்நம்பி, வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கலாசார விழாவில் பூநகரிப் பிரதேசத்தின் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (வ-18)



### "ஏ" பக்கத் தொடர்ச்சி...

அந்தத் தாமதம்தான் அதிர்ஷ்டமாக முடிந்தது. அன்று இந்திய வானொலியின் இரவு 9 மணிச் செய்தியின் முடிவில் மீண்டும் தலைப்புச் செய்திகள் என்ற பீடிகையோடு தலைப்புச் செய்திகளைத் திரும்பவும் வாசித்த செய்தி வாசிப்பாளர் முடிவில் News just received என்ற பீடிகையோடு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அலுவலகம் மீது சற்று முன்னர் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா, அக்கட்சியைச் சேர்ந்த மாகாண சபை நிதியமைச்சர் கே.கிருபாகரன், அக்கட்சியைச் சேர்ந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கே.யோகசங்கரி உட்பட சிலர் உயிரிழந்தனர் என இப்போது கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன - என்ற அறிவிப்போடு அந்தச் செய்தி அறிக்கையை முடித்தார் அதை வாசித்தவர்.

குருநாதன் விரைந்து வந்து எங்கள் எல்லோரையும் 'அலேர்ட்' பண்ணினார். நாங்கள் அந்தச் செய்தியைத் திரும்பத் திரும்ப டேப்பில் போட்டு அதன் வாசகங்களை உறுதிப் படுத்திக்கொண்டோம். ஆனால் பி.பி.ஸியோ அல்லது அதற்குப் பின்னர் நள்ளிரவு 11 மணி மற்றும் 12 மணிக்கு ஒலிபரப்பான இந்திய வானொலியின் ஆங்கில மற்றும் பிற செய்திகளோ அந்தச் சம்பவம் குறித்து மூச்சே விடவில்லை. செய்தியை மேலும் உறுதிப் படுத்த தொலைபேசியோ அல்லது வேறு வசதிகளோ இல்லை. எப்படியும் இந்தச் செய்தியைச் சரியாக உறுதிப்படுத்தி, நாளைய பத்திரிகையில் வெளுத்துக் கட்டுவது என்று தீர்மானித்துக் கொண்டேன். அதே சமயம் இந்திய வானொலி மீண்டும் தலைப்புச் செய்திகள் என்ற தலைப்பில் வெளியிட்ட தகவல்களை ஏனைய பத்திரிகைகள் நிச்சயம் செவிமடுத்திருக்கமாட்டா என்று எனக்குள் நானே கணக்குப் போட்டுக் கொண்டேன். ஆனால் நள்ளிரவு ஒரு மணியாகியும் அந்தச் செய்தியை மறுதடவை உறுதிப்படுத்தும் வாய்ப்பு ஏதும் கிடைக்கவில்லை. எனினும் பதற்றப்படாமல் பொறுமையாகச் செயற்பட்டேன். அப்போதுதான் மைதானக் காவலுக்குச் சென்ற எனது நண்பர் எமது அலுவலகத்துக்கும் வந்தார். அவர் கைகளில் மற்றைய பத்திரிகைகள் இருந்தன. வாங்கித் தட்டிப் பார்த்தேன். கோடம்பாக்கம் சம்பவம் குறித்து எதுவும் இல்லை. எனக்கு ஒரு புறம் சந்தோஷமாக இருந்தது. மறுபுறத்தில் முகத்தை வேதனையில் வைத்திருப்பவன் போல் காட்டிக்கொண்டு, அச்சியந்திரம் பழுதடைந்துவிட்டதால் அன்று அதிகாலை பத்திரிகை வெளியாவது தாமதமாகும் என்று ஒரு கதையை அவிழ்த்துவிட்டு அவருக்கு விடைகொடுத்தேன்.

அந்தச் செய்தி பற்றிய தகவல் வெளியே கசியாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதில் குறியாக இருந்ததால் அப்படிக் கூறி அவரை அனுப்பி வைத்தேன். கடைசியாக அதிகாலை 1.30 மணிக்குத்தான் ஆங்கில பி.பி.ஸி. செய்தியில் மேலதிக விவரங்கள் வந்தன. நானும் குருநாதனும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டோம். கோடம்பாக்கச் சம்பவத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் 13 உயர் மட்ட உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட விவரங்களைத் தலைப்பாகக் கொண்டு எமது முதலாம் பக்கம் தயாராகி அச்சுக்குப் போனபோது அதிகாலை 4 மணியாகிவிட்டது. குடாநாட்டின் ஏனைய மூன்று பத்திரிகைகளும் அந்தச் செய்தியைக் கோட்டை விட்டிருந்தன. அதுவும் அந்தத் தாக்குதலை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடான 'ஈழநாதம்' பத்திரிகைக்குக்கூட அந்தச் செய்தி தெரிந்திருக்கவில்லை.

எமது அலுவலகத்தில் நண்பகல் 11 மணி வரை அன்றைய பத்திரிகைகள் அச்சாகின. அன்றைய நிலையில் 24 ஆயிரத்துக்கும் அதிகமான பிரதிகள் அச்சிடப்பட்டன. பத்திரிகை அச்சாக, அச்சாக அதைச் சுடச் சுட வாங்கிச் செல்வதற்கு முகவர்களும் வாசகர்களும் அலுவலக வாசலில் முண்டியடித்தனர்.

அன்றைய யுத்த சூழ்நிலையில் நான்கு பக்கங்கள் மட்டுமே கொண்ட ஒரு பத்திரிகை இதழ் அத்தனையாயிரம் - ஒரு பிரதிகூடத் திரும்பாமல் - முற்றாக விற்றுத் தீர்த்தமை ஒரு பெரிய சாதனை என்றே சொல்வேன். அதிர்ஷ்டம் எங்கள் பக்கம் இருந்ததால் அதனைச் சாதிக்க முடிந்தது.

## புதன்பொய்கை

# குண்டாசுரன்

சொர்ணபுரியை ஆண்ட மன்னன் வர்மனின் அரச சபையில் நான்கு பண்டிதர்கள் இருந்தனர். அந்தப் பண்டிதர்களும், மன்னனிடம் ஏதாவது காரணம் காட்டி பணம் பறித்துக் கொண்டே இருப்பர்.

ஒரு முறை அவர்கள் மன்னனிடம் "அரசே! நேற்று உங்கள் ஜாதகத்தைப் பார்த்தோம். இப்போது துஷ்ட கிரகங்கள் உங்களை ஆட்டிப் படைக்க விரும்புவதாகத் தெரிந்து கொண்டோம். அவை முதலில் உங்கள் இரு கைகளையும் செயலற்றுப் போகும்படி செய்யுமாம்" என்றனர்.

அதைக் கேட்ட மன்னன் பயந்து போய், "இதற்குப் பரிகாரமாக நீங்கள் ஒரு தங்கக் கோடரி செய்து அதனை வெள்ளிக்கிழமையன்று பூஜித்து ஊர்வலமாய் மேளதாளத்துடன் எடுத்துச் சென்று ஒரு மரத்தின் கிளைகளை வெட்ட வேண்டும். பிறகு அக்கோடரியை எங்களுக்குத் தானம் செய்து விட்டால் துஷ்ட கிரகங்களால் உங்களை எதுவும்



செய்ய முடியாது" என்றனர்.

மன்னனும் அவ்வாறே சகல ஏற்பாடுகளையும் செய்தான். ஒரு வெள்ளிக்கிழமையன்று அவன் ஒரு தங்கக் கோடரியை வைத்து பண்டிதர்கள் மந்திரங்களை ஓத பூஜை செய்தான். பிறகு மேளதாளத்துடன் ஊர்வலமாக அதனை எடுத்துக் கொண்டு நகருக்கு வெளியே ஏரிக்கரை மீது உள்ள ஓர் ஆலமரத்தடிக்குச் சென்றான்.

மன்னனுக்கு மரம் ஏறி பழக்கம் இல்லை. அதனால் மெதுவாக மரத்தின் மீது பலரது உதவியால் ஏறி தனது கையிலிருந்த கோடரியால் ஒரு வளைந்த கிளையை வெட்ட ஓங்கினான். ஆனால், கோடரி அவனது பிடியிலிருந்து விடுபட்டு ஏரிக்குள் போய் விழுந்தது. ஏரியில் கோடரி விழுந்த இடத்தில் ஏராளமாய் தாமரைகள் முளைத்திருந்தன. தங்கக் கோடரியை எடுத்து வர ஒரு சில வீரர்கள் ஏரிக்குள் குதிக்கத் தயாராயினர்.

அப்போது தாமரை இலைகளிடையிலிருந்து ஒரு கரிய உருவம் நீர்மட்டத்துக்கு மேல் வந்து தனது கையிலிருந்த இரும்புக் கோடரியைக் கரை மீது விட்டெறிந்தது. அப்போது அவ்வுருவத்தைக் கண்டு எல்லோரும் நடுங்கினர். சேனாதிபதி மட்டும் கொஞ்சம் துணிவு கொண்டு யார் நீ? என்று கேட்டான்.

அந்த உருவமும் நானா? 'நான் வந்து, குண்ட எனக் கூறியவாறே சட்டென நீரினுள் சென்று விட்டது.

மன்னன் பண்டிதர்களிடம் இன்னமும் மூன்று நாள்களுள் இந்தக் குண்டன் யாரெனக் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும். இவனைச் சும்மா விட்டு விட்டால் தங்கக் கோடரியை இரும்புக் கோடரியாக மாற்றியது போல, எனது பொக்கிஷத்திலுள்ள தங்கத்தை எல்லாம் இரும்பாக்கி விடுவான் என்றான்.

பண்டிதர்களும் கூடிப் பேசி இரண்டு நாள்களானதும் மன்னனைக் கண்டு அரசே அந்தக் கரிய உருவம் குண்டாசுரன். அவன் திரேதா யுகத்திலிருந்து வாழ்ந்து வருபவன். அவன் மாய மந்திரங்கள் கற்றவன் என்று புராணங்கள் கூறுகின்றன. மிகவும் பயங்கரச் செயல்களைக் கூசாமல் செய்பவன் என்றனர்.

"அப்படியா! அந்த குண்டாசுரனைக் கொன்று அவனது உடலைக் கொண்டு வருபவனுக்கு எனது நாட்டில் பாதியைக் கொடுக்கிறேன்" என்றான்.

மன்னன் இவ்வாறு கூறிய மறுநாள் அரண்மனைத் தலைமைச் சமையற்காரன் அனந்தராமன், மன்னன் உணவு உண்டு விட்டு இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது அவன் முன்போய் நின்று 'அரசே நீங்கள் மன்னிப்பதாக இருந்தால் நான் ஒரு விடயத்தைக் கூறுகிறேன்' என்றான்.

மன்னனும் 'சரி, விடயத்தைச் சொல்' என்றான். நீங்கள் ஏரியில் பார்த்த கரிய உருவம் பண்டிதர்கள் கூறியது போல குண்டாசுரனும் இல்லை. அண்டாசுரனும் இல்லை. அவன் எமது சமையலறையில் வேலை செய்யும் குண்டப்பன். நான் தான் அவனை வெள்ளிக்கிழமையன்று மரங்களிலுள்ள உலர்ந்த மரக் கிளைகளை வெட்டி விறகு கொண்டு வரும்படி ஏரிக்கரைக்கு அனுப்பினேன்.

அவன் எப்போதும் கருப்பு வேட்டி, கருப்புச் சட்டை, கருப்பு முண்டாசு கட்டிக்கொண்டிருப்பவன். அவன் மரக்கிளைகளை வெட்டப் போன போது நீங்கள் மேளதாளத்துடன் கோடரியோடு வருவதைக் கண்டு பயந்து ஏரிக்குள் குதித்து மறைந்து கொண்டான். உங்கள் கோடரி தவறிப் போய் ஏரிக்குள் விழவே, வீரர்கள் தன்னைத் தான் தாக்குகிறார்களோ என நினைத்துத் தன் முண்டாசுத் துணியால் முகத்தையும் மூடிக் கொண்டு நீர் மட்டத்துக்குமேல் வந்து தனது இரும்புக் கோடரியை விட்டெறிந்தான். அதற்குப் பின் அவனுக்குத் தங்களது கோடரி விழுந்தது தெரிந்தது. அவன் ஏரிக்குள் மூழ்கித் தேடி அதை எடுத்து வந்து விட்டான். என்று கூறி குண்டப்பனைக் கூப்பிட்டான்.

குண்டப்பனும் தங்கக் கோடரியுடன் வந்து மன்னன் முன் நின்று அரசே நான் தான் அந்தக் கரிய உருவம். பயத்தில சரியாகப் பேசமுடியாமல் என் பெயரைக் கூட குண்ட என்று பாதியோடு நிறுத்தினேன் என்று கூறித் தங்கக் கோடரியை அரசனிடம் கொடுத்தான்.

சமையற்கார அனந்தராமனும் "எமது அரச சபைப் பண்டிதர்கள் எப்படியாவது இந்தத் தங்கக் கோடரியைப் பெறத் திட்டம் போட்டனர். அது பலிக்கவில்லை. கரிய உருவம் பற்றிக் கேட்டால் ஏதோ புராணங்களையே அலசிப் பார்த்ததாகக் கூறி குண்டாசுரன் என்ற பெயரைச் சொல்லி உங்களை ஏமாற்றப் பார்த்தனர்"- என்றான்

மன்னனுக்கும் அந்த நான்கு பண்டிதர்களும் ஏதோ சாஸ்திரம் பரிகாரம் என்றெல்லாம் சொல்லிப் பணம் பறிக்கின்றனர் என்பது தெரிந்து விட்டது. உடனே நான்கு பண்டிதர்களையும் வரவழைத்து இவன் தான் நீங்கள் சொன்ன குண்டாசுரன். நீங்கள் ஆசைப்பட்ட தங்கக் கோடரி இதோ என்னை ஏமாற்றிய உங்களுக்கு பத்து வருடம் சிறை வாசம் எனக் கூறி அவர்களை சிறையில் அடைத்தான்.

குண்டப்பனை மன்னன் பாராட்டி தனது கழுத்தில் அணிந்திருந்த நவரத்தின மாலையை எடுத்துப் பரிசாக அளித்தான். அவனும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான்.

## கத்தரித் தோட்டத்துச் சேவகன்

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! – நின்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறு யார்! உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறு யார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! – என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணில் உன்னைப் போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? – என்றும்
ஏவல் புரிபவன் வேறு யார்?

வட்டமான பெரும் பூசினிக் காய்போல
மஞ்சள் நிறஉறு மாலைப்பார்! – தலையில்
மஞ்சள் நிறஉறு மாலைப்பார்!
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்! – இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்! கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்! ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!



பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ – உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ?
வாட்ட மில்லாப் பயிர் மேய வந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண்டோடுமே – வெடி
வாலைக் கிளப்பிக் கொண்டோடுமே

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே – கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வருங் கள்வனுனைக் கண்டு
நடு நடுங்கி மனம் வாடுமே – ஏங்கி
நடுநடுங்கி மனம் வாடுமே

நவாலியூர் சோமசுந்தரப்புலவர்



இ.தர்மிலன், தரம்-9சி
யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி.



ஜெ.ஜெசுரன், தரம்-11
யா/ கனகரத்தினம் மத்திய ம.வி.

## பொது அறிவு

- சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?
  1956
- இலங்கையின் சொத்துரிமை தொடர்பில் கொண்டுவரப்பட்ட சட்டம் எது?
  தேசவழமை
- பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுவது எது?
  ஒட்டகம்
- பாம்பைச் செல்லப் பிராணியாக வளர்க்கும் நாடு எது?
  ஹொங்கொங்
- ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நாடு எது?
  ரஷ்யா
- எந்த நாட்டில் பெயின்ட் கண்டு பிடிக்கப்பட்டது?
  இங்கிலாந்து
- உலக சிறுவர் தினம் கொண்டாடப்படும் மாதமும் திகதியும் எவை?
  ஒக்ரோபர் 07
- பிரிட்டிஷ் பிரதமரின் பெயர் என்ன?
  டேவிட் கமரூன்
- சமுத்திரங்களில் பெரியது எது?
  பசுபிக் சமுத்திரம்
- உலகின் மிகப் பெரிய அஞ்சல்துறை கொண்ட நாடு எது?
  இந்தியா

# வடமாகாண பண்பாட்டு பெருவிழா (2014)





























# வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற பண்பாட்டு பெருவிழாவும் ஆய்வரங்கமும்

றம்பைக்குளத்திலிருந்து
■ தர்சன்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் கடந்த முதலாம், 2 ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் மாபெரும் பண்பாட்டுப் பெருவிழாவும், தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் 'இலங்கைத் தமிழ் கலை இலக்கியத் துறையில் நிலைமாற்றத்துக்கான நகர்வுகள்' என்ற தொனிப் பொருளிலான ஆய்வரங்கமும் இடம்பெற்றன. முதல்நாள் காலை 9 மணிக்கு ஆரம்பித்த ஆய்வரங்கம் பிற்பகல் 2மணிக்கு நிறைவடைந்தது. இந்நிகழ்வுக்கு மன்னார் மாவட்ட அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தலைமை வகித்தார்.

'நிலைமாற்றத்துக்கான நகர்வுகள்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கத்தில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வருகை விரிவுரையாளர் திருமதி விக்னமோகன் சுதர்சினி ஓவியத்துக்கும், கரவெட்டியைச் சேர்ந்த கேராதநாதன் குறும்படத்துக்கும், யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் விரிவுரையாளர் மார்க்கண்டு மனோகர் சிற்பத்துக்கும் (அழைத்திருந்த போதும் அவர் அரங்குக்கு சமுகம் தரவில்லை) ஓய்வுபெற்ற உதவிக் கல்வி பணிப்பாளர் கலைஞர் வேல் ஆனந்தன் நடனத்துக்கும், யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை தலைவர் சிறி தர்சனன் இசைக்கும், யாழ்.பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி இசைநாடகத்துக்குமான ஆய்வுகளை அரங்கில் சமர்ப்பித்தனர். அன்றைய ஆய்வரங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளாரால் ஒவ்வொரு ஆய்வாளருக்கும் 15 நிமிடங்கள் வழங்கப்பட்டன. ஆய்வாளர்கள் அந்த 15 நிமிடத்துக்குள்ளும் தங்களது ஆய்வுகளைச் சமர்ப்பிக்க பெரும் போராட்டத்தில் ஈடுபட்டும் அது முடியாமல் 15 நிமிடம் பின்னர் 20 அல்லது 25 நிமிடங்களாக்கப்பட்டன.

இந்த ஆய்வரங்குக்கு வவுனியா மாவட்ட பாடசாலைகளில் உயர் தரத்தில் கல்விகற்கும் மாணவர்களை அழைத்திருந்தபோதும் உயர்தர மாணவர்கள் மட்டுமல்லாது ஏனைய மாணவர்களும் வருகை தந்ததால் மண்டபத்தினுடைய இருக்கை வசதிகள் போதாமல் இருந்தன. இது மாணவர்கள் ஆய்வைக் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் பெரும் இடைஞ்சலாக இருந்தது. இசை, நடனத்துக்கான ஆய்வை மேற்கொள்ளும்போது இடையிடையே பாடல்களும் பாடிக்காட்டப்பட்டது அது மாணவர்களிடத் தில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. அங்கே கைதட்டல்களும் பலப்பட்டிருந்தன.

இரண்டாம் நாள் நிகழ்வுக்கு தலைவராக அகளங்கன் நா.தர்மராஜா அழைக்கப்பட்டிருந்தார். அவருடைய தலைமையில் இரண்டாம் நாளுக்கான ஆய்வுகள் இடம்பெற்றன. 'இலங்கைத் தமிழ் இலக்கியங்களில் நிலைமாற்றத்துக்கான நகர்வுகள்' என்ற தொனிப்பொருளில் கவிதைக்கான ஆய்வை கவிஞர் சோ. புத்மநாதன் வழங்கியிருந்தார். பல்வேறுபட்ட கவிதைகள், போர்க்காலத்தில் எழுந்த, போருக்குப் பின்னர் எழுந்த கவிதைகள், கவிதையியலாளர்களின் மனச்சஞ்சலங்களையும் தெட்டத் தெளிவாக அந்த ஆய்விலே அவர் விளக்கியிருந்தார். சிறுகதைக்கான ஆய்வை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை மூத்த விரிவுரையாளர் ராஜேஸ்கண்ணன் வழங்கியிருந்தார். அவரும் பல்வேறுபட்ட சிறுகதை ஆசிரியர்களின் எடுத்துக்காட்டல்களை முன் வைத்தார்.

போரின் முன்னரான காலப் பகுதியில் சிறுகதைகள் எப்படி ஆக்கப்பட்டிருந்தன என்றும் போரின் பின்னர் அவற்றின் வடிவம், பொருள் என்பன எப்படி மாற்றமடைந்து, அவையே நிலை மாற்றத்துக்கான உத்திகளாகக் கொள்ளப்பட்டன என்றும், இலக் கியத்தின் மரபு ரீதியான மாற்றம் நிலைமாற்றம் அல்ல என்றும், சிறுகதையின் மொழி குறித்து தனித்து ஆய்வுகள் மேற்கொள் ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

குறுநாவல் பற்றிய ஆய்வை மேற்கொண்ட ஆசிரியர் ரமேஸ், நாவல்களின் வகைகள், அவை எழுந்த காலப்பகுதி, பெண்ணியம் சார்ந்த கதைகளைக் கூறும் நாவல்கள், நாவலாசிரியர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகள், மன நிலை, கையாள வேண்டிய உத்திகள், போன்ற பல கருத்துக்களை வழங்கி, இக்காலத்தில் நிலைமாற்றத்தில் எழுந்த சில நாவல்களையும், அவற்றின் பாடுபொருள்களையும் சுட்டிக்காட்டி தனது ஆய்வை மேற்கொண்டிருந்தார். இலங்கைத் தமிழ் கலை இலக்கியத்துறையில் நிலை மாற்றத்துக்கான நகர்வுகளில் நாடகத்துக்கான ஆய்வை யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சிமைய இயக்குநரும் பிரபல நாடக இயக்குநருமான தே.தேவானந் வழங்கியிருந்தார். அவர் அரங்குக்குச் சமுகம் தராத போதும் அவரது ஆய்வுக்கட்டுரை அரங்கிலே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிழற்படத்துக்கான ஆய்வை ஆவணப்பட தயாரிப்பாளர் சி. கோபாலன் வழங்கியிருந்தார். அவரும் அரங்கிற்கு சமுகமளிக்கவில்லை. அவரின் ஆய்வுக்கட்டுரையும் அரங்கிலே வழங்கப்பட்டது.

ஆய்வுகள் முடியும்போது பார்வையாளர்கள் மத்தியில் கேள்விக்கான நேரம் ஒதுக்கப்பட்டது. அப்போது மாணவர்கள், புத்திஜீவிகளின் கேள்விகளுக்கு அங்கே பதில்களும்வழங்கப்பட்டன. இவ்வாறு வடமாகாண பண்பாட்டு, திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆய்வரங்கம் சிறப்பாக நிறைவுபெற்றது.

மாலை நிகழ்வுகள் வவுனியா இறம்பைகுளம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றன. முதல்நாள் மாலை நேர நிகழ்வுக்கு இந்திய பிரதித்துணைத்தூதர் தட்சணாமூர்த்தி பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உசா சுபலிங்கம் தலைமை தாங்கியிருந்தார். பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகிய முதல்நாள் மாலை நேர நிகழ்வில் வட மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் பல்வேறு கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டிருந்தன. தமிழர் பண்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் மீனவ நடனம், காலிங்க நடனம், இசைச் சங்கமம், அரிவு வெட்டுதல், குறவன் குறத்தி நடனம், கூத்துவழி நடனம், முஸ்லிம் மாணவர்களுடைய றபான் நடனம், சிங்கள மாணவர்களுடைய கண்டிய நடனம் என்பன அரங்கேற்றப்பட்டிருந்தன. ஆரம்ப நிகழ்வில் அரங்கை நிறைத்திருந்தனர் பார்வையாளர்கள். ஆனால் சில மணித்தியாலங்களின் பின்னர் அரங்கில் 20 வீதமான பார்வையாளர்களே அமர்ந்திருந்தனர்.

அதுமட்டுமல்லாது கலை நிகழ்வுகளில் பங்கு கொண்ட மாணவர்கள் அவர்களது நிகழ்வு முடிவடைந்தவுடன் ஏனைய நிகழ்வுகளை கண்டுகளிக்காது சென்றதை அவதானிக்க முடிந்தது.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகளும் வெகு சிறப்பாக இடம்பெற்றன. நிகழ்வின் ஆரம்பமாக பண்பாட்டு ஊர்திப்பவனி இடம்பெற்றது. வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகி யாழ் . வீதியில் பயணித்து மணிக் கூட்டுக் கோபுர சந்தியூடாக கந்தசாமி கோயில் வீதிக்குத் திரும்பி நிகழ்வு இடம்பெற்ற இடமான வவுனியா இறம்பைகுளம் மகா வித்தியாலயத்தைச் சென்றடைந்தது. பண்பாட்டு ஊர்தியில் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பல்வேறு ஊர்திகள் அணிவகுத்து வர, கோலாட்டம், காவடிகள், பொம்மலாட்டம், கண்டிய நடனம், காவடியாட்டம், போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்தப் பண்பாட்டு ஊர்தி கந்தசாமி கோயிலை நெருங்க மழை சற்றுத் தலை காட்டினாலும் பேரணி குழப்பமின்றி வெகுசிறப்பாக இடம்பெற்றது.

அதன்பின் மேடை நிகழ்வுகள் வடமாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமாகின. நிகழ்வில் தமிழ்த் தாய்க்கான மாலையை வட மாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் அணிவித்தார். தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. விருந்தினர்கள் அதனை ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் உசா சுபலிங்கம் நிகழ்த்தினார்

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரனை அழைத்திருந்தபோதும் மிகுந்த வேலைப்பழு காரணமாக நிகழ்வுக்கு அவர் வருகை தரவில்லை. இதனை அடுத்து வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா அழைக்கப்பட்டார். சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான தியாகராஜா லிங்கநாதன், இந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். முதலமைச்சர் விருதுகளும் வழங்கப்பட்டன. இந்த விருதுகளை வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் வழங்கினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் அரங்கிலே மிகக் கோலாகலமாக இடம்பெற்றன. அந்த வகையில் கிராமியக் கலைகளின் சங்கமம், ஒயிலாட்டம், வாத்திய சங்கமம், பூதத்தம்பி இசைநாடகம் போன்றன அரங்கேற்றப்பட்டன.

> “தமிழர் பண்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் மீனவ நடனம், காலிங்க நடனம், இசைச்சங்கமம், அரிவு வெட்டுதல், குறவன் குறத்தி நடனம், கூத்துவழி நடனம், முஸ்லிம் மாணவர்களுடைய றபான் நடனம், சிங்கள மாணவர்களுடைய கண்டிய நடனம் என்பன அரங்கேற்றப்பட்டிருந்தன.”

# இலங்கைத் தமிழ்க் கலை இலக்கியத் துறைகளில்

## ஓவியத்தின் நிலைமாற்றத்துக்கான நகர்வுகள்

சுதர்ஷினி விக்னமோகன்

ஓவியம் என்பது மேற்பரப்பின்மேல் வர்ணங்களால் கட்டியெழுப்பப்படும் படிமம் ஆகும். படைப்பாளியின் சமூக அனுபவங்கள். அவனது கருத்துநிலை என்பன உணர்வு பூர்வமான காண்பியக்கலை மூலங்களால் (ரேகை, வர்ணம், ஒளி, வெளி, திணிவு, சம நிலை......) கட்டியெழுப்பப்படுவது ஓவியமாகும். தமிழர் பண்பாட்டு வரலாற்றில் தமது வாழ்வனுபவங்களைப் பதிவு செய்யும் முக்கிய கலைவடிவமாக இது இருந்து வந்துள்ளது. உலகக் கலை வரலாற்றை நோக்கும்போது கலை வடிவங்களில் நிலைமாற்றம் காலத்துக்குக் காலம் நிகழ்ந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம். கலை சமூக உற்பத்தி என்ற வகையில் சமூக கருத்துநிலை, பொருளாதார அரசியல் மாற்றங்கள் கலை வடிவங்களின் நிலைமாற்றத்துக்கு வழிகோலும். நிலைமாற்றம் (Transformation) என்பது உருவம் அல்லது தன்மை மாற்றத்தைக் குறித்து நிற்கின்றது. குறித்த கலை வடிவம் நிலைமாற்றம் பெறுவதற்கான கால நிர்ணயம் அறுதியிட்டுக் கூறப்பட முடியாததாகும்.

இலங்கைத் தமிழர் கலை இலக்கியத்துறைகளில் ஓவியக்கலையின் நிலைமாற்றத்துக்கான நகர்வு என்பது பல்வேறு தளங்களில் வைத்து நோக்கத்தக்கது. பாடசாலைக் கல்வி முறையினூடாக வரும் ஓவியச் செயற்பாடுகள், பல்கலைக்கழக கல்வி முறையினூடாக வரும் ஓவிய நடவடிக்கைகள், முதல்தலை முறை ஓவியர்களின் ஓவியச் செயற்பாடுகள், இளம் தலைமுறை ஓவியர்களின் ஓவிய முயற்சிகள், இலங்கைக்கு வெளியே இடம் பெயர்ந்து வாழும் கலைஞர்களின் ஆக்கங்கள் மற்றும் கோவில் ஓவியங்கள் எனப் பரந்து விசாலமான பரப்பை உள்ளடக்கியது. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையும் ஒன்றினால் மற்றொன்று செல்வாக்குப் பெறுபவையுமாகும். இந்தக் கட்டுரையின் குவிமையம் 2010களின் பின்னதான யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய ஓவியக்கலை தொடர்பான நடவடிக்கைகள் பற்றியதாய் அமைகின்றது.

ஓவியம், உருவம் (Form)உள்ளடக்கம் (Content) என இரு பிரதான விடயங்களை உள்ளடக்கியது. இலங்கைத் தமிழர் ஓவியத்தின் நகர்வு என்பது இரு நிலைகளில் நோக்கத்தக்கது.

1. ஓவியத்தின் உருவம், உள்ளடக்கம் சார்பான நகர்வுகள் - இது ஓவியக்கலை வடிவத்தின் பாணிமாற்றம் மற்றும் புதிய முயற்சிகள் பற்றியதாய் அமையும்.
2. ஓவியம் பற்றி முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் நகர்வு பற்றியது - இது ஓவியக்கலையின் வளர்ச்சி மற்றும் மாற்றத்துக்கு பின்னூட்டியாக செயற்படுவதும் மாற்றத்தை அல்லது நகர்வைத் தீர்மானிப்பதுமாகும்.

இலங்கைத் தமிழர் ஓவியத்தில் உருவ உள்ளடக்கம் சார்பான நகர்வுநிலை பற்றி நோக்கும்போது இதில் கலைஞனது வாழ்வனுபவம் கல்வி மற்றும் கருத்துநிலை போன்ற பல விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

90களில் இலங்கை ஓவியக்கலையின் போக்கில் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களை பின்வருமாறு கலாநிதி ஜகத் வீரசிங்க இனம் காண்கின்றார்.

1. போர் மற்றும் அரசியல் நிலைவரங்களினால் எதிர்பார்ப்புக்கள் முறிந்த நிர்க்கதியான சமூகத்தில் இருத்தல்.
2. பால்நிலை அன்பு துவேஷம் போன்ற சிக்கலான மனித மனநிலை பற்றிய சுய விசாரணைகள்.
3. நுகர்வோர் சமூகம் மற்றும் உலகமயமாதல்.

90 களின் போக்கின் நீட்சிநிலையை 2010 களின் பின்னரான படைப்புக்களில் இனம் காண முடிகிறது. 2010களின் பின்னரான இலங்கைத் தமிழ் ஓவியர்களின் படைப்புக்களில் போர் ஏற்படுத்திய அனுபவங்கள் மற்றும் மனித மனநிலைகளின் சுயவிசாரணைகள் என்பன முக்கிய பேசுபொருளாய் அமைகின்றன.

பாணி மற்றும் கருத்தாடல் ரீதியான நகர்வில் ஓவியத்தில் புதிய அணுகுமுறைகள், புதிய உத்திநுட்பங்கள் என்பவற்றை இனங்காண முடிகின்றது. இலங்கைத் தமிழ் ஓவியர்களில் சர்வதேச ரீதியில் அறியப்பட்ட கலைஞர் ஓவியர் சனாதனன். இவரது படைப்பாக்க முயற்சிகள் இலங்கைத் தமிழர் ஓவியக் கலையை சர்வதேச தரத்துக்கு நகர்த்துவதாக உள்ளது. இவரது படைப்புக்களில் (The Incomplet Thambu) எனப்படும் கலைச் செயற்றிட்டம் (Art project) சர்வதேச தரத்தில் பேசப்படுவதாகவும் ஆய்வுக்குரியதொன்றாகவும் உள்ளது.

இலங்கைப் போரினால் 1983 தொடக்கம் 2009 வரையான இடப்பெயர்வு என்பதையே இது விடயப்பொருளாகக் கொண்டுள்ளது. இந்தச் செயற்றிட்டமானது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்களின் கதைகளையும், இவர்கள் வீடுபற்றி வைத்திருக்கும் எண்ணத்தையும் வெளிப்படுத்துகின்றது. இதில் இடம்பெயர்ந்தவர்களைச் சந்தித்து கலந்துரையாடி அவர்களின் வீடுகளின் நிலைவரைப்படமும் அவர்களின் வீடுபற்றிய எண்ணங்களும் ஓவியமாக வரையப்பட்டுள்ளன. இடப்பெயர்வு என்ற விடயம் தொடர் ஓவியமாக வரையப்பபட்டுள்ளது. இன முரண்பாட்டின் காரணமாக 30 வருடங்களுக்கு மேலாக சொந்த வீட்டைப் பிரிந்து வாழும் மக்களது கதை பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஓவியம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் நகர்வு பற்றி நோக்குமிடத்து, இது பல்வேறு தளங்களில் விரிவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழர்களைப் பொறுத்தவரையில் ஓவியக்கலையின் மீதான அக்கறை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமை இதுநாள்வரை சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. இந்த நிலை மாற்றம்பெற்று வருதலை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஓவியம் ஒரு கற்கை நெறியாக அறிமுகப்படுத்தப்பட்டு அண்மைக்காலங்களில் ஆக்கத்திறன் மிக்க மாணவர்கள் வெளிவருதல். இலங்கை காண்பியல் கலைக்கான ஆவணக்காப்பகம் (Srilanka Archive of Contemporary Art, Architecture and Design) யாழ்ப்பாணத்தில் 25 தை 2014 இல் நிறுவப்பட்டு இங்கு காண்பியக்கலை தொடர்பான ஆவணப்படுத்தல்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பன நிகழ்த்தப்படல். அத்துடன் காண்பியக் கலை தொடர்பான வாசிப்புக்களுக்கான களமாகவும் இது அமைந்திருத்தல். திருமறைக் கலாமன்றத்தினரால் ஓவியகாண்பியக்கூடம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக நிறுவப்பட்டு அதில் ஓவியங்கள் நிரந்தர காட்சிப் பொருளாக்கப்பட்டிருத்தல் என்பன முக்கியமான நகர்வு நிலைகளாகும். குறித்த ஒரு கலைவடிவத்தின் காண்பியல் பரீட்சயம் அக் கலைவடிவம் தொடர்பான உசாவல் என்பன அந்தக் கலைவடிவத்தின் செழுமையான நிலைபேற்றுக்கும் வளர்ச்சிக்கும் வழி சமைக்கின்றன. இந்த வகையில் மேற்குறித்த முயற்சிகள் ஓவியக்கலையின் வளர்ச்சிக்கும் நிலைமாற்றத்துக்கும் வித்திடுவதாகும்.

ஓவியக்காட்சிகள் ஓவியத்தின் போக்குகளையும் மாற்றங்களையும் இனம்காட்டும் குறிகாட்டிகள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையினரால் 2010 களின் பின்பு நடத்தப்பட்ட மூன்று ஓவியக்காட்சிகள் முதன்மையானவை. 'முகிழ்' எனத் தலைப்பிடப்பட்ட சித்திரமும் வடிவமைப்பும் துறையினரின் நான்காம் வருட மாணவர்களின் காட்சி இலங்கைத் தமிழ் இளம் ஓவியர்களில் முகிழ்விடும் காத்திரமான கலைஞர்களை இனம் காட்டியது. இதே போன்று 2013 இல் மூன்றாம் வருட மாணவர்களின் ஓவியங்களின் காட்சியும் காத்திரம் மிக்க கலைஞர்களை வெளிக்காட்டியது. சித்திரமும் வடிவமைப்பும் துறையில் ஓவியம் ஒரு பட்டப்படிப்பாக அறிமுகப்படுத்தப்பட்டு இன்று காத்திரமான கலைஞர்கள் வெளிவரத் தொடங்கியுள்ளனர். இங்கு மாணவர்கள் ஓவியம் தொடர்பான தொழில்சார் பயிற்சியை (Academic training) பெறும் அதேவேளை உலக மற்றும் இலங்கைக் கலை வரலாற்று அறிவும் இவர்களுக்குக் கிடைக்கின்றது. இதன்மூலம் ஆளுமை மிக்க புதிய கலை மொழியை உருவாக்குவதற்கான தளம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது.

இம் மாணவர்களால் அண்மைக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட ஓவியக்காட்சிகள் இலங்கைத் தமிழர் ஓவியத்தை சர்வதேசதரம் நோக்கி நகர்த்தும் செயற்பாடாக அமைந்தமையைக் காணமுடிந்தது. அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் இவர்கள் வெற்றியீட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இந்தத் துறையில் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் தமிழ் மாணவர்கள் வருவதால் இலங்கையில் பொதுமையான காண்பியக்கலைப் போக்கை வடிவமைக்கும் களமாகவும் இது உள்ளது.

திருமறைக் கலாமன்றத்தினால் 2013 டிசெம்பர் 1ஆம் திகதி நிரந்தர ஓவியக்கூடம் கலைத்தூது கலாமுற்றத்தில் நிறுவப்பட்டு அங்கு மூத்த மற்றும் இளம் ஓவியர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஓவியர்கள் மார்க், கனகசபை, ராசரத்தினம், ஆசை ராசையா, ரமணி கைலாசநாதன் போன்ற மூத்த கலைஞர்களின் ஓவியங்களும் இளம் ஓவியர்களின் ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2010 களின் பின் மூத்த தமிழ் ஓவியர்கள் பலரின் ஆக்கங்கள் வெளிவராமை மனவருத்தத்துக்குரியதாகும். இங்கு ஓவியக் கலைவட்டம் திருமதி பப்சி மரியதாசன் தலைமையில் செயற்பட்டு வருகிறது. மாதாந்தக் கருத்தரங்குகள், கலைச்சுற்றுலா என்பன இதன்மூலம் ஏற்பாடுசெய்யப்பட்டு வருகின்றன. 2013 இல் சிறுவர் சித்திரக்காட்சி கலைக்கோட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முற்றவெளிக்கோடுகள் என்ற தலைப்பில் ஓவியக்காட்சியும் நிகழ்த்தப்பட்டது. 30.03.2014 இல் ஓவியர் மாற்குவின் ஓவியங்களின் காட்சியும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த திருமறைக்கலாமன்றத்தின் முயற்சிகள் இலங்கைத் தமிழ் ஓவியக்கலையின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் வித்திடும் செயற்பாடுகளாகும்.

பாடசாலை மட்டத்திலான ஓவியச் செயற்பாடுகள் 2010 இன் பின் வலுப்பெற்றுள்ளன. சித்திரபாடம் கற்கும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சித்திரமும் வடிவமைப்பும் துறை மற்றும் மட்டக்களப்பு விபுலானந்தாக் கல்லூரி கல்வியியல்கல்லூரிகள் போன்றவற்றில் சித்திர பாடத்துக்கான புகுமுக வாய்ப்புக்கள் இருப்பதன் காரணமாக பாடசாலை ஓவியக் கல்வியில் கூடிய கவனமெடுப்புக்கள் காணப்படுகின்றன.

தொகுத்து நோக்குமிடத்து இலங்கைத் தமிழர் கலை இலக்கியத்துறைகளில் ஓவியக்கலையின் நிரைமாற்றத்துக்கான நகர்வுக்கான அடிப்படை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நிலைமாற்றம் என்பது தொடர்ச்சியான கலைப் பயில்வில் கலைப் பாரம்பரியத்தில் நிகழ்வது. இளம் தலைமுறை ஓவியர்களுடைய பாணி மற்றும் வெளிப்பாட்டு முறையில் புதியநகர்வுக்கான எத்தனங்களை இனங்காண முடிகின்றது.

(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)

---

## பயத்தை எதிர்கொள்வோம்

மனிதர்கள் அனைவரும் ஒரு விடயத்துக்கு பயம் கொள்வோம். சிறு வயதில் இந்த உணர்வு அதிகமாய் இருக்கும். நாளடைவில் வாழ்க்கை அனுபவங்கள இந்த உணர்விலிருந்து எம்மை வெளிக்கொண்டு வந்து விடும். பயத்தைப் போக்கிப் பயப்படாமல் இருப்போம்

பயம் என்பது ஒரு கற்பனை தான். அது நிஜம் அல்ல. இந்தக் கற்பனா சக்தி அதிகமாய் உள்ளபோது மனிதனுக்குள் பல விதமான இரசாயன மாற்றங்கள் ஏற்படும். பொதுவாக ஒரு மனிதன் பயப்படும் போது இதயம் வேகமாகத் துடிக்கும். உள்ளங்கையில் வியர்க்கும். படபடப்பு அதிகரிக்கும். இவைப் பயத்தின் அறிகுறிகள். இந்தப் பயத்தை வெல்வது எப்படி?

**முதலில் இந்தப் பயம் கொடுக்கும் உணர்வுகளை எம்மிடமிருந்து தள்ளி வைப்போம். உடல் அமைதி பெற்றால் உணர்வுகள் சம நிலைக்கு வந்து விடும்.**

இரண்டாவதாக, செய்ய வேண்டியது இறுதியாக என்ன நடந்து விடப் போகின்றது ? என எம்மை நாமே கேட்டுக் கொண்டால் விடை தெரிந்து விடும். வாழ்க்கையில் நல்லதும் கெட்டதும் கண்டிப்பாய் மாறி மாறி வந்து தான் செல்ல வேண்டும் . அதனால் மனம் ஓரளவு தயாராய் விடும்.

மூன்றாவதாக யாருமே ஒழுங்கு இல்லை.



எல்லாவற்றிலும் ஒழுங்கு எதிர்பார்க்கப்படும் போது ஒரு பயம் வரும். நாம் செய்வது சரியா இல்லை தவறா என ஐயப்படாது எம்மால் முடிந்த அளவு தெளிவாய் எந்த வேலையையும் செய்தால் ஒரு தெளிவும் தன்னம்பிக்கையும் ஏற்படும். இது பயத்தைக் களைந்து விடும்.

நான்காவதாக பயத்தை எதிர்கொள்ள வேண்டும். பயத்தை எதிர்கொள்ளக் கொள்ள பயம் எம்மை விட்டு விலகி விடும்.

அடுத்து பய உணர்வை நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டால் அந்த உணர்வின் வீரியம் குறைந்து விடும்

**இறுதியாக எமது ஒவ்வொரு சிறிய சிறிய சாதனைகளுக்கும். எம்மை நாமே பாராட்டிக் கொள்ள வேண்டும். இது தன்னம்பிக்கையை வளர்த்து இந்த கற்பனையான பயத்திலிருந்து எம்மை விலக்கி நிஜமான வாழ்க்கையை எளிதாய் எதிர்கொள்ள எம்மைத் தயார்ப்படுத்தி விடும்.**

தே.தேவானந்த்

# நாடகத்துறை வளர்ச்சிக்கு அரச நிதி உதவி அவசியம்

இலங்கைத் தமிழ் நவீன அரங்க வரலாற்றை 1900களிலிருந்து இனங்காண முடியும். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதான இரண்டு முக்கிய அரங்க வடிவங்களை இதில் முக்கியமாகக் குறிப்பிட முடியும். ஒன்று பம்பல் சம்பந்த முதலியார் வழி வந்து கலையரசு சொர்ணலிங்கம் வழியாக வேரூன்றிய மேடை நாடக வடிவம். மற்றையது சங்கரதாஸ் சுவாமிகள் வழியாக வைரமுத்து வழியாக வேரூன்றிய இசை நாடகமென்று அழைக்கப்படுகின்ற நாடக வடிவம். இவை இரண்டும் இன்றும் ஈழத் தமிழர்களின் பாரம்பரிய அரங்க வடிவங்களாக இனங்காணப்படுகின்ற அளவுக்கு ஈழத்தமிழர்கள் மத்தியில் வேரூன்றியிருக்கின்றன.

இந்த இரண்டு வடிவங்கள் தவிர்ந்து பல்வேறு நாடக முயற்சிகள் ஊடாக பல்வேறு நாடக வடிவங்கள் தோன்றி ஆங்காங்கே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் ஒரு வகையில் அமெச்சூர் நாடக வடிவங்களாகவே நிலைபெற்றிருக்கின்றன. இதில் சங்கரதாஸ் சுவாமிகள் வழிவந்த இசை நாடகம் தொழில் முறையாக நிகழ்த்தப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. அரிச்சந்திர மயான காண்டம் ஆயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டதான குறிப்புக்கள் கிடைக்கின்றன.

நாடக ஆற்றுகைகளை அல்லது குழுக்களை நாம் இரண்டு பிரதான வகைகளாகப் பிரிக்க முடியும். ஒன்று தொழில் முறைசார்ந்த நாடகக் குழுக்கள். அதாவது நாடக மேடையேற்றங்களுடாக தமது வாழ்க்கைச் செலவுக்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளும் குழு. அதாவது தமது முழுநேரத் தொழிலாக சிலர் நாடகத் தைக் கொண்டிருப்பர். அடுத்தது அமெச்சூர் நாடகக் குழுக்கள். தமது முழு நேரத் தொழி லாக வேறொன்றையும், தமது விருப்பத்துக் குரிய துறையாக நாடகத்தையும் கொண்டு தமக்கு வசதிப்படுகின்றபோது நாடகங் களைத் தயாரித்து மேடையேற்றும் குழுக்கள்.

ஒரு துறையை முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக்கின்றபோதுதான், அந்தத்துறை வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது. அதுவும் தமது தனியாற்றலால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுத்தால் மட்டும் தான் தமக்கான வருமானம் அதிகரிப்பதும் தொடர்ச்சியாக வருமானம் கிடைப்பதும் சாத்தியம் எனும் போதுதான் தமது படைப்புக்களின் தரத்தை உயர்த்தவும் பேணவும் முயற்சிப்பர். அவற்றில் புதுமைகளைப் புகுத்தி பார்வையாளரைக் கவர்ந்து தம்வசம் வைத்திருக்க முடியும். இந்த தொழில் முறைத்தத்துவம் நாடகத்துறைக்கும் பொருந்தும். வி.வி.வைரமுத்து ஈழத்து தமிழ் அரங்கில் ஓரளவுக்கு தொழில் முறையாக இயங்கியவர் என்று சொல்லலாம். அதனால் தான் அவர் வழி இசை நாடக அரங்கு வளர்ச்சியடைந்தது; புதுமை பெற்றது என்றும் சொல்ல முடியும். அதன் விளை பயன் இன்று வரை அந்த அரங்கு கோயில்கள் மற்றும் விழாக்களில் தொழில் முறைப்பண்போடு ஆங்காங்கே மேடையேற்றப்படுவதன் மூலம் புலப்படும்.

இதற்கு மாறாக பல்கலைக்கழக புலமையாளர்கள் வழியாக உருவாகிய அரங்கப் போக்கு தொழில் முறைசாராத பகுதிநேர அல்லது அமெச்சூர் அரங்கப் போக்காகக் காணப்பட்டு மறைந்து போயிருக்கின்றது.

இங்கு கல்விப் புலம் சார்ந்து இயங்கியதன் காரணமாக சமூகப் பணியாக சமூகப் பிரச்சினைகளை அல்லது அரசியல் சார்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பரீட்சார்த்த முயற்சிகள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஒரு நாடகத் தயாரிப்பு நீண்ட முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்டாலும், அது ஓரிரு மேடையேற்றங்களோடு முடிவடைந்திருக்கின்றது. அது ஒரு தொழிலாக விரிவடைந்ததில்லை.

இந்தப் பின்னணியில் விடுதலைக்கான அணி திரட்டலுக்கான கருவியாக நாடகத்தைப் பயன்படுத்தும் முயற்சி எண்பதுகளில் ஆரம்பமாகின்றது. இது மேலும் விரிவடைந்து போராட்டத்துக்கான அணி திரட்டலுக்கான முக்கியமான கருவியாகவும் வெறுமனே பரப்புரைக்கான பண்டமாகவும் கூட



பயன்படுத்தப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் நாடகம் தன்னை வளப்படுத்துவதற்குப் பதிலாக ஒருவகை மாதிரி 'stereo type' பண்புகளுக்குள் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டது.

இந்த எல்லாக் காலகட்டங்களிலும் நாடகம் மகிழ்வளிப்புக்கான ஒன்றாக அல்லாமல் சமூகப் பிரச்சினை சார்ந்து இயங்குகின்ற சமூகச் சீர்திருத்தத்துக்கான கருவியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது அல்லது பார்க்கப்பட்டிருக்கின்றது. இது தவிர்ந்து கல்விப் புலம் சார்ந்த நடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

இந்தக் காலகட்டத்தில் போராட்டப் பணிக்காக நாடகம் செய்பவர்கள் முழுநேர நடிகர்களாக வேலைக்கு அமர்த்தப்பட்டு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்ததையும் காணமுடிகிறது. சிறு குழுவாக போராட்டத்துக்கான ஆளணியை திரட்டிக் கொள்வதற்காக தொழில்முறை சார்ந்த செயற்பாடு நடைபெற்றிருக்கிறது.

நாடக அரங்கக் கல்லூரி 1991ஆம் ஆண்டு கலை பண்பாட்டுக் கழகத்துடன் இணைந்து தயாரித்த உயிர்த்த மனிதர் கூத்து நாடகத்தில் நடித்தவர்களுக்கு ஓர் ஆற்றுகைக்கு ரூபா 50 வீதம் கொடுப்பனவைக் கொடுத்து தொழில்முறை சார்ந்து நாடகத்தை கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் வெறும் 21 தடவைகள் மேடையேற்றப்பட்டதோடு அது நிறைவுக்கு வந்தது. பின்னர் நாடகத்தில் பணியாற்றுபவர்கள் தொண்டு அடிப்படையில் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

நாடகம் என்பது பொதுப்பணிக்குரியது. அதனைத் தொண்டு அடிப்படையிலேயே செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. அந்தக் காலத்தில் வெளிவந்த சஞ்சிகைகள் பத்திரிகைக் கட்டுரைகளில் தொழில்முறையாக நாடகம் செய்பவர்கள் நகைப்புக்கிடமாகக் குறிப்பிடப்பட்டார்கள். 'தமது மனைவியின் தாலியை அடைவு வைத்து நாடகம் செய்தவர்கள்' உயர்ந்தவர்கள் என்று சிலாகிக்கப்பட்டார்கள்.

பல சந்தர்ப்பங்களில் நாடகங்கள் கட்டணத்துக்காக மேடையேற்றப்பட்டாலும், அது நாடகத் தயாரிப்புச் செலவைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது ஏதாவதொரு பொது பணிக்கான நிதி திரட்டலுக்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அங்கு நடிக்கின்ற நடிகர்களுக்கான ஊக்கத்தொகையோ அல்லது நடிகரின் உழைப்புக்கான ஊதியமோ எப்போதும் வழங்கப்பட்டதில்லை. நடிகரின் உழைப்பு தொண்டு அடிப்படையிலேயே வேண்டப்பட்டது. இதன் காரணமாக நாடகத்துறை தனது வாழ்க்கைக்கான உழைப்பையும் மீறி பணியாற்ற ஆளணி இல்லாது போனது எனலாம்.

இதன் பின்னர் இரண்டாயிரமாம் ஆண்டில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் நாடகங்களை மேடையேற்றும் பணி ஆரம்பமாகியது. இங்கும் ஒரு சமூக சேவை கருதியதான பரப்புரைப் பணிக்காகவே நாடகம் பயன்படுத்தப்பட்டது. மிதிவெடி விழிப்புணர்வும், எயிட்ஸ் விழிப்புணர்வு, பெண்களுக்கெதிரான வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு என்று பணத்துக்கான சமூக நோக்கம் கருதி நாடகம் தயாரித்து மேடையேற்றப்படுவதாக நாடகம் மாற்றம் பெற்றது. இங்கும் நடிகன் தொண்டு அடிப்படையில் பணியாற்றவேண்டும் என்றே எதிர்பார்க்கப்பட்டான். இருந்தாலும் சில குழுக்களுக்கு யுனிசெப், யு.என்.டி.பி. போன்ற நிறுவனங்கள் ஓர் ஆற்றுகைக்கு நடிகருக்கான கொடுப்பனவை வழங்க முன்வந்தன. இது ஓர் ஊக்கமாக அமைந்தாலும் போராட்ட காலகட்டத்தில் காணப்பட்ட நிலைமைக்கு ஒப்பானதாகவே காணப்பட்டது எனலாம். இங்கு நாடகத்துறை வளர்ச்சி என்பதற்குப் பதிலாக நாடகம் வெவ்வேறு தேவைகளுக்காக தனது 'மகிழ்வளித்தல்' பண்பை தவிர்த்துப் பயன்படுத்தப்பட்டது என்று கூறலாம்.

இந்தக் காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை சார்ந்தவர்கள் தமது கட்டுரைகளிலும், பேச்சுக்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் பணம் வாங்கி நாடகம் செய்தவர்களை "என். ஜி.ஓ.வுக்கு நாடகம் செய்பவர்கள்" என்று எள்ளி நகையாடினர். இதில் என்.ஜி.ஓ. விற்கு நாடகம் செய்வதால் நாடகம் தன்நிலை இழந்துவிடும் என்று நியாயம் சொல்லப்பட்டது. இந்த விமர்சனங்கள் தொழில்முறைசார்ந்த நாடக வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாகப் பார்க்கப்பட வேண்டியவைகளே.

இதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் சுனாமி அழிவிலிருந்தான மீள் கட்டுமானப் பணிகளுக்காக பெருந்தொகையான பணம் கிடைக்கப்பெற்றது. இதன் போது நாடகங்களை பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டார்கள். அதற்காக நடிகர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. பலர் இதற்காக அவசர அவசரமாக பயிற்றுவிக்கப்பட்டு நாடகங்களில் நடிக்க வைக்கப்பட்டார்கள். திடீரென அதிகளவான கொடுப்பனவுடன் முழுநேர நடிகர்கள் பலர் பணியாற்றினார்கள்.

செயல்திறன் அரங்க இயக்கம் எனும் நிறுவனத்தில் இவ்வாறான வேலைகளுக்காக 2005-2006 வரையில் 45பேர் முழுநேர நடிகர்களாக பணியாற்றினார்கள். அவர்களுக்கு மாதாந்தம் ரூபா 10000-12000 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களின் மன அழுத்தத்தை ஆற்றுப்படுத்துவதற்கான அரங்க வடிவமொன்றை இந்த நடிகர்கள் கண்டு பிடித்ததோடு அதில் சிறப்பு தேர்ச்சியும் பெற்றார்கள். இதே போன்று தெருவெளி அரங்கிலும், சிறுவர் அரங்கிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்கள்.

ஆனால் நிதிக்கொடை நிறுவனங்களின் நிதிகள் நிறுத்தப்பட்டபோது இந்தப் பயிற்றப்பட்ட தொழில்சார் நடிகர்கள் குலைந்து போனார்கள். அவர்களில் ஐந்து பேர் மட்டுமே முழுநேரமாக அரங்கில் பணியாற்றினார்கள். இருப்பினும் வாழ்வாதாரத்துக்கு தேவையான பணத்தை அவர்களால் அதிலிருந்து பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக நான்கு பேர் தமது முழு நேரப் பணியாக வேறு தொழில்களைத் தேடிச் சென்று விட்டார்கள். ஒருவர் சவூதி அரேபியாவுக்கும் மற்றவர்களில் இருவர் என்.ஜி.ஓ. வேலைக்கும் சென்று விட மற்றவர் சுயதொழில் ஒன்றை மேற்கொள்கின்றார். ஒருவர் மட்டும் தொடர்ச்சியாக முழுநேரமாக அரங்கப் பணியில் ஈடுபடுகின்றார். அவரும் நடிகராக தன்னை நிலைநிறுத்திக்கொள்ளாமல் பயிற்றுநர், நாடக இசை வழங்குநர், ஒப்பனையாளர் என்று பல்வேறு பணிகளையும் மேற்கொள்கின்றார். இவரும் தொடர்ச்சியாக நாடகத்தை முழுநேரப் பணியாக கொண்டு நிலைத்திருக்க முடியாது என்றே குறிப்பிடுகின்றார்.

ஆக, நாடகத்துறை வளர்ச்சியடைய வேண்டும் என்றால், அது தொழில்சார்ந்து வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு அரச உதவிகள் மிக அவசியமாகின்றன. இதற்கு தமிழ் நாட்டை உதாரணமாகக் காட்ட முடியும். கூத்துப் பட்டறை என்று ஓர் அமைப்பு அங்கு காணப்படுகின்றது. அதனை ந.முத்துசாமி என்பவர் கடந்த முப்பது ஆண்டுகளாக நடத்திவருகின்றார். அவர்கள் தொடர்ச்சியாக நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுகிறார்கள். அதில் நடிகர்களாக இருந்த பலர் சினிமா நடிகர்களாகியிருக்கிறார்கள். இங்கு ஒரு சிறிய குழு நடிகர்களுக்கும், பயிற்றுவிப்பாளருக்கும் மாதாந்த கொடுப்பனவாக அரச நிதி கிடைக்கிறது. அதனால் தொடர்ச்சியாக அவர்களால் இயங்க முடிகிறது. அது போன்று இங்கும் மாகாண அரசோ, மத்திய அரசோ நிதி வழங்க வேண்டும். வருடத்தில் ஒரே ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்காக ஒரு பத்தாயிரம் ரூபா வழங்குவதால் நாடகத்துறையை வளர்ப்பதென்பது சாத்தியமற்றது என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

அடுத்து நாடகத்துறை மகிழ்வளிப்புக்குரியதாக அமைவதும் பார்ப்பவர்கள் மனம் மகிழ்ந்து செல்வதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கப்படவேண்டும். சினிமா அதனைக் கொடுப்பதனால்தான் மக்கள் பணம் கொடுத்து அதனைப் பார்க்கிறார்கள். ஆகவே ஈழத்தின் நாடக அரங்கு entertainmentக்கு உரியதாகவும் மாற்றிமைக்கப்படவேண்டும்.

நாடகத்தைத் தொழில் முறையாக்குவதற்கு பிரதேச கலாசாரப் பேரவைகள், நாடகங்களுக்கான உரிய கட்டணங்களைக் கொடுத்து அவற்றை மேடையேற்றுவதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். இன்று எல்லாவற்றுக்கும் ஒரு பெறுமதியுள்ளது. அது நாடகங்களுக்கும் பொருந்தும். குறைந்த கட்டணங்களைக் கொடுத்து நடிகர்களைத் தொண்டு அடிப்படையில் நடித்துத்தருமாறு கேட்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அரசு என்ற பெரிய நிறுவனத்தினால்தான், இதனைச் சாத்தியமாக்க முடியும்.

ஆக, நாடகத்துறை, எதிர்காலத்தில் மகிழ்வளிப்பு பெறுமானத்தைப் பெற்று தொழில் முறையாக விருத்தியாக வேண்டும். அதற்கு அரச ஆதரவு கிடைக்கப்பெறவேண்டும். அப்போதுதான் நாடகத்துறை ஆழ அகலங்களோடு சிறப்புப் பெற முடியும்.

*(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)*

# நாம் ஏன் வாழ்க்கையில் எதையுமே விட்டுக் கொடுக்கக்கூடாது?

## இதோ 5 காரணங்கள்

எப்போதுமே நாம் விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் எமது வாழ்க்கை சிறக்கும். விட்டுக் கொடுப்பதனால் அடுத்தவர்களுடன், ஏன், வீட்டில் இருப்பவர்களுடன் கூட சண்டை சச்சரவு ஏதும் இருக்காது. விட்டுக்கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை. இப்படியெல்லாம் விட்டுக் கொடுத்து வாழ்வதைப்பற்றி அதிகமானோர் அதிகம் சொல்வார்கள். ஆனால், பல சமயங்களில் விட்டுக் கொடுத்தால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்;
வாழ்க்கையில் பலமான அடியும் ஏற்படும்; தொல்லையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்ட கதையாகிவிடும்; வாழ்க்கையே தோல்வி அடைந்துவிடும். இந்தத் தோல்விகளை வெற்றியின் படிக்கட்டுகளாக்கி சாதனை புரிந்தவர்களும் இந்த மண்ணில் இருந்துள்ளனர். மனதைக் குழப்பும் நேரத்தைப் பற்றிய தத்துவ ரீதியான மர்மங்கள் இவை.
நாம் ஏன் வாழ்க்கையில் எதையுமே விட்டுக் கொடுக்கக்கூடாது? இதோ 5 காரணங்கள்!

*** வெற்றியும், தோல்வியும் வீரனுக்கு சகஜம் என்று கூறப்பட்டாலும், நாம் வாழ்க்கையில் எதையும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கவே கூடாது என்பதற்கான சில காரணங்களும் உள்ளன. அவைபற்றி தற்போது கொஞ்சம் அலசலாமா?

*** உண்மையான வெற்றியை ருசிக்க முடியாது. சில விடயங்களை நாம் விட்டுக் கொடுக்கும் போது, எமக்குக் கிடைக்கும் உண்மையான வெற்றியை ருசிக்க முடியாது. அந்த உண்மையான வெற்றியை ருசிக்க வேண்டுமென்றால், சில போராட்டங்களை விட்டுக்கொடுக்காமல் சந்தித்து தான் ஆகவேண்டும். இதில் சில தோல்விகளைச் சந்தித்தாலும், வெற்றிக்கனியைக் கண்டிப்பாய் நாம் ருசிப்போம். எமது உண்மையான திறமை தெரியாமல் போகும் நாம் விட்டுக் கொடுக்கும் போது, எம்முள்ளே அடங்கிக் கிடக்கும் சில திறமையான சங்கதிகள் வெளியே தெரியாமலே போய் விடும்.

*** சில சமயம், அத்தகைய திறமைகள் உங்களுக்கே கூடத் தெரியாமல் போக வாய்ப்புள்ளது. எனவே, நாம் விட்டுக் கொடுக்கவே கூடாது. வல்லவனுக்கு வல்லவன் வாழ்க்கையில் எம்மை விட அடிபட்டவர்கள் நிச்சயம் அதிகமானோர் இருப்பார்கள். அவர்கள் எம்மை விடக் கடுமையர்க உழைத்துக் கொண்டிருக்கலாம். ஓரளவு யோசித்துப் பார்த்தால், அப்படிப்பட்டவர்களிடம் நாம் விட்டுக் கொடுக்க நினைப்பது மிகவும் முட்டாள்தனமாகவும், கொடுமையாகவும் இருக்கும்.

*** வாழ்க்கை அனுபவம் வளரும் சில விடயங்களில் விட்டுக் கொடுக்காமல் நாம் வாழும் வாழ்க்கை எமக்கு ஒரு நல்ல அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்கும். எம்மிடமுள்ள தலைமைப் பண்புக்கும் அது வழிவகுக்கும். இந்த அருமையான அனுபவத்தை நாம் பிறருக்கும் கற்றுக் கொடுத்து, அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற உறுதுணையாக இருக்கலாம்.

*** உலகம் மிதிக்கத் துடிக்கும் நாம் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் போது மிகமிக எச்சரிக்கையாகவும், விழிப்புணர் வுடனும் இருக்க வேண்டும். அந்தச் சமயத்தில் தான் உலகமே தனது கால்களில் எம்மைப் போட்டுப் பந்தாடத் துடிக்கும். அந்த நேரத்தில் நாம் விட்டுக் கொடுத்து விட்டால், கட்டாயம் மிதிபடுவோம். விட்டுக் கொடுக்காமல் இருந்தால், உலகமே எமது கால்களில் கிடக்கும்!



## முறிந்த சிறகும் என் வானமும் கவிதை நூல் வெளியீடு



சிரேஷ்ட ஊடகவியலாளரும், தேசிய சாஹித்திய மண்டல விருது பெற்ற கவிஞருமான ரீ.எல்.ஜவ்பர் கான் எழுதிய 'முறிந்த சிறகும் என் வானமும்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக் கிழமை காத்தான்குடி அல் மனார் அறிவியற் கல்லூரி அர்ராஷித் மண்டபத்தில் இடம்பெற்றது.
தேசிய சாஹித்திய மண்டல விருதுபெற்ற மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார். இதன்போது 'முறிந்த சிறகும் என் வானமும்' கவிதை நூலின் முதற் பிரதி பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வினால் பிரபல தொழிலதி பருமான எம்.செல்வராசாவுக்கு வழங்கப்பட்டதுடன் நூலின் மற்றொரு பிரதி தொழிலதிபர் ஏ.எல்.எம். மீராசாஹிபுக்கு வழங்கப்பட்டது.
மட்டக்களப்பு லயன்ஸ் கழக பிரதிநிதி அ.செல்வேந்திரனால் ரீ.எல்.ஜவ்பர்கானுக்கு பொன்னாடை போர்த் தப்பட்டது. இதில் நூல் நயவுரையை கவிஞர் பாலமுனை பாறூக் நிகழ்த்தியதோடு நூலாசிரியர் அறிமுகத்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர்தீன் நிகழ்த்தினார்.
இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக், கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ். சுபைர், காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் செயலாளர் கவிமணி மௌலவி எம்.எச். எம். புகாரி (பலாஹி), ஸ்ரீலங்கா ஹிறா பவுன் டேஷன் நிறுவனத் தின் செயலாளர் நாயகம் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.மும் தாஸ் (மதனி), காத்தான் குடி சமூக மதிப்பீட்டுக்கான அமைப்பின் தலைவர் இல்மி அஹமட் லெவ்வை, மட்டக் களப்பு மாவட்டத்திலுள்ள அரச திணைக் களங்களின் தலைவர்கள், கல்வியிய லாளர் கள், உலமாக்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (வ-10)

## வெற்றி தோல்வியை நேசிக்கப் பழகுங்கள்

இயற்கையில் இரவும் பகலும் எப்படியோ, அப்படியே மனித வாழ்வில் வெற்றியும் தோல்வியும் சகஜம்தான். இரண்டையும் நேசிக்கப் பழகிக்கொள்வதே நல்ல அனுபவம் என்று கருதப் படுகிறது. வெற்றிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்வது குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், தோல்விகளிலிருந்தும் தவறுகளிலிருந்தும் நாம் அதிகம் கற்றுக்கொள்ள முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்றால் அதனை மறுக்க இயலாது. நாம் வெற்றியையும் தோல்வியையும் ஒன்றுபோல் நினைக்க வேண்டும். அப்போதுதான், இரண்டுமே நம்மையே ஏமாற்றி அருகிலும் வரும், விலகியும் செல்லும். மோசமான தோல்விகளைச் சந்திக்கும் துணிவு கொண்டவர்களால்தான் பெரும் சாதனைகளை நிகழ்த்த முடியும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.
வெற்றி என்னும் மூன்றெழுத்தை விரும்பாதவர்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வெற்றி என்னும் வைரம் எப்போதும் எம்முடன் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புவோம். வெற்றி என்பது தற்செயலாக நிகழ்வதில்லை. இது எமது மனப்பாங்கின் விளைவே ஆகும். எமது மனப்பாங்கே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ஒன்றாகும். வெற்றி என்பது குறிக்கோளை அடைவதே என்று பொருள்படும். குறிக்கோள் இல்லாமல் இருந்தால் நிச்சயமாக வெற்றி என்பதே கிடையாது. குறிக்கோள் இல்லாதவரின் வாழ்க்கை, நடுக்காட்டில் வழி தெரியாமல் தவிக்கும் குருடரின் வாழ்க்கையைப் போன்றது என்கிறார்கள்.

# வெள்ளிப் பனிமலைமீது உலாவரும் சிறுத்தைகள்



பெரிய பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த புலியும் சிறுத்தையும் எமது நாட்டில் வாழ எப்படிப் போராடி வருகின்றனவோ, அதே போல அவை சார்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பனிச்சிறுத்தையும் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளது. வெள்ளிப் பனிமலையின் மீது கம்பீரமாக உலவி வந்த பனிச்சிறுத்தைகள், இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் நடைபெறும் இராணுவ மோதல்கள், ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற போரின் காரணமாக மோசமான நிலையில் உள்ளன. சமவெளிப் பகுதியில் வாழும் சிறுத்தையைப் போலிருந்தாலும், பனி மூடிய மலைச் சிகரங்களில் வாழத் தகவமைத்துக் கொண்டவை பனிச்சிறுத்தைகள்.

### முக்கியத்துவமில்லை

சீனா, நேபாளம், ஆப்கானிஸ்தான், பூட்டான், கஸகஸ்தான், கிர்கிஸ்தான், மங்கோலியா, பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் என இந்தியாவைச் சுற்றியுள்ள 11 நாடுகளிலும் இந்தியாவிலும் இருக்கும் பனிமலைகளில் வாழ்பவை பனிச்சிறுத்தைகள். இமயமலைப் பகுதிகளில் இவை தென்படுகின்றன. உலகம் முழுவதும் 4,000-7,000 வரை இவற்றின் எண்ணிக்கை இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இது 2003 ஆம் ஆண்டின் கணக்கு. அழிந்து வரும் இந்த உயிரினத்தைப் பாதுகாக்க இச்சிறுத்தைகள் வாழும் நாடுகள் போதிய முக்கியத்துவம் தராததால், அவற்றின் எண்ணிக்கை தீர்மானமாக அறிவிக்கப்படவில்லை.

### இரைக்குப் பஞ்சம்

இமயமலைப் பகுதிகளில் இயற்கையாகத் தென்படும் ஆடுகள், மான்கள் போன்றவற்றைப் பனிச்சிறுத்தைகள் இரையாக்கிக் கொள்கின்றன. ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதல்கள், பனிச்சிறுத்தைகள் வாழும் மலைத்தொடர்களில் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான மோதல்கள் போன்ற சம்பவங்களால் பனிச்சிறுத்தைகளின் வாழிடங்கள் மோசமாக அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் அவற்றின் உணவுக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அதனால், மக்கள் வளர்க்கும் கால்நடைகளை இந்தச் சிறுத்தைகள் இரையாக்கிக் கொள்கின்றன. இதைத் தடுக்க, மக்களே இந்தச் சிறுத்தைகளை வேட்டையாடத் தொடங்கிவிட்டனர். அதற்குப் பிறகும், பனிச்சிறுத்தையின் உடல் பாகங்கள் கள்ளச் சந்தைக்கே செல்கின்றன. அதனால் பனிச்சிறுத்தைகளைப் பாதுகாக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போராடி வருகின்றனர்.
'வெள்ளிப் பனிமலை மீதுலாவ' மனிதர்களுக்கு மட்டும்தான் உரிமை இருக்கிறதா என்ன?

*(இணையவன்)*